


# திருக்கோயில்

மார்ச் 1977 ரூ 1



இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் அருள்மிகு பர்வதவர்த்தினி
அம்மன் சந்நிதி பிர்லா மண்டபக் கால்கோள் விழாவிற்குக் காஞ்சி காமகோடி பீடம்
ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் எழுந்தருளல்



மேற்படி பிர்லா மண்டபத்திற்கு ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் அருளாசியுடன்
அறநிலையத்துறை ஆணையர் திரு: எம். கே. பாலசுப்பிரமணியம் ஐ. ஏ. எஸ். அவர்கள்
அடிக்கல் நாட்டுதல் (16-2-77)

COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL RESEARCH
25 ஏப் 1977
EGMORE, MADRAS-8.
RR 94/7.
18

முகப்பு :

சென்னைத் திருமயிலைக் கபாலீச்சுரம் அருள்மிகு சிங்காரவேலர் உற்சவத் திருவுருவம்

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

THIRUKKOIL

மாலை : ~~19~~ 20 | நள ஆண்டு—பங்குனித் திங்கள் மார்ச்சு—1977 | மணி : 6

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

'திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்' களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

''திரு ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை, சென்னை—600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ளகாலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/– உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ.1/- வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரரர்கள், கடிதம் எழுதும்பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவருமல் தெரிவித்து உதவினல்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9-60 ஆகின்றது, ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

வாழ்த்துச் செய்தி
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.

சத்திய ஞானசபை விளக்கம்
—திருமுருக கிருபானந்தவாரியார்

திருக்கச்சூர்த் திருக்கோயில்
—ஆசிரியர்

தொல்காப்பியரும் சைவ சித்தாந்தமும்
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

கவலை தீர்த்தருள்வாய் போற்றி
—திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார்

செய்யாறு வேதபுரீசுவரர் திருக்கோயில்
—திரு. மு. முத்துகிருஷ்ணன், எம். ஏ., பி. டி.

திருச்சிற்றம்பலக் கோவையார்
—ஆசிரியர்

தல வரலாற்றுக் குறிப்புகள்
—ஆசிரியர்

திருமுருகாற்றுப் படை
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.

காரைக்கால் அம்மையார் நூல்கள்
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.

''எங்கு எழிலென் ஞாயிறு?''
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

உபதேச ரத்தின மாலை
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

இறைவனை அநுபவித்தல்
—திரு. வித்வான் கி. ஜெகந்நாதாசார்யர், எம். ஏ.

தட்சிணாமூர்த்தி
—டாக்டர். டி. எம். பி. மகாதேவன், எம். ஏ., பி. எச். டி.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

# * வாழ்த்துச் செய்தி *

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,
ஆணையாளர், அறநிலையத் துறை, சென்னை-34.

நம்முடைய மனித வாழ்க்கை நலம்பெறுவதற்கு, இன்றியமையாத சாதனங்கள் பல. அவற்றுள் சமயம் என்பதும் ஒன்ருகும். சமைப்பது என்னும் சொல்லுக்குப் பக்குவப்படுத்துவது என்பது பொருள். நம்முடைய வாழ்க்கையைப் பலவகைகளிலும் பக்குவப்படுத்தி, நலம்பெறச் செய்வது எதுவோ, அதுவே 'சமயம்' எனப்படும். சமையம் என்னும் சொல்லே, சமயம் என மருவி வழங்கி வருகின்றது. "சமைய வாதிகள் தத்தம் மதங்களே, அமைவதாக அரற்றி மலைந்தனர்" என்பது திருவாசகம்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனத் திருவள்ளுவர் கூறியருளியபடி, வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியே, சமயம் என்பதாகும். உலகமக்களின் வாழ்க்கைநிலை, நாகரிகச் சிறப்பு, கலாச்சார மேன்மை, பழக்க வழக்கங்கள், அறிவு மேம்பாடு முதலியவற்றிற்கு ஏற்ப, வெவ்வேறு வகையான மொழிகள் தோன்றி வழங்கப்பெற்று வருவது போல, வெவ்வேறு வகையான சமயக் கொள்கைகளும், வழிபாட்டு முறைகளும் தோன்றி நிலவி வருகின்றன.

இன்றைய உலக மக்களுக்கிடையில், எத்தனையோ பலப்பல சமயங்களும், சமயப் பிரிவுகளும் ஏற்பட்டு இருந்து வருகின்றன. எனினும் அவைகளிலெல்லாம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க முறையில், இந்துசமயம், யூதசமயம், ஷிண்டோசமயம், சொராஸ்ட்ர (பார்ஸி) சமயம், டாவோ சமயம், சமண சமயம், பௌத்த சமயம், கன்பூசிய சமயம், கிறித்தவ சமயம், இசுலாமிய சமயம், சீக்கிய சமயம் முதலிய சமயங்கள் விளங்கி வருகின்றன. இன்றைய உலகமக்கள், பெரும்பாலும் இச்சமயங்களில் ஏதேனும் ஒன்றைத் தத்தமக்குரிய சமயமாகச் சார்ந்தொழுகி வாழ்ந்து வருகின்றனர்.

பொதுவாகச் சமயங்கள் அன்பையும் அருளையும் பரப்பி, மக்களையெல்லாம் ஒற்றுமைப்படுத்தி வாழ வைப்பதற்குரிய சிறப்பும் பொறுப்பும் உடையனவாகும். ஆனல் சமய உண்மைகளை மக்கள் சரிவர உணர்ந்து கொள்ளாமையாலும், உள்ளவாறு கடைப்பிடித்து ஒழுகாமையாலும், பல்வேறு நாடுகளில், பல்வேறு காலங்களில் சமயப்போரும் பூசலும் சச்சரவும் நிகழ்ந்து வந்துள்ளன. சமயத்தின்பேரால், மேலை நாடுகளிலும் கீழைநாடுகளிலும், எத்தனையோ பல பூசல்களும் கொடுமைகளும் நிகழ்ந்து வந்திருக்கின்றன. அதனுல் உலக மனித குலத்திற்கு ஏற்பட்ட தீங்குகளுக்கு அளவேயில்லை.

உலக மக்களெல்லாம் ஒருகுலமாகச் சேர்ந்து, ஒற்றுமையாகவும், அன்பாகவும் ஒருவருக்கொருவர் உதவியாகவும், ஓருயிர்க்கும் தீங்கு செய்யாமல், எல்லோரும் இன்புற்று வாழ்தல் வேண்டுமென்று, அறிவிற்சிறந்த ஆன்ருேர்களும், அருளிற்கனிந்த சான்ருேர்களும், பெரிதும் முயன்று அறிவுறுத்திப் பாடுபட்டு வருகின்றனர். சமயங்கள் ஒன்றற்கொன்று உயர்வோ தாழ்வோ உடையன அல்ல. சமயங்கள் ஒன்ருேடொன்று முரண்பட்டுப் பகைமையுற்றுப் போராடத் தேவையில்லை. பசுக்கள் வெவ்வேறு நிறங்களையுடையனவாக இருப்பினும், அவற்றின் பால் வெண்மை நிறம் ஒன்றே உடையதாகத் திகழ்கின்றது. மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளும் தனித்தனியே தமக்குரிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பவற்றைப் பிரித்துக்காட்டி உணர்த்தி நலம் செய்வதுபோலவே, பற்பல சமயங்களும், சமயநூல்களும்கூட, பரம்பொருளின் வெவ்வேறு வகையான பண்புநலன்களை நமக்குப் பகுத்துக் காட்டி வகுத்துரைத்து, நன்மை புரிகின்றன. வெவ்வேறு வகையான எரிபொருள்கள் பயன்படுத்தப் பட்டாலும், அவற்றிலிருந்து தோன்றும் எரியின் இயல்பும் ஒளியும் ஒன்ருகவே உள்ளது. அது போன்றே, சமயங்கள் பல்வேறு வகையினவாகக் காணப்பட்டாலும், அவற்றின் முடிந்த முடிபான உண்மைகள், ஒரு தன்மையனவாகவே விளங்குகின்றன.

யூதசமயம் கிறித்தவசமயம் இசுலாமியசமயம் என்பவை ஒன்ருேடொன்று தொடர்புடையன. ஆப்ரகாம், மோசே, இயேசு, முகம்மதுநபி ஆகியோர் உபதேசித்த கருத்துக்களும் கொள்கைகளும் ஒன்றற்கொன்று தொடர்பும் ஒப்புமையும் உடையவை. இங்ஙனமே இந்து சமயம், சமணசமயம், பௌத்த சமயம், சீக்கிய சமயம் என்பவைகளும், நெருங்கிய தொடர்பும் உறவும் உடையவை. இவ்வாறே ஷிண்டோ சமயம், டாவோ சமயம், பௌத்த சமயம் ஆகியவற்றிற்கு இடையில்கூட பற்பல ஒப்புமைகளும் உடன்பாடுகளும் அமைந்து திகழக் காணலாம். மித்திரே (Mitraism) சமயத்திற்குரிய டிசம்பர் 25 ஆம் நாளையே கிறித்தவ சமயம், இயேசுநாதர் தோன்றிய நாளாக ஏற்றுத் தழுவிக் கொண்டுள்ளது.

---

மதுரை மாநகரில் ஸ்ரீகாஞ்சி ஆசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாதரவில் நடைபெற்ற "சர்வசமய கலாசார தத்துவ மாநாடு" குறித்து, ஆணையர் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்திக் கட்டுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. (30-3-77—5-4-77).

இருக்குவேதத்திற்கும், சென்ட் அவெஸ்தா (Zend Avesta) வுக்குமிடையே பற்பல சொல், சொற்றொடர்க் கருத்தொப்புமைகள் காணப்படுகின்றன. பார்ஸி மதத்திற்குரிய ஒளிவழிபாடு (Fire-worship) எல்லாச் சமயங்களுமே ஏற்றுப் போற்றத்தக்கதாகத் திகழ்கின்றது. இசுலாமிய சமயம் இந்துசமயம் ஆகிய இரண்டும் இணைந்து பிணைந்து ஒருவகையில் சூஃபி (Sufism) என்னும் அருளனுபவ சமயப் பிரிவாகத் திகழ்கின்றது. மகா அக்பர் என்னும் இசுலாமிய மொகலாய அரசர், எல்லாச் சமயங்களையும் ஒன்று சேர்ந்து இணைத்து ' தீன் இலாகி ' என்னும் பொதுச் சமயத்தைத் தோற்றுவிக்க முயன்றார். ஷாஜகானின் புதல்வராகிய தாராஷுகோ (Dara Shugo) என்பவர், இந்து சமயத்திற்குரிய உபநிடதங்களை மொழி பெயர்த்து, அவைகள் மேலைநாடுகளில் பரவுவதற்கு வாய்ப்பளித்தார். இந்து சமயத்திற்கும் இசுலாமிய சமயத்திற்கும் இடையே உள்ள அடிப்படை ஒற்றுமைகளை விளக்கி " சமுத்திர சங்கமம் " என்னும் நூலைத் தாராஷுகோ இயற்றியுள்ளார். மாக்சுமுல்லர் முதலிய பேரறிஞர்கள் பலர் தாம் கிறித்தவர்களாயினும், இந்து சமய வேத சாத்திர, இதிகாசங்களை மொழி பெயர்த்துள்ளனர். பேரறிஞர் ஜி.யு. போப் சைவ சமயத்திற்குரிய திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். மேலைநாட்டில் எண்ணற்ற அறிஞர்கள் பலர், கீழைநாட்டுச் சமய நூல்களையெல்லாம் வாழ்நாள் முழுவதும் ஆராய்ந்து அரும்பெரும் நூல்கள் வரைந்தளித்துள்ளனர்.

இந்து சமயக் கொள்கைகளும், வழிபாட்டு முறைகளும், சாத்திரநூல்களும் கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் பரவி நிலவி வருகின்றன. முன்னொரு காலத்தில் அமெரிக்காவில் பெரு மெக்ஸிகோ முதலிய பகுதிகளில், இந்துசமயக் கடவுளர் வழிபாடுகள் நிகழ்ந்து வந்தமைக்குரிய சான்றுகள், அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலகின் பல பகுதிகளில் சிவலிங்கத் திருவுருவங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. உலக அன்னையாகிய அம்பிகையின் வழிபாடு, (Worship of Mother Goddess), பலவேறு நாடுகளிலும் சமயங்களிலும் பரவி இருந்து வந்தமைக்குரிய சான்றுகள் ஏராளமாக உள்ளன.

கிறித்து—கிருஷ்ணன் ஆகிய இருவரின் வரலாற்றிலும், பல ஒப்புமைகள் அமைந்திருக்கக் காண்கின்றோம். கிருஷ்ணன், கம்சன்பொருட்டு ஒளித்து வளர்க்கப் பெற்றான். கிறிஸ்துநாதர், ஏரோது அரசனுக்கு அஞ்சி, மறைத்து வளர்க்கப்பெற்றார். கம்சனைப் போலவே ஏரோது அரசனும், தன் உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கிருஷ்ணன் சிறையில் பிறந்தார். கிறிஸ்துநாதர் தொழுவத்தில் பிறந்தார். கிறிஸ்துநாதர் ' நல்லமேய்ப்பர் ' (Good Shepherd) எனத் திகழ்ந்தார். கிருஷ்ணர் ' கோபாலர் ' ' கோவிந்தன் ' எனப் பெயர் பெற்று, பசுக்களை மேய்த்து ஆயர்பாடியில் வாழ்ந்தார். கிறிஸ்து மலைச் சொற்பொழிவு (Sermon on the Mount) நிகழ்த்தினார். கிருஷ்ணர் குருக்ஷேத்திரத்தில் தேர்த்தட்டில் கீதை (Song Celestial) உபதேசம் புரிந்தார். இத்தகைய பல ஒப்புமைகள் பற்பல சமயங்களிலும் ஊன்றி நோக்கினால் உணரக் கிடைக்கின்றன.

உலகமனைத்தும் ஒருகுலமாக ஒன்றுபட்டு இன்புற்று வாழ்வதற்குச் சமய வேற்றுமையைப் போக்கிச் சமயப் பொது உணர்வையும், சர்வசமய சமரச நோக்கினையும் வளரச் செய்வது, நமக்கு இன்றியமையாத தலை சிறந்த பெருங் கடமையாக இருக்கின்றது. சர்வ சமய சமரச ஞானநோக்கம் மக்களிடையில் மலர்ந்தால்தான, வருங்கால உலகம் நலம்பெற்று வாழ முடியும். அதனாலேயே,

" வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே; நின் விளையாட் டல்லால்,
மாறுபடும் கருத்தில்லை ; முடிவில் மோன
வாரிதியல் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா "

என வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் செல்வராகிய தாயுமானவ சுவாமிகளும்,

" பொங்குபல சமயமெனும் நதிகளெலாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கிஓங்கும்
கங்குகரை காணாத கடலே "

என்று திருவருட்பிரகாச வள்ளலாகிய இராமலிங்க அடிகளும்,

" ஒன்றது பேரூர் வழியாறு அதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழும் நாயையொத் தார்களே"

என்று திருமந்திரம் அருளிய திருமூலரும் சர்வசமய சமரச ஞான நன்னோக்கினை, மிகவும் வலியுறுத்தி அறிவுறுத்தியிருக்கின்றனர்.

காஞ்சிகாமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் இக்கருத்தினையும் குறிக்கோளையும் கொண்டே "அகில உலக சமய கலாசார தத்துவ மாநாடு " என்னும் சமயப் பேரவையினைக் கூட்டி, அயல்நாடுகளிலிருந்து அறிஞர்கள் பலரை வரவழைத்து, அரிய பெரிய சமய ஆராய்ச்சி விரிவுரைகள் நிகழ்த்துவதற்குத் திருவருள் பாலித்து, ஏற்பாடு செய்தருளியிருக்கின்றார்கள்.

" காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது "

என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறியதுபோல, நமது ஸ்ரீகாஞ்சி ஆசாரிய சுவாமிகள் இம்மாநாடு நிகழ்வதற்கு ஏற்பாடு செய்து அருளியமை, நாம் பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது.

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மை உடனுறை சொக்கநாதப் பெருமான் திருவருளால், இம்மாநாடு சிறப்புற நிகழ்ந்து சமய உணர்வும் சமரச ஞானமும், எங்கும் பரவி வளர்தல் வேண்டும் என விரும்பி, என் மனமார்ந்த வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சமய உணர்வு தழைத்தோங்குக ;
சமரச ஞானம் யாண்டும் பரவி வளர்க ! '

——

# சத்திய ஞானசபை விளக்கம்

திருமுருக கிருபானந்தவாரியார்

வள்ளலார் மாண்பு :

உலகின்கண் ஆன்மாக்களின் உள்ளத்தில் அறியாமையாகிய இருள் மிகுந்தபோதெல்லாம், அதனை விலக்கும்பொருட்டு ஞானஒளி மயமான ஆன்றோர் அவ்வப்போது அவதரித்து அருளினார்கள்.

ஜாதி, சமய மத முதலிய பிணக்கினாலாகிய பேரிருள் மூடியபோது அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் இறுதியில் உறுதிசெய்யத் திருஅவதாரஞ் செய்தனர். சாவாவரம் பெற்று உலகிற்கு ஞானத் தந்தையராக இவர்கள் விளங்குகின்றார்கள்.

"நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்
சாவா வரம்எனைப்போல் சார்ந்தவரும் - தேவாநின்
பேரருளை என்போலப் பெற்றவரும் எல்வுலகில்
யாருளர்நீ சற்றே யறை"

"அகத்தே கறுத்துப் புறத்தேவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனையிந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே"

பலகாலுஞ் செய்த மாதவப் பயனால் இராமலிங்க அடிகள் பேருலகெல்லாம் போற்றத் திருவருள் செங்கோல் பெற்றுச், சன்மார்க்க ஆட்சி புரிவாராயினார்கள். அவர்களது பெருமை இமயமலையிலும் உயர்ந்தது. அடிகளார் உடல் தழைக்கச் சத்திய தருமச்சாலையையும், உணர்வு தழைக்கச் சத்திய வேதபாடசாலையையும் உயிர் தழைக்கச் சத்திய ஞானசபையையும் வடலூரில் நிறுவியருள் புரிந்தார்கள்.

சோதி :

மாற்றம் மனங்கழிய நின்ற வான் பொருளாகிய இறைவர் ஜோதி வடிவாக விளங்குகின்றனர். கடவுளை ஜோதி சொரூபர் என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன.

"திருவையா றகலாத செம்பொற் சோதி
"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

—அப்பர்.

"துத்தியஞ் செய நின்றநற் சோதியே"
"சோதியே சுடரே சூழொளி விளக்கே"
"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி"
"கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை"

—மாணிக்கவாசகர்.

"அலகில் சோதியான் அம்பலத் தாடுவான்"

—சேக்கிழார்.

"தீபமங்கள சோதி நமோ நம"
"ஆயும் வேதகீத மேழிசை பாட அஞ்செ
ழுத்தங்க முட்ட நின்று.. ...துன்றுசோதி
"சோதி யுணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோக மதுதந்து.........எனையாள்வாய்"

—அருணகிரிநாதர்.

"சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே"
"சோதியே நந்தாச் சுகவடிவே வெளியே
ஆதியே நின்னை அறியவைத்தால் ஆகாதோ"
"சோதியே சுடரே சுகமேதுணை
நீதியே நிசமே நிறைவே"

—தாயுமானார்.

"வாமசோதி சோமசோதி வானசோதி ஞானசோதி
வாகசோதி யோகசோதி வாதசோதி நாதசோதி"

—இராமலிங்கர்.

இந்த ஆன்றோர் அருள்வாக்குகளை ஒருங்கே உன்னுக.

சோதியே சிவலிங்கம் :

நம்முடைய உடம்பாகிய கோயிலுக்குள் சிவஜோதி விளங்குகின்றது. சிவஜோதி மேல் நோக்கியிருக்கின்றது அருட்ஜோதி அதைச் சூழ்ந்திருக்கின்றது. ஆன்மஜோதி அதனைத் தாங்கி நிற்கின்றது. எனவே ஆன்மஜோதியுள் அருட்ஜோதி; அருட்ஜோதியுள் சிவஜோதி

"சோதியுட் சோதியுட் சோதி"

என்றார் அடிகள்.

இதனையே சிவலிங்கம் என்று உணர்க, மேல்நோக்கியுள்ள இலிங்கம் சிவஜோதி; அதைச் சூழ்ந்துள்ள ஆவுடை அருட்ஜோதி; அதனைத் தாங்கும் பீடம் ஆன்மஜோதி. எனவே உடம்பில் உள்ள உயிர் சிவலிங்கம் என்று அறிக.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்"

—திருமந்திரம்.

சிவலிங்க வழிபாடும் ஜோதி வழிபாடும் ஒன்று என்று உணர்க. சிவலிங்க வழிபாட்டின் சூட்சுமம் ஜோதி வழிபாடு ஆகும்.

சோதியும் முருகரும் :

அருவும், உருவும், ஆதியின்மையும், பலதும் ஒன்றுமான பெரிய அருட்ஜோதியே, ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் பதினெட்டுத் திருக்கண்களும் உடைய கருணை வடிவங்கொண்டு வந்தது என்பதனை உய்த்துணர்க.

" அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றுய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய "

—கந்தபுராணம்.

ஆதலின் அருட்பெருஞ் சோதியே ஆறுமுகக் கடவுள் என்க.

சோதியும் அருணையும் :

மாலும் அயனும் பிணங்கிய போது, அவர்கட்கு இடையில் ஜோதி ஒன்று மண்ணையும் விண்ணையும் ஊடுருவி நின்றது. அதன் முதலையும் முடியையும் அவர்கள் தேடித் தேடித் திகைத்தனர் என்ற வரலாற்றின் நுணுக்கத்தையும் ஆய்க.

திருமால் (இலக்குமி) செல்வத்திற்கு நாயகர்; பிரமர் (கலைமகள்) கல்விக்கு நாயகர். ஜோதி என்பது ஞானம்; ஞானமாகிய ஜோதியைச் செல்வமும் கல்வியும் பிணக்குற்றுத் தேடின. காண முடியவில்லை. ஞானத்தை ஞானத்தினுலேயே அறிய வேண்டும்.

" அறிவாலறிந்து னிருதா ளிறைஞ்சும்
அடியாரிடைஞ்சல் களைவோனே "

—திருப்புகழ்.

கல்விப் பெருக்கினுலும், செல்வமுறுக்கினுலும் ஞான ஜோதியைக் காண இயலாது என்று உணர்க.

சோதியும் இராமரும் :

அறநெறி அருகி மறநெறி பெருகியகாலத்து. புன்னெறியை மாற்றி நன்னெறியை ஏற்றும் பொருட்டுக் கோசலை வயிற்றில் நீலஜோதி ஒன்று வந்து தங்கி இராமராகத் திருவவதாரஞ் செய்தது என்க. எனவே ஜோதியே இராமபிரான் என்பதனையும் உணர்க.

ஒருபகல் உலகெலாம் உதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழிற் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை.

—கம்பராமாயணம்.

பெரியபுராணம் :

அன்றியும் அரனுர் இளையான் குடிமாற நாயனுர் இல்லத்தில் இரவில் உணவு கேட்டு. அவர்கள் வித்திய நெல்லைக் கொணர்ந்து அமுதாக்கி அவரைத் துயிலுணர்த்தச் சென்ற பொழுது, இறைவர் சோதி வடிவாகத் தோன்றினுர்.

அழுந்திய இடருள் நீங்கி,
அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட
அமுதுசெய் தருள்க வென்று
தொழும்பனுர் உரைத்த போதில்
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந்
தொண்டருந் திகைத்து நின்ருர்.

திருவிளையாடல் :

வந்திக்கு ஆளாக வந்த சொக்கலிங்கப் பெருமான், பாண்டியன் அடிக்க மண்ணை உடைப்பிற் கொட்டி மறைந்த இடத்திலும் பரஞ்சோதி முனிவர், இறைவரை ஜோதி யென்றே குறிப்பிடுகின்றனர்.

கண்டனன் கனன்று வேந்தன்
கையிற் பொற்பிரம்புவாங்கி
அண்டமும் அளவி லாத
உயிர்களும் ஆக மாகக்
கொண்டவன் முதுகில் வீசிப்
புடைத்தனன் கூடையோடு
மண்டனை உடைப்பிற் கொட்டி
மறைந்தனன் நிறைந்த ஜோதி

சோதி வழிபாடு :

சோதி வழிபாடு எல்லாக் காலத்தவர்க்கும், எல்லாத் தேயத்தார்க்கும், எல்லா மதத்தினர்க்கும், எல்லாச் சமயத்தார்க்கும், எல்லா மரபினர்க்கும் இசைந்த ஒன்றுய்ப் பிணக்கமின்றி இணக்கமுடன் ஒன்றுபட்டு வழிபடுவதற்கு உரியதாகும்.

காலையும் மாலையும் உச்சியும் சூரியனை வழிபடும் வழக்கமும் பாரசீகர்கள் நெருப்பை வழிபடும் வழக்கமும் நமது நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகின்றன. முழுமதியன்று செய்யும் வழிபாடும் சோதி வழிபாடேயாகும்.

ஆதலினுல், சமரச சுத்த சன்மார்க்க குருமூர்த்தியாகிய இராமலிங்க அடிகள் அகத்தே தாம் கண்ட அருட்பெருஞ் சோதியைப் புறத்தே அனைவருங் கண்டு உய்ய வேண்டும் என்று கருதி அளவிலாத கருணையினுல் வடலூரில் சத்திய ஞான சபையைப் பிரசோற்பத்தி ஆண்டு தைத் திங்கள் 13-ம் நாள் (25-1-1872) வியாழக்கிழமை பூச நட்சத்திரத்தில் நிறுவியருள் புரிந்தார்கள்.

சத்திய ஞானசபை விளக்கம் :

(1) அன்பு என்ற சங்கிலியால் அகப்படுவது அருட்சோதி என்பதை உணர்த்தச் சபையைச் சுற்றிச் சங்கிலி ஒன்றை அமைத்தார்கள்.

" பக்தி வலையில் படுவோன் காண்க "
" அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே "

(2) அதை அடுத்து இடையிடையே அறிவு வடிவான வேற்படையின் குறியுள்ள இரும்புக் கம்பிகளுடன் கூடிய 52 கட்டைகளும், ஓம் என்ற மூல மந்திரத்துடன் கூடிய அகராதி க்ஷகாராந்தமாகவுள்ள மாத்ருகா மந்திரங்களை யுணர்த்துகின்றன.

(3) முகப்பில் உள்ள மூன்று வாயில்களும் அருட்பெருஞ் சோதியை அடைவதற்குச் சாதனங்களாகவுள்ள கர்மயோகம், பத்தியோகம், ஞானயோகம், என்ற மூன்று யோகங்களையும், அதை அடுத்துள்ள இரு சாளரங்கள் பாசஞானம் பசுஞானம் என்ற இரு ஞானங்களையும் உணர்த்துகின்றன.

(4) அகவல் மண்டபத்தின் இரு பக்கங்களில் கிழக்கும் மேற்கும் உள்ள வாயில்கள் பரஞானத்தையும் அபரஞானத்தையும் அறிவிக்கின்றன.

(5) அகவல் மண்டபத்திலேயுள்ள நான்கு சாளரங்களும் கேட்டல், சிந்தித்தல் தெளிதல், நிட்டைகூடுதல் என்ற நான்கின் வழியாக உட்பொருளை உணரவேண்டும் என்று உணர்த்துகின்றன.

(6) அதனை அடுத்துள்ள திருமண்டபத்தில் மேற்புறம் விளங்குவது சிற்சபை (வெள்ளியம்பலம்), கீழ்

புறத்தில் விளங்குவது பொற்சபை (பொன்னம்பலம்), வடபுறம் தென்முகமாகத் திகழ்வது ஞானசபை (அறிவு மன்றம்) என்க.

(7) ஞான சபையைச் சூழ்ந்துள்ள நீராழிப்பத்தி என்ற பிராகாரத்தில் உள்ள இருபத்திரண்டு வளைவுகளும் அதனையடுத்து இருபுறத்தும் உள்ளபக்க வழிகள் இரண்டு சேர்த்த இருபத்து நான்கையும் ஆன்ம-தத்துவம் இருபத்து நான்கு என அறிக.

மண் நீர் தீ காற்று வெளி என்னும் பூதங்கள் ஐந்து, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்து, மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்து. வாக்கு பாணி பாதம் பாயு உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்து, மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் மூன்று, குணம் ஒன்று. ஆக ஆன்ம தத்துவங்கள் இருபத்திநான்கு.

(8) நீராழிப் பத்தியில் உள்ளடங்கியுள்ள ஏழு வாயில்களும் வித்தியா தத்துவங்கள் ஏழையுங் குறிக்கின்றன.

வித்யா தத்துவங்கள் என்பன, காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மூலப்பகுதி என்பனவாம்.

(9) ஞானசபையில் தென்புறத்துள்ள கண்ணாடிக் கதவுகளுடன் கூடிய மூன்று வாயில்கள், ஞாயிறு திங்கள் நெருப்பு என்ற மூன்று விழிகளை விளக்குகின்றன.

(10) அதன் படிகள் ஐந்தும் நமசிவய என்ற ஐந்தெழுத்தென உணர்க.

(11) பிராகாரத்துள்ள சாளரம் பதினான்கும் வித்தைகள் பதினான்கு என அறிக' அல்லது சாத்திரம் பதினான்கு என்க.

(12) ஞானசபையின் இடையில் உள்ளவை பன்னிரண்டு மெய்கண்ட சூத்திரங்களாகும்.

(13) ஞானசபையின் நடுவேயுள்ள அதிட்டான பீடத்தின் தென்திசையில் உள்ள ஐந்து படிகளும் சிவ தத்துவங்கள் ஐந்தையும் உணர்த்தும். அவையாவன: சிவம் சத்தி சதாசிவம் ஈசுரம் சுத்தவித்தை. மேற்கு கிழக்கு வடக்கு கீழ் நோக்கியுள்ள திருக்களிற்றுப் படிகளாகிய ஐந்து ஐந்து வீதமுள்ள படிகள், சூக்கும பஞ்சாக்கரம் காரண பஞ்சாக்கரம்; மகாகாரண பஞ்சாக்கரம், முத்தி பஞ்சாக்கரம் என்க.

(14) அதிட்டான பீடத்திற்கு இடையேயுள்ள நாற்கால் மண்டபம் சோதிஞான பீடமாகும்.

(15) சோதிஞான பீடத்தின் நான்கு படிகளும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களாகும். அதன் வழியேறி அருட்பெருஞ்சோதியை அடைதல் வேண்டும்.

(16) சோதி ஞான பீடத்தின்மீது உள்ள நான்கு தூண்களும் ஞனத்தில் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்ற ஞான பாதங்களாகும்.

(17) அதன் வடதிசையில் உள்ள ஓங்கார வளைவுக்கு இடையில் ஞான வெளியில் அருட்பெருஞ்சோதி விளங்குகின்றது.

(18) அதனை முறையே, கருப்பு நீலம் பச்சை சிவப்பு மஞ்சள் வெண்மை என்று மறைத்துள்ள ஆறு திரைகளும், ஆணவம் கன்மம் அசுத்தமாயை கலப்புமாயை சுத்தமாயை திரோபவம் என்ற ஆறுமாகும். மேற்கூறிய ஆறு மறைப்புகளும் விலகியவுடன் பிரணவ வட்டத்துள் ஞான பீடத்தின் மீது விளங்கும் தனிப்பெருங்கருணையுடன் கூடிய அருட்பெருஞ் சோதி காட்சியளிக்கின்றது.

அன்புத்தலையாலும், அறிவு மயமாகிய பிரணவத்துடன் கூடிய ஐப்பத்திரண்டு அட்சரங்களாகிய மாத்ருகா மந்திரங்களாலும் சூழப்பட்டு, கர்மயோகம், பக்தி யோகம், ஞானயோகங்களின் வழியாகவும், பரஞான அபரஞான வழியாகவும், பாசஞான பசுஞானங்களையறிந்து உட்சென்று, கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டைகூடி, சிற்சபை பொற்சபை இரண்டையுந் தெரிசித்து, ஞானசபையை அடைவதற்குத் தகுதிபெற்று, சோம சூரிய அக்கினி என்ற மூன்று கண் களும் திறக்கப் பெற்று, தூல பஞ்சாக்கர வழியேறி, ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்கையும், வித்யா தத்துவங்கள் ஏழையும், சிவதத்துவங்கள் ஐந்தையும் ஆக ஆருறு முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து ("ஆருறையுநீத்ததன் மேல் நிலையைப்பேரு அடியேன் பெறுமாறுளதோ" என்றபடி), பதினான்கு வித்தைகளுக்கு இடையிலுள்ள பன்னிருமெய்கண்ட சூத்திரங்களையுணர்ந்து, அதன் பயனாகிய சூக்கும, காரண, மகாகாரண, முத்தி பஞ்சாக்கரங்களையுணர்ந்து, சரியை, கிரியை, யோக ஞானமாகிய படிகள்மீது ஏறி, ஞானத்தில் சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் கைவரப்பெற்று, ஆணவம், கன்மம், அசுத்த மாயை, மிஸ்ரமாயை, சுத்தமாயை, திரோதானம் என்று ஆறு மறைப்புகளையும் அகற்றி, பிரணவ அருள் ஞான பீடத்தின்மீது தனிப்பெருங் கருணையுடன் கூடிய அருட்பெருஞ்சோதியைத் தரிசிக்கவேண்டும்,

எட்டுத்திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை

—பட்டினத்தடிகள்.

இந்தத் தத்துவ இரகசியத்தை மன்பதைகள் அனைவரும் அறிந்துஉய்யும்பொருட்டுத் தத்துவாதீதப் பொருளையறிந்த தயாநிதியாகிய வள்ளற் பெருமானால் வடற்பெரு வெளியிலே ஒப்பற்ற உண்மைக் கருணையால் இந்த சத்திய ஞான சபையை நிறுவியருளினார்கள்.

இன்னும் சத்திய ஞான சபையில் பலப்பல நுட்பங்கள் உள. எழுத்து மூலமாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு தானே விளக்கமுடியும்? கூர்த்த மெய்ஞ்ஞானத்தினால் கூர்ந்து கூர்ந்து சிந்தித்து, குருவருளாலும் திருவருளாலும் உணர்தற்பாலனவாகும்.

ஒரு பொருளைப் பலர் பல பார்வையாகப் பார்க்கின்றார்கள். ஒரு பெண் மணியைத் தந்தை பார்க்கின்ற

பார்வை வேறு; உடன் பிறந்தார் பார்க்கின்ற பார்வை வேறு; கணவன் பார்க்கின்ற பார்வை வேறு, மகன் பார்க்கின்ற பார்வை வேறு.

ஒரு பொருளைப் பலர் பல நிறக் கண்ணாடிகளை யணிந்து பார்க்கின்றார்கள். நீல நிறக் கண்ணாடியணிந்தவனுக்கு அப்பொருள் நீலநிறமாகவும், சிவப்புநிறக் கண்ணாடி அணிந்தவனுக்குச் சிவப்பாகவும், பச்சை நிறக் கண்ணாடி யணிந்தவனுக்குப் பச்சையாகவும், அப்பொருள் காட்சி தரும். அது போல் ஒரு பொருளை யார் யார் என்னென்ன கருத்துடன் காண்பார்களோ அவரவர்கட்கு அப்பொருள் அவ்வவ் வண்ணமாகத் தோன்றும். ஆனால் தூய பளிங்குக் கண்ணாடியணிந்தவனுக்குப் பொருளின் உண்மைக் காட்சி புலனாகும்.

பௌர்ணமியன்று நடு இரவில் ஒரு தனியிடமாகிய பள்ளத்தில் பற்றற்ற ஞானி ஒருவர் பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்றபடி அமர்ந்திருந்தனர். அவ்வழியே சென்ற கட்குடியன் அவரைக் குடிவெறியால் மயங்கியிருப்பதாகவும், காமுகன் அவரை ஒருபெண்ணை எதிர் பார்த்திருப்பதாகவும், கள்வன் அவரைக் களவு புரியக் காத்திருப்பதாகவும், மனைவிக்குப் பயந்தவன் அவரை மனையாளுக் கஞ்சி ஒளிந்திருப்பதாகவும் எண்ணினார்கள். ஆனால் அவ்வழியே சென்ற ஞானி அவரைப் பற்றற்ற பரம ஞானி என்று கண்டு வணங்கிச் சென்றனர்.

இது போல் வள்ளற் பெருமானுடைய சத்திய ஞான உணர்ச்சியில் எழுந்த தத்துவாதீதமாகிய சத்திய ஞான சபையையும், பலர் தத்தங் கருத்திற் கிணங்கக் காண்கின்றார்கள். ஆனால் வாய்மையும் தூய்மையும் உடையார்க்கு உண்மை விளங்கும்.

—:×:—

---

## தேவாரம்

சாலக் கோயில் உள நின் கோயில்
அவைஎன் தலைமேற் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையும் துறந்தேன்
வானோர் அறியா நெறியானே
கோலக் கோயில் குறையாக் கோயில்
குளிர் பூங் கச்சூர் வடபாலை
ஆலக் கோயிற் கல்லால் நிழற்கீழ்
அறங்கள் உரைத்த அம்மானே!

விடையும் கொடியும் சடையும் உடையாய்
மின்னேர் உருவத் தொளியானே!
கடையும் புடைசூழ் மணிமண்டபமும்
கன்னி மாடம் கலந்தெங்கும்
புடையும் பொழிலும் புனலும் தழுவிப்
பூமேல் திருமா மகள் புல்கி
அடையும் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே!

—சுந்தரர்.

## திருவருட்பா

.........................................தூவிமயில்
ஆடும் பொழிற்கச்சூர் ஆலக்கோயிற்குள் அன்பர்
நீடும் கனதூய நேயமே........................

—திருவருட்பிரகாச வள்ளலார்.

# திருக்கச்சூர்த் திருக்கோயில்

தேவாரத் திருப்பாடல் பெற்ற தொண்டை நாட்டுச் சிவத்தலங்களுள், திருக்கச்சூர் கோயில் ஒன்று. இது 'கச்சூர் ஆலக் கோயில்' எனத் தேவாரப் பாடல்களில் குறிக்கப்பெற்று உள்ளது. இந்தத் தலம் செங்கற்பட்டுக்கு அருகே யுள்ள சிங்கப்பெருமாள் கோயில் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து, வடமேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. செங்கற்பட்டில் இருந்து திருவள்ளூருக்குச் செல்லும் உந்தூர்திகள், திருக்கச்சூர் வழியாகச் செல்கின்றன.

இங்கு மலைமேல் ஒரு கோயிலும்; ஊரின் நடுவே ஒரு கோயிலும்ஆக, இரண்டு கோயில்கள் அமைந்துள்ளன. மலைமேல் உள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு மருந்தீசுவரர் என்றும், அம்பிகைக்கு இருள் நீக்கித் தாயார் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. தேவ மருத்துவர்கள் ஆகிய அசுவினி தேவர்கள், ஒரு சமயம் தேவேந்திரனுக்கு உற்ற ஒரு பிணியைத் தீர்ப்பதற்காக, இங்கு வந்து இறைவனை வழி பட்டு, இங்குள்ள மலையில் இருந்த மூலிகை மருந்துகளை, இறைவனின் அருளால் கிடைக்கப் பெற்றனர். அதனாலேயே சுவாமிக்கு மலைமருந் தீசர் என்று பெயர் ஏற்பட்டது என்பது தலவரலாறு.

"மேலை விதியே வினையின் பயனே
விரவார்புரம் மூன்று எரிசெய் தாய்!
காலை எழுந்து தொழுவார் தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா!
மாலை மதியே! மலைமேல் மருந்தே!
மறவேன் அடியேன்; வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே"

என வரும் சுந்தரர் தேவாரப் பாடலில், "மலை மேல் மருந்து" என்னும் பெயர், இத்தல வர லாற்றை யுணர்த்தும் குறிப்பாக அமைந்திருத் தல் காணலாம். இம்மலைக் கோயில் சிறியதாக இருந்தாலும், அழகும் சிறப்பும் உடையதாகத் திகழ்கின்றது.

ஊர் நடுவேயுள்ள கோயில் தியாகராச சுவாமி கோயில் என வழங்குகின்றது. தியாகராச சுவாமி என்பது, இக்கோயிலின் உற்சவ மூர்த் திக்குப் பெயர். சுந்தரரின் தேவாரப் பாடல் பெற்ற தலமாதல் பற்றி, அவருக்கு மிகவும் விருப்பமான திருவாரூர்த் தலத்தில், சோமாஸ் கந்த வடிவத்தில் விளங்குகின்ற தியாகராச சுவாமியே, இங்கும் உற்சவமூர்த்தியாக வைத்து வழிபடப்பெற்று வருகின்றார் எனத் தெரிகின்றது. இக்கோயிலில் மூலத்தானத்தில் உள்ள பெருமான் கச்சபேசுவரர் என வழங்கப்படுகின் றார். தேவர்களும் அசுரர்களும் அமிழ்தம் பெறு வதற்கு விரும்பித் திருபாற்கடலைக் கடைந்த பொழுது, மந்தர மலையாகிய மத்து அசையாமல் நிற்கும்பொருட்டுத் திருமால் ஆமையாக வடிவம் எடுத்து, அதனைத் தாங்கினார் என்பது வரலாறு. அங்ஙனம் கச்சபம் என்னும் ஆமை வடிவம் எடுத்த திருமால், இங்கு வழிபட்ட காரணத்தி னால், இங்குள்ள பெருமானுக்குக் கச்சபேசுவரர் எனப் பெயர் அமைந்தது. இங்கு உள்ள அம்பிகை அஞ்சனாட்சி எனப் போற்றப் பெறு கின்றாள். இக்கோயிலும் பல சந்நிதிகளுடன் நல்ல அமைதியான சூழ்நிலையில் அழகுற அமைந்து திகழ்கின்றது. மலைமேல் மருந்தீசு வரர் விளங்குவதுபோல், இங்கு இரந்தீசுவரர் என்றும் விருந்தீசுவரர் என்றும் இரு பெயர் கொண்டு சிவபிரான் விளங்குகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்திற்கு வந்து தரிசனம் செய்தபொழுது, நண்பகல் நேரமாக இருந்தது. வழிநடந்து வந்ததனால், அவர் பசியாலும் களைப்பாலும் சோர்வுற்று வருந்தினார். அது கண்ட சிவபெருமான், மனித வடிவம் கொண்டு, அவ்வூரில் உள்ள வீடுகள் தோறும் சென்று இரந்து பிச்சை ஏற்று உண வெடுத்து வந்து, சுந்தரருக்கு உணவு கொடுத்து விருந்தளித்தார். அவ்வரலாற்றை யுணர்த்தும் முறையிலேயே, இரந்தீசுவரர், விருந்தீசுவரர் எனச் சிவபெருமான் இங்கு இரு வடிவங்கள் கொண்டு திகழ்கின்றார். இவ் வரலாற்றுக் குறிப்பும்,

"கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக்
கழலும் சிலம்பும் கலிக்கப் பலிக்கென்று
உச்சம் போதா ஊர்ஊர் திரியக்
கண்டால் அடியார் உருகாரோ?"

என வரும் சுந்தரர் தேவாரத் திருப்பாடலில் அமைந்திருத்தல், அறிந்து இன்புறுதற்குறியது.

"படியிலா நின்பாட்டில் ஆரூர!
நனிவிருப்பன் பரமன் என்பது
அடியேன் அறிந்தனன்; வான் தொழும் ஈசன்
நினைத்தடுத்தாட் கொண்டும், அன்றித்
தொடியுலாம் மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்,
பிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்குமாறே"

என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடுதற்கு ஏற்ப, இறைவன் தன் அடியவராகிய சுந்தரர் பொருட்டுப் பிச்சை ஏற்றுழன்று, தன் எளிமையையும் அருட் சிறப்பையும் வெளிப் படுத்திய திருக்கச்சூர்த் தலத்தின் பெருமை அளப்பரியது! அன்பர்கள் திருக்கச்சூருக்குச் சென்று வழிபட்டு, நலம் பலவும் பெற்று மகிழ்வார்களாக!

—ஆசிரியர்.

# தொல்காப்பியரும் சைவசித்தாந்தமும்*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

நமது தமிழ் மொழியிலுள்ள நூல்கள் அனைத்திலும், மிக மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்தது, தொல்காப்பியமே யாகும். இதன் காலம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர்கள் உடன்பட்டுள்ளனர் (1). இத்தகைய பழம்பெரும் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே, சமய தத்துவக் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன.

1. "தொல்காப்பியம் என்னும் பழமை மிக்க இலக்கண நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கணக் குறியீட்டுச் சொற்கள், வாழ்க்கை இயலின் இலக்கணத்தை, விளக்குவதற்குத் தேவையான தத்துவக் குறியீட்டுச் சொற்களுடன் கலந்த நிலையில் ஒன்றுபட்டுத் திகழ்கின்றன. தமிழ் இலக்கணத்தில் கூறப்படுகின்ற எழுத்துக்கள் சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவற்றிற்கு உரியஇடத்தில், அவைகளுக்கு ஒப்புமையுடைய தெய்விகத் தத்துவச் சொற்களை மாற்றி அமைத்தால், தொல்காப்பிய விதிகள் அல்லது நூற்பாக்கள், தமிழ் மொழியின் அமைப்பியலை விளக்குவது மட்டுமன்றி, மக்களின் வாழ்க்கையினையும் விவரித்து விளக்குவனவாகத் திகழ்வதைக் காணலாம். இவ்வுண்மை தொல்காப்பியத்தினை மேல்நோக்காக ஒரு சிறிது காண்போர்க்குங்கூடத் தெற்றென விளங்கும்" (2).

(1) As regards the age of Tholkappiam, I have investigated almost all the divergent views expressed by notable scholars and concluded that its composition could not have taken place later than 2500 B.C. That this assignment of a Tamil work to so high an antiquity may not be deemed extravagant, when this is compared with the age of 4500 B.C., ascribed to the Rig Veda by such eminent oriental scholars and historians as Prof. Hermann Jacobi, Bala Gangadhar Tilak and Dr. Bloomfield"

— Maraimalai Adigal.

(2) "Even a cursory glance of that ancient grammar Tholkappiam, will convince that the grammatical terminology employed in it are the identical philosophical terminology necessary for dealing with the grammar of the phenomena of life. If in space of the alphabet, words and sentences treated in the grammar, their corresponding mystic equivalents in philosophy are substituted, the Sutras or the rules of Tholkappiam expound the phenomena of life instead of phenomena of the Tamil language"

— P. V. Manickam Naicker,
(The Tamil Alphabet, Its Mystic Aspect.)

உயிர், மெய் :

2. ஆசிரியர் தொல்காப்பியர், தமிழிலக்கணத்தில் எழுத்துக்களுக்குப் பெயரமைத்திருக்கும்முறையே, தமிழ் மக்களின் நுண்மாண் நுழைபுலத்தினை நுனித்துணர்த்த வல்லதாயுள்ளது. தாமே தனித்தியங்கவல்ல எழுத்துக்களுக்கு 'உயிர்' என்றும், உயிரோடு கூடியல்லது இயங்கலாற்றாத எழுத்துக்களுக்கு 'மெய்' என்றும், உவமை ஆகுபெயராற் காரணம் பற்றிச் சமய தத்துவக் கருத்தின் அடிப்படையில் பெயர்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ் மக்களின் தலைசிறந்த தத்துவ ஞானத்தினை இப்பெயர்கள் தகவுற விளக்குகின்றன. (3)

இப்பெயர்களின் குறிப்புகளுக்கு முன்னொடுபின் சிறிதும் முரணுமலே, தமிழில் எழுத்திலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது. க்ருபை, த்பானம் என்னும் வடசொற்களிற் போல, மெய்யெழுத்துக்கள் தமிழில் மொழி முதற்கண் வருவதில்லை.

"உயிர்மெய் அல்லன
மொழிமுதல் ஆகா"

என்பது தொல்காப்பியச் சூத்திரம். சொற்களில் மெய்யெழுத்துக்கள் முதலாக வருதல் கூடாது என்னும் வரையறை, அழிந்துபடும் இயல்பிற்றாகிய உடம்பின் இழிதகவையும், அழியா இயல்பிற்றாகிய உயிரின் மேம்பாட்டினையும் உணர்த்தும் வகையில், அறிவிற்குப் பொருத்தமாகச் செய்யப்பட்டிருப்ப தொன்றாகும்.

மெய்யின்வழியது உயிர் :

3. "உயிர்மெய் எழுத்துக்களுள், உயிரெழுத்துக்கள் பின்னும், மெய் எழுத்துக்கள் முன்னும் ஒலிக்கும்" என்பது இலக்கணம். உயிரின் அறிவும் இயல்பும் அது சாரும் உடம்பிற்கு ஏற்பவே அமையும். ஓர் ஆளில் அல்லது உயிர்ப்பொருளில், உயிர் உடம்பு என இரு-பொருள் கலந்திருப்பினும், காண்பார்க்கு உடம்பே முற்பட்டுத் தோன்றும். அதன் பின்னரே அதற்குள் உயிர் இருப்பது அறியப்படும். அது போல உயிர்மெய் எழுத்திலும் மெய்யெழுத்தே முன் ஒலிக்கும்; அதன் பின்னரே உயிர் ஒலிக்கும். இவ்வுண்மையினையே,

(3) "Tamil grammarians designate vowels by a beautiful metaphor, as Uyir or life of a word; consonants as Mey or the body; and the junction of a vowel and consonant as Uyirmey or an animated body"

— Dr. Caldwell

*மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் ஆதரவில், மகிபாலன்பட்டி "சித்தாந்தமணி மொழிச் செல்வர்" திரு. சி. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் நினைவாகச் "சைவசித்தாந்தத் தொடர் சொற்பொழிவுகள்" நிகழ்த்தியபோதுவிளக்கிய கருத்துக்களைத் தழுவியது. (5-2-77—1(-2-77).
—ஆசிரியர்

" மெய்யின் வழியது
உயிர் தோன்றும் நிலையே "

என்று இலக்கண நூலார் வகுத்துரைத்தனர். இந்நூற்பா இலக்கண நூற் கருத்தும், தத்துவ நூற்பொருளும் ஒருங்கமையச் சிறந்து விளங்கும் திறம், பெரிதும் போற்றுதற்குரியது.

மெய்யும் உயிரும் :

4. உயிர்மெய்யெழுத்து, தன்னுடன் கூடிய உயிரானது புணர்ச்சியின்கண் நீங்கிய வழித் தன்புள்ளி வடிவுபெறும் என்னும் இலக்கணக் கருத்து,

" மெய்உயிர் நீங்கில்
தன்உரு ஆகும் "

எனவரும் நூற்பாவால் உணர்த்தப் பெறும். இதன்கண் "உடம்பை விட்டு உயிர் நீங்கிய விடுமாயின், அங்ஙனம் உடலாகிய சிறையினின்று விடுபட்ட உயிரானது, தனக்குரிய முழுநிறைவான இயல்புகளை எய்தி நிற்கும்" என்னும் தத்துவ நூற்பொருளும் கொள்ளுதற்கு இடனுள்ளது.

புள்ளியீற்று முன் உயிர்

(5) புள்ளியீற்றுச் சொல்முன் உயிர் தனித்து நடவாது; தான் தனித்து நின்ற அவ்வியல்பினைக் கெடுத்து, அப்புள்ளியொடு கூடும் என்பது,

" புள்ளியீற்று முன் உயிர் தனித்து இயலாது
மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே "

என்னும் நூற்பாவின் பொருள்! இதற்கே, "உயிர் தனது வினைப்பயன்களை நுகர உடலின் சேர்க்கையை அடையும்; உடலின் சேர்க்கையின்றி வினைப்பயன்களை உயிர் தானே தனித்துநின்று நுகரப்பெறுது" என்னும் தத்துவ நூற்பொருளும் கொள்ளலாம். இவ்வுண்மையினை, ஆசிரியர் சீத்தலைச்சாத்தனர் தமது மணிமேகலையில், "வினையின் வந்தது" "வினைக்கு விளைவாயது" என்றும், பட்டினத்தடிகள் "வினைப் போகமே ஒரு தேகங் கண்டாய், வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" என்றும் பாடித் தெளிவுறுத்தியிருத்தல் சிந்திக்கத்தக்கது.

உடம்படுமெய் :

(6) உயிரீறு நிலைமொழியாய் நிற்க, அதன் முன் உயிர் முதற் சொல்வரின், அவ்விரண்டு உயிர்கட்கும் இடையே உடம்படுமெய் வரப்பெறும். மணி + அழகு—மணியழகு என்புழியும், சே + அடி—சேவடி என்புழியும் முறையே, யகர வகர உடம்படு மெய்கள் வரப்பெறுதல் காணலாம்.

" எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் "

என்பது இதற்குரிய நூற்பா. உயிரும் உயிரும் தம்முள் ஒன்று சேரமாட்டா. ஆதலின் அவற்றிற்குப் பற்றுக் கோடாக ஓர் உடல் இன்றியமையாது வேண்டப்படும். உயிர் சேர்தற்கு உடல் இன்றியமையாதது; ஓர் உடலைப் பற்றி நின்றே உயிரானது இயங்கும் என்னும் தத்துவ நூற்பொருளும், இலக்கணச் செய்திகளுடன் இந்நூற்பாவிற் கொள்ளப்படக் கிடக்கின்றது.

உயிரியல் திரியாது :

(7) உயிர் மெய்யாவன, மெய்களோடு உயிர்எய்தலால் பிறந்த எழுத்துக்கள் ஆகும். உயிரையுடைய மெய், உயிர் மெய்யாகும். இதனை 'உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்து' என்று உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கருதுவது தவறு. ஆயினும் அவ் உயிர் மெய்கள், அவ்வியைபின் கண்ணே உயிரும் மெய்யுமாகிய இவ்விரண்டும் அல்லாத வேருேர் எழுத்தாய் நிற்கும். இங்ஙனம் பன்னீருயிரும் பதினெட்டு மெய்யுடன் கூடி உயிர்மெய்யாய் நின்றனவாயினும், தம் அளவும் குறியும் எண்ணும் திரிந்து நில்லா. இதனை,

" மெய்யொடு இயையினும்
உயிரியல் திரியா"

என்னும் தொல்காப்பிய நூற்பா சுட்டுகின்றது. இதன்கண், "உயிரானது உடம்போடு கூடி நிற்பினும், அவ்வுயிரின் இயல்பும் உடம்பின் இயல்பும் ஒன்ருக மாட்டா. உயிரின் இயல்பு, உடம்பினது இயல்பினின்று வேறுபட்டுத் தனித்தே நிற்கும்" என்று வேருெரு பொருளும் புலப்படுதல் காணலாம்.

உடல்மேல் உயிர்வந்து ஒன்றும் :

(8) நிலைமொழி ஈறு மெய்யாய் நிற்க, வருமொழியின் முதல் உயிராய் இருக்குமாயின், நிலைமொழி ஈற்றின் மெய்யின்மீது, வருமொழி முதலின் உயிரானது ஏறி இரண்டும் ஒன்று சேர்ந்து உயிர்மெய்யாகி நிற்கும் சிவன் + அருள் என்னும் இருசொற்களும் ஒன்ருகப் புணருங்கால், சிவனருள் எனப் புணர்தல் காணலாம். இதற்குரிய விதி,

" உடல்மேல் உயிர்வந்து
ஒன்றுவது இயல்பே "

என்னும் நூற்பாவாகும். இவ்விலக்கண நூற்பாவின் கண்ணேயே, "உருவமாய் அறிவிலதாய் அழியும் இயல்பினதாகிய உடலின் மீது, அருவமாய் அறிவுடையதாய் அழியா இயல்புடையதாகிய உயிரானது வினை வயத்தால் புணர்ந்து ஒன்ருய் நிற்கும்" என்னும் உயரிய தத்துவப் பொருளும் ஒருங்கே அமைந்திருத்தல் உணர்ந்து இன்புறுதற்குரியது.

அகரமொடு சிவணும் :

(9) தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில், மொழி மரபியலில் ஆசிரியர் தொல்காப்பியர், மெய்களின் ஒலிப்பும் அசைவும்அகர எழுத்தினைச்சார்ந்து பொருந்தியே அமையும் என்கிருர். இக்கருத்துத் தோன்ற அவர் அருளிச் செய்த,

" மெய்யின் இயக்கம்
அகரமொடு சிவணும் "

எனவரும் நூற்பாவிற்கு, "இறைவன் இயங்குதிணைக் கண்ணும், நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும், அவற்றின் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளால் 'அகரமாகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவர் கூறிய

வாற்றாலும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறியவாற்றாலும், பிற நூல்களாலும் உணர்க'' என நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் விளக்கவுரை, இங்கு அறிந்து இன்புறற்பாலது.

உயர்திணை, அஃறிணை :

8. தமிழ் மொழியின் எழுத்துக்களைத் தத்துவ அடிப்படையில் உயிர் எழுத்து மெய்யெழுத்து என்று பிரித்துப் பெயர் வழங்கினாற்போலவே, உலகியற்பொருள்களையும் உயிர்களையும் கூடத் தத்துவ அடிப்படையிலேயே உயர்திணை அஃறிணை எனப் பாகுபாடு செய்து, தமிழ்ச் சான்றோர்கள் வழங்கியிருக்கின்றனர்.

> '' உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை என்மனார் அவர்அல பிறவே
> ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே''

எனவரும் தொல்காப்பிய நூற்பா, மக்கள்வேறு-மக்கட் சுட்டுவேறு எனப் பாகுபாடு செய்து, 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அதுவே மக்கட் சுட்டாகும்' என்று வரையறைப்படுத்தி விளக்கியிருக்கும் நுட்பம் பெரிதும் போற்றற்பாலது.

> '' தக்கஇன்ன தகாதன இன்ன வென்று
> ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
> மக்களும் விலங்கே; மநு வின்நெறி
> புக்கவேல், அவ் விலங்கும் புத்தேளிரே ''
>
> —கம்பர்

எனவரும் சிறந்த நல்ல பாடல், இந் நூற்பாவின் பொருளையே அடிப்படையாகக் கொண்டு அமைவ-தாயிற்று. உடம்பு ஒன்றேபற்றி யன்றிப் பண்பும் உணர்வும் பற்றியே, மக்கள் அல்லது மாக்கள் என்பது துணியப்படும் என்றதனால், தொல்காப்பிய நூலின் சமய தத்துவ அடிப்படை தெற்றென விளங்கும்.

வினைக்கொள்கை :

9. இவ்வாறே, ஆசிரியர் தொல்காப்பியர் வினைச் சொல் குறித்து வகுத்துள்ள இலக்கணமும், பெரிதும் வியந்து போற்றற்பாலதாக இருககின்றது. சொற்கள் பெயர்-வினை-இடை-உரி என நான்கு வகைப்படும். ஆயினும் இவற்றுள் பெயரும் வினையுமே மிகவும் முதன்மை வாய்ந்தவை, பெயர்ச் சொல்லின் அடியாக வினைச் சொற்களும், தம்முள் ஏற்ற பெற்றி தோன்றும். வினைச் சொற்களுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை,

> '' வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும் ''

எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது. இதன்படி, முருகனை-முருகனால்-முருகனுக்கு என்றாற் போலப் பெயர்ச்சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏற்றுவரும். ஆனால் வினைச்சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏற்று வருவதில்லை. வந்தான்-வருகின்றான்-வருவான் என்றாற் போல, வினைச்சொற்கள் காலம் காட்டிவரும். பெயர்ச் சொற்கள் காலம் காட்டும் இயல்புடையன அல்ல. எனவே, வினைச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏலாமல், காலம் காட்டிவரும் இயல்புடையன என்பது, இந்நூற்பாவின் திரண்ட பொருள்.

இனி இதனைக் கூர்ந்து நோக்கின், வேறொரு சிறந்த பொருளும் இதன்கண் அமைந்திருத்தல் காணலாம். நாம் செய்யும் ஒவ்வொரு செயற்கும், அதற்குரிய பயன் திண்ணமாக உண்டு. நற்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய நன்மையையும், தீச்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய தீமையையும் அடைந்தே தீருவர். ''வினை எனும் சொல் செயலையும், அதன் பயனையும், அப்பயனைத் தரும் தெய்வத்தையும் முறையே குறிக்கும். அவரவர் செயலுக்கு ஏற்பப் பயன்களை எய்துவிக்கும் பால்வரை தெய்வமானது (சொல்-57), வினைப்பயன்களை எய்துவிக்குங்கால், செல்வர், வறியர், கற்றார், கல்லார், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பன போன்ற வேற்றுமைகளைச் சிறிதும் கருதுவதில்லை. வினைப்பயன்கள், வினை செய்தோரை அடைந்தே தீரும். ஆயினும் வினைப்பயன்கள், ஒரு போழ்தத்தேயோ உடனடியாகவோ அன்றி, அவ்வவற்றிற்குரிய காலங்களிலேயே முறைப்படி வந்தெய்தும்...(5)'' எனப் பிறிதொரு சிறந்த தத்துவ நூற்பொருளும், இந்நூற்பாவின்கண் அமைந்து விளங்குதல் காணலாம்.

தெய்வ வழிபாடு :

(10) உணவும் நீரும் காற்றும் நீராடலும் மருந்தருந்தலும் உடல்வாழ்விற்குப் பலவகை நலன்களை விளைவித்தலைப் போல, நமது உயிர் வாழ்விற்கு வழிபாடு மிகப் பெரிதும் இன்றியமையாததாகப் பெரு நலங்களைப் புரிகின்றது. அது பற்றியே, இற்றைக்குச் சற்றேறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே,

> '' வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
> பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
> பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே ''

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் வழிபாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

உலக மக்களாயினார் ஒவ்வொருவர்க்கும் வழிபாடு மிக மிக இன்றியமையாத தொன்று என்பார் ''வழிபடு'' என்றும்; அது மனிதரையோ பிறபிற பொருள்களையோ பற்றி நிகழாமல், ஒப்புயர்வற்ற தெய்வத்தைக் குறித்தே நிகழ்த்தப்படுதல் வேண்டும் என்பார் ''தெய்வம்'' என்றும்; வழிபடுவோரை வழிபடப் பெறும் தெய்வம் காத்தருள்தல் திண்ணம் என்பார் ''நிற்புறம் காப்ப'' என்றும்; வழிபாட்டின் பயனாக எல்லா வகையான எத்தகைய விழுமிய செல்வங்களையும் எய்தப் பெறுதல் இயலும் என்பார் ''பழிதீர் செல்வமொடு'' என்றும்;

---

"The classfication of nouns in Tamil is decidedly more philosophical; for the difference between rational beings and beings or things which are destitute of reason is more momentous and essential than any difference that exists between the sexes."

—Dr. Robert Calwell,
Comparative Grammar.

(5) "The philosophic meaning of the Sutra is distinct. The Karma does not transform with transmigration of souls but remain intact and lies dormant waiting for the proper time according as the Karma is Akamiya or Prarathva or Samchitha"

—P. V. Manickam Naicker

"மூவேழ் சுற்றம் முரண்உறு நரகிடை ஆழா மேஅருள் அரசே போற்றி" என மணிமொழியார் பாடியதற்கு ஏற்ப, வழிபடுவோர் மட்டுமேயன்றி, அவர்தம் வழியாக வரும் உற்றூர் உறவினரும்கூட, வழிபாட்டின் பயனைச் சிறப்புற்றுப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பார் "வழிவழிச் சிறந்து பொலிமின்" என்றும், நுண்ணிதின் எண்ணியுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்வாராயினர்.

தொல் முதற்பொருள் :

11 ஆசிரியர் தொல்காப்பியர், தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாகப் பகுத்தார். அவற்றுள் நிலத்தையும் காலத்தையும் 'முதற் பொருள்' எனக் குறித்தார். நிலத்தை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நான்காகப் பகுத்து, அவற்றிற்கு முறையே மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன், சிவபிரான்) வருணன் என்னும் தெய்வங்களைக் குறித்தார். தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமை பற்றி, முதற்பொருளாகிய நிலத்தைக்கூற வந்த இடத்திலேயே, கருப்பொருளாகிய தெய்வ வழிபாட்டையும் சேர்த்து இயைத்தே, தொல்காப்பியர் கூறியருளியுள்ளார். காலத்தெய்வம், பால்வரைதெய்வம் முதலிய வேறு பிற கடவுளரையும்கூட, அவர் குறிப்பிட்டிருத்தல் காணலாம். (தொல் சொல்–58).

அறுவகை வாழ்த்து :

12. இனி, பொருளதிகாரப் புறத்திணையியலினுள் 81-ஆம் சூத்திரத்தில், 'அமரர்கண் முடியும் அறுவகையானும்' என்றமையால், வானவர் உட்பட ஆறுவகையினரை வாழ்த்துதல் பண்டைய மரபாக இருந்தது. அவர்கள் முறையே, வானவர் முனிவர் ஆனினம் மழை அரசன் உலகம் எனப்படுவர். இத்தொல்காப்பிய நூற்பாவை ஒட்டியே,

> "வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்;
> வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
> ஆழ்க தீயது; எல்லாம் அரன்நாமமே
> சூழ்க; வையக மும்துயர் தீர்கவே"

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல், அமைந்திருக்கக் காண்கின்றோம்.

கொடிநிலை கந்தழி வள்ளி :

13. பண்டைக் காலத் தமிழ் மக்கள் கடவுள் நம்பிக்கையும், கடவுள் வழிபாடும் உடையவர்களாக விளங்கியிருந்தனர் அவர்கள் முழுமுதற் கடவுள் வழிபாடு செய்து போந்ததுடன், அவரொடு தொடர்பு படுத்தி இயற்கைப் பொருளாகிய ஞாயிறு திங்கள் தீ என்பனவற்றையும் ஏற்றபெற்றி போற்றி வழிபட்டு வந்தனர். இவ்வுண்மையினை,

> "கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

எனவரும் புறத்திணை இயல் 88 ஆம் நூற்பாவினால் அறியலாம். கொடிநிலை (ஞாயிறு), கந்தழி (தீ), வள்ளி (திங்கள், மழை) என்ற மூன்றும், கடவுள் வாழ்த்தொடு சேர்த்துக் கருதப்பெறும் நிலையில் பொருந்திவரும் என இத்தொல்காப்பிய நூற்பாக் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினைத் தழுவியே சிலப்பதிகாரத்தில், 'ஞாயிறு போற்றுதும்' 'திங்களைப் போற்றுதும்' 'மாமழை போற்றுதும்" என்னும் வாழ்த்துக்கள், அமைந்தன எனலாம்.

இனி, இந்நூற்பாவுக்கே "கடவுள் வாழ்த்து, முதற்கண் அமையும்; பின்னர் அதனையடுத்துக் கொடிநிலை (வான்சிறப்பு), கந்தழி (நீத்தார் பெருமை), வள்ளி (அறன் வலியுறுத்தல்) என்னும் வடு நீங்கு சிறப்பின மூன்றும், கடவுள் வாழ்த்துடன் சேர்த்துக் கருதப்பெறும் நிலையில் வரப்பெறும்" என வேறொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். இங்ஙனம் பொருள் கொள்ளுதல் ஆசிரியர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் நூலின் அமைப்பிற்கு மிகவும் பொருந்தி நிற்கின்றது.

கோயிலும், படிமையும் :

14. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழகத்திற் கோயில்கள் இருந்தன. "இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்" எனவரும் எழுத்ததிகார நூற்பா, கோயில் என்னும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்திருத்தலால், இவ்வுண்மை செவ்விதின் உணரப்படும். அக்கோயில்களில் தெய்வத் திருவுருவங்கள் இருந்து வந்தன; அவற்றிற்குப் பூசைகளும் விழாக்களும் நிகழ்ந்து வந்தன. அவைகள் முறைப்படி தவறாமல் நிகழ்த்தப்பெற்று வருகின்றனவா? என்று, அரசர் அல்லது தலைவர்கள் கண்காணித்து அறப்புறங்காவல் புரிந்து வந்தனர். இவ்வுண்மை,

> "மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
> முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
> பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
> இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

எனவரும் நூற்பாவில் "படிமை (பிரதிமை, Idol ஆவது, தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்து அமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலியன" என, ஆசிரியர் இளம்பூரணர் விளக்கவுரை வரைந்திருத்தல், கடவுளரின் திருவுருவ வழிபாடு முதலியன, தொல்காப்பியர்க்கு உடன்பாடேயாம் என்பதனை வலியுறுத்தும்.

அறுவகைச் சமயம் :

15 அம்மை வழிபாடு, விநாயகர் வழிபாடு, முருகன் வழிபாடு, சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கதிரவன் வழிபாடு என்னும் அறுவகை வணக்கமே, பிற்காலத்திற் பேசப்பெற்ற "அறுவகைச் சமயம்" என்னும் வழக்கத்திற்கு அடிப்படையாக அமைவதாயிற்று. இந்த அறுவகைத் தெய்வங்கட்குப் பூசனை புரிவோரையே

> "அறுவகைப் பட்ட
> பார்ப்பனப் பக்கம்"

எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருத்தல் கூடும். "ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழில்களைச் செய்பவர்கள்" என்னும் நச்சினார்க்கினியர் உரைக்கு வேறான புதிய நல்ல பொருள் இது எனலாம்.

தாபதப் பக்கம் :

16. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பெற்றதாகிய தொல்காப்பியப் புறத்திணையியலின்கண் உள்ள வாகைத்திணைப் பிரிவில், "நாலிரு வழக்கில் தாபதப் பக்கம்" என, ஒரு பகுதி கூறப்பட்டுள்ளது. அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

"நாலிரு வழக்கில் தாபதப் பக்கமாவது முக்காலமும் உணர்ந்த முனிவரர் அருளிய ஆகமத்தின் வழி நின்று, வீடு பெற முயல்வோருக்கு உரியவாகிய, எண் வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறுபாடு. இவ் வெட்டும் தவஞ் செய்வோருக்கு உரியன என்றும், தவம் செய்து யோகம் புரிவோர்க்கு உரியன என்றும், இரு வகைப்படும்.

அவற்றுள் தவஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன ஊண் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பப் பொறுத்தல், இடம் வரையறுத்தல். ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய் வாளாமை என்பன.

இவற்றிற்கு உணவிலும் நீரிலும் சென்ற மனத்தைத் தடுத்தல், ஐந்தீ நாப்பணும் நீர் நிலையிலும் நிற்றல், தாமரையும் ஆம்பலும் ஆமையுமாகிய ஆசனத்திருத்தல், உண்டற்காலை உரையாடாமை, வாய்வாளாமை எனப் பொருள்.

இனி யோகஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன: இயமம், நியமம், ஆசனம், வளிநிலை (பிராணயாமம்), தொகைநிலை (பிரத்தியாகாரம்), பொறைநிலை (தாரணை) நினைதல் (தியானம்), சமாதி என்பன, என்று மிகவும் விரிவாக விளக்கியுள்ளார். இவற்றால் தொல்காப்பியர் காலத்திற்கும் எத்துணையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தவஞ்செய்வோரும், தவஞ்செய்து யோகம் புரிவோரும் ஆகிய பலர், தமிழகத்தில் இருந்தனர் என்பது தெரிகின்றது. (5)

வேண்டிய கல்வி :

17. இனி, தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் கல்வியிற் பிரிவு பற்றிய காலவரையறையினை யுணர்த்துவது,

"வேண்டிய கல்வி
யாண்டுமூன்று இறவாது"

என்னும் தொல்காப்பிய நூற்பா. இதன்கண் உள்ள 'யாண்டு' என்னும் சொல்லைக் காலப் பெயராகக் கொண்டு, "கல்வியிற் பிரிவுக் காலம் மூன்றியாண்டு கடவாது" என்று பொருள் கூறுவர் இளம்பூரணர். ஆனல் நச்சினர்க்கினியரோ, திருவள்ளுவர் சாந்துணையும் கற்குமாறு பணித்தலின், கல்வியிற் பிரிவுக்குக் கால வரையறை செய்தல் பொருந்தாது, கல்விக்குக் கால வரையறையில்லை எனக் கருதி 'ஆண்டு' எனப் பிரித்துக் 'கல்வியிற் பிரிவாகிய அவ்விடத்தே' எனப் பொருள் கொண்டு, அக்கல்வி யெல்லாம் மூன்று பதத்தை அல்லது பொருளைக் கடவாது எனப் பொருள் விளக்குகின்ருர். தலைவன் ஓதற்பிரிவின்கண் இறை-உயிர்-தளை (பதி-பசு-பாசம்; சித்து-அசித்து-ஈசுவரன்; சகம்-சீவன்-பரம்; அது-நீ-ஆனய்; தத்-துவம்-அசி) என்னும் முப்பொருள்களைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுவான் எனக் குறிப்பிடுகின்ருர்.

"பலகலை ஆகம வேதம் யாவையினும்
கருத்துப் பதிபசு பாசம் தெரித்தல்" —சிவப்பிரகாசம்.

"சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள; மறையெலாம் மொழிய நின்றன;
ஆன்ற தொல்பதி, ஆரு யிர்த்தொகை,
வான்திகழ் தளைஎன வகுப்பர் அன்னவே" —கந்தபுராணம்.

சிறந்தது பயிற்றல் :

(18) இங்ஙனமே, முன்னர் இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும், பின்னர் இறையருட்பேற்று முயற்சியில் தலைப்படும் திறம் இது எனப் பண்டைத் தமிழ்ச் சான்ரோர்கள் தெளிவுறக் கண்டுணர்ந்து வரையறை செய்திருந்தனர்.

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்பது, தொல்காப்பியக் கற்பியற் சூத்திரம். "காதல் அன்பால் துய்த்த காமஇன்பம் நிறைந்து, கடைக்கொண்ட வாழ்நாள் எல்லையின் நடுக்காலத்தே, தமக்குக் காவலாய் அமைந்த தம் புதல்வரோடு கூடியிருந்து, தாம் அதுகாறும் செய்துபோந்த அறத்தை இனித் தாம் செய்யலாகாமையின், தமக்காக அவ்வறத்தைச் செய்யும் சுற்றத்தாருடன் அமர்ந்து, குடும்பத் தலைமகனும் தலைமகளும் சிறந்ததாகிய தவத்தில் தமது உணர்வினைப் பயிலச் செய்தல், தாம் அதுகாறும் செய்துபோந்த காதல் மனைவாழ்க்கையின் பயனாகும்" என்பது, இந்நூற்பாவின் திரண்ட சிறந்த தெளி பொருள்.

தவநெறியும், பேரின்பமும் :

(19) புறச் சமயத்தவர்களின் செயற்கை நெறித் துறவொழுக்கத்திற்கும், பண்டைத் தமிழ் மக்களின் பண்பட்ட இயற்கைத் தவநெறி வாழ்க்கைக்கும், உள்ள இடையீடு மிகப் பெரியதாதலை, இவ்வாற்றால் உணரலாம்.

இதனாலேயே, திருவெண்ணெய் நல்லூரிற் சிவபெருமானல் தடுத்தாட் கொள்ளப் பெற்ற சுந்தரர், திருத்துறையூரில் "தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே" என்று தவநெறியை வேண்டிப் பெற்றன ராயினும், பண்மயத்த மொழிப் பரவையாரையும், மான் திகழும் சங்கிலியாரையும் மணந்து கொண்டு, பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசில்,

"செல்வநல் ஒற்றி யூரன்
செய்யசங் கிலியால் ஆர்த்து
மல்லலம் பரவை தன்கண்
மாழ்குற அமிழ்த்து மேனும்,
அல்லும்நன் பகலும் நீங்கா
தவன்மகி ழடியில் எய்தி
நல்லஇன் படைந் திருப்பன்
நம்பி ஆரூரன் தானே"

என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து போற்றிப்பாடும் நிலையில் வாழ்ந்திருந்த பான்மை, நுண்ணிதின் எண்ணியுணரற்பாலது.

(5) "At the very dawn of Tamilian civilization of which we catch a glimpse through the Tholkappiam, the oldest Tamil work extant, we find the views about God, soul and matter and salvation to have become thoroughly sound and complete.

As our knowledge of these facts deepens, as our ideas about their relations expand, we find the conclusions reached by our fore-fathers about their nature and relations, are daily receiving corroborations not only from the modern biological, geological and other scientific discoveries but also from the philosophical views worked out and held by such eminent thinkers as William James, Bergson, Lodge, Ward and others"

— Maraimalai Adigal.

## இறைவனும், நூலும் :

(20) ஆசிரியர் தொல்காப்பியனார் இறைவனுக்குரிய இலக்கணத்தினை மிகச் சிறப்பாகவும் நுட்பமாகவும் விளக்குகின்றார். "பிறவிகள்தோறும் சிறிது சிறிதாய் அறிவு விளங்கப்பெறும் சிற்றுயிர்கள் போலாது, இயல்பாகவே விளங்கப்பெறும் பேரறிவு உடையவனாகிய இறைவன் ஒருவன், இவ்வுயிர்களின் வேறாய் உள்ளனன்; அவன் இயல்பாகவே விளங்கி மிளிரும் அறிவினனாய்த் திகழ்கின்றான். அதற்குக் காரணம உயிர்களின் வினைக்கு ஏதுவாகிய மலத்தாற் பற்றப் படாமல், பெருந்தூய்மையும் நுட்பமும், மேன்மையும் உடையவனாய் அவன் இருத்தலேயாகும்" என்னும் பற்பல கருத்துக்களும் தெற்றென விளங்க, ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல் நூலாகும்"

என்று அருளிச் செய்திருத்தல், நாம் நம்முடைய கருத்திற் பெரிதும் பதிக்கற்பாற்று.

சிற்றுயிர்களும் இறைவனும் ஒன்றே என்றும்; அற்றன்று சிற்றுயிர்கள் பொய், இறைவனே மெய் யென்றும்; அதுவும் அன்று, இறைவன் ஒருவனே குடங்கள் தோறும் காணப்படும் திங்களின் சாயல்போல உடம்புகள்தோறும் உயிர்களாகக் காணப்படுகின்றனன் என்றும்; அதுவும் பொருந்தாது, நெருப்பினின்று பொறிகள் தெறித்தாற்போல இறைவனிலிருந்தே சிற்றுயிர்கள் உண்டாயின என்றும்; அதுவும் பொருத்தமன்று, ஒன்றுமில்லா வெறும்பாழே (சூனியமே) உயிரும் இறைவனுமாம் என்றும், பிற்காலத்துச் சமயத்தார் பற்பலரும், இறைவனின் இயல்பையும், உயிரின்இயல்பையும் உலகவழக்கோடும் நூல்வழக்கோடும் சார்த்தி வரையறுத்து உணரமாட்டாமல், பெரிதும் மயங்கிக் கலந்து கூக்குரலிட்டுக் காதிமோதி வாதாடித் தம்மிலே பூசலும் போரும் கலாமும் விளைத்து நிற்ப; இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே உயிரின் தன்மையையும், இறைவனின் தன்மையையும், இத்துணைப் பொருத்தமாக வரையறுத்துத் தெளிவுற விளக்கியருளிய ஆசிரியர் தொல்காப்பியனார்தம் அஃகியன்ற அறிவின் திறத்தை நாம் எங்ஙனம் புகலவல்லோம்?

இனி, இந்நூற்பாவில் இறைவன் மக்களுக்கு மெய்யுணர்வு தோற்றுவித்தற் பொருட்டு, அவர்கள்மேற் கொண்ட அருளிரக்கத்தால் முதல் நூல் அருளிச் செய்தான் என்று தொல்காப்பியர் இனிது உரைத்தலால், இறைவன் பேரிரக்கம் உடையவன் என்பதும், அவன் முற்காலத்தே தெய்வத் தமிழ் மொழியின்கண் முதல்நூல் அருளிச் செய்தான் என்பதும், அதனைப் பின்பற்றி அவன்றன் அருள்பெற்ற சான்றோர்கள் பற்பலரும் வாழையடி வாழையாக வந்துதோன்றி அவ்வக் காலத்திற்கு ஏற்பப் பலவகை நூல்களை அருளிச் செய்து வருகின்றனர் என்பதும், பிறவும் விளங்காநிற்கும்.

## ஒன்றி உயர்ந்த பாலது ஆணை :

21. இவ்வுலகின்கண் எல்லோரையும் எல்லாவற்றையும் மேலிருந்து இயக்கி வருகின்ற இறையருள் ஆணையாகிய நியதி தத்துவம் என்னும் ஊழ் என்ப தொன்று இருந்து வருகின்றது. "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்: அன்றி அது வரினும் வந்தெய்தும்: ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்" என்பது ஒளவைப் பாட்டியின் அருளுரை. "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்று இளங்கோவடிகளும் தம் நூலில் ஆங்காங்கே வற்புறுத்திச் செல்வர். கலை வித்தை அராகம் என்னும் மூன்றாலும், தொழில் அறிவு இச்சை என்னும் மூன்றும் முறையே விளங்கிப் போக நுகர்ச்சிக்கண் செல்லும் ஆன்மாக்கள் பலவும், உயர்ந்த போகத்தின் விழைவும், இழிந்த போகத்தின் வெறுப்பும் உடையன வாய்த் திகழும். அதனாற் பிறரால் ஈட்டப்படும் நல்வினைப் பயனைக் கவரவும், தம்மால் ஈட்டப்படும் தீவினைப் பயனை நீக்கவும், அவ் உயிர்கள் எண்ணா நிற்கும். ஆனால் அங்ஙனமாக நிகழவொட்டாமல், அவரவரால் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு, அரசர் ஆணைபோல் நியமித்து நிறுத்தும் இறையருளின் இயற்கை ஆணையே, நியதி தத்துவம் ஆகிய ஊழ் எனப்படும்.

ஒருபாற் கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசின் ஆணையில்வழி எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து செல்லுதல்போல, நியதி தத்துவம் ஆகிய ஊழ் என்னும் இயற்கைச் சட்டம் இல்லாதவழி, ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவர் நுகர்வதாய் முடியும். ஆதலின் நியதி தத்துவம் என்னும் ஊழாகிய இயற்கைச் சட்டம் ஒன்று உண்டு என்பது, பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் கண்ட முடிபு. இதனைப் 'பால்வரை தெய்வம்' என்று தொல்காப்பியரும், 'வகுத்தான் வகுத்த வகை' என்ற திருவள்ளுவரும் சிறப்பாகக் குறிப்பிட்டிருத்தல் காண்லாம்.

தலைவன் தலைவி ஆகிய இருவரும், பல பிறவிகளில் ஒருவர்க்கொருவர் உரிமையுடையவராய்த் தொடர்ந்தியைந்து மணந்து மகிழ்வர் என்பது, திறவோர் காட்சியில் தெளிந்த செய்தி. அதனைக் குறித்தற்கே தொல்காப்பியர், தலைவன் தலைவியரை ஆங்காங்கே 'கிழவன்' 'கிழத்தி' என்னும் சொற்களால் விதந்து சுட்டிக் கூறுவர்.

> "அண்டர்பிரான் திருவருளால்
> அயலறியா மனம்விரும்பப்
> பண்டைவிதி கடைக்கூட்டப்
> பரவையாரும் கண்டார்"

எனச் சேக்கிழார் பெருமான் பாடுதல்போலத், தலைவனும் தலைவியும் பால்வரை தெய்வமாகிய ஊழியலின் வழியிலேயே தம்முள் ஒருவரையொருவர் சந்தித்துக் கண்டு கலந்து மகிழ்கின்றனர் என்பது, நம் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர்கள் கண்டுணர்ந்த வாழ்வியற் சமய தத்துவக் கொள்கையாகும்.

> "ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
> ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
> மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே"

எனவரும் தொல்காப்பியச் சூத்திரம், இத்தகைய பற்பல தத்துவநுட்பக் கருத்துக்களைத் தன்னகத்தே பொதிந்து கொண்டு நிற்றல் காணலாம்.

தத்துவ ஆராய்ச்சி :

22. சமய தத்துவ நூல்கள், உலகத்தோற்றமும் அமைப்பும் இயக்கமும் பிறவும் பற்றியெல்லாம் ஆராயும் தன்மையுடையன (Cosmogony, Cosmology). சமய தத்துவ ஞானிகள், இவ்வாராய்ச்சியிற் பெரிதும் தலைப் பட்டு நுண்ணிய உண்மைகளைக் காண முயல்வர். மண் திணிந்த நிலமும், நிலன் ஏந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், வளித்தலைஇய தீயும், தீமுரணிய நீரும் ஆகிய ஐம்பெரும் பூதத்தியற்கையும் செயலும் பற்றி, நம் முன்னோர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து கண்டுணர்ந் திருக்கின்றனர். 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்வகை தெரிவான் கட்டேயுலகு' என்பது திருக்குறள். இன்னோரன்ன பலப்பல தத்துவ நுண் பொருள் ஆராய்ச்சிகளுக்குரிய அடிப்படை வித்துப் போல,

'' நிலம்நீர் தீவளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்,
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்''

எனவரும் தொல்காப்பிய மரபியற் சூத்திரம் அமைந் திருத்தல், அறிஞர்கள் கருதியுணர்ந்து பெரிதும் மகிழத் தகுவதாகும்.

இந்தத் தொல்காப்பிய மரபியல் நூற்பாவினால், பண்டைத் தமிழ்மக்கள் சமய தத்துவ ஆராய்ச்சிகளில் (Metaphysics) தலைசிறந்து திகழ்ந்திருந்தமை புலனா கின்றது. "மூன்றன் பகுதி", "அறமுதலாகிய மும்முதற் பொருள்'' எனவரும் தொல்காப்பிய நூற்பாத் தொடர் களால், 'அறத்தாற் பொருள் ஈட்டிப் பொருளால் இன்பம் துய்த்து வாழ்தல் வேண்டும்' என்னும் உயரிய குறிக்கோள்நெறி, பண்டைத் தமிழ் மக்களாற் கடைப் பிடிக்கப் பெற்றமை தெற்றெனத் தெரிகின்றது. "மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" என்பதனால், பண்டைய நம் தமிழ் மன்பதை யில், (முக்காலமும் உணரவல்ல தக்கோர்கள் திரிகால ஞானிகள் பலர், இருந்து வந்தமையும் புலப்படு- கின்றது.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால், அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் இயல்பு வாய்ந்த, நிறை மொழியை யுடைய அருளாளர்களாகிய சமயநெறிச் சான்றோர்கள் பலர், வாழ்ந்து வந்தனர் என்பதும், தமிழ் மொழியின் கண் மந்திரங்கள் பல உண்டு என்பதும் பிறவும் விளங்குகின்றன.

காட்டலாகாப் பொருள் :

23. தொல்காப்பியம் மொழிக்கு இலக்கணம் கூறும் நூலேயாயினும், அதன்கண் ஆங்காங்கே கடவுள் இலக்கணமும் அழகுற நுட்பமாக அறிவுறுத்தப் பெற் றுள்ளது. "ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா, கற்பும் ஏரும் எழிலும் என்றா, சாயலும் நாணும் மடனும் என்றா, நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு, ஆவ யின் வரூஉம் கிளவி எல்லாம், நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது காட்டலாகாப் பொருள என்ப" எனவரும் தொல்காப்பியப் பொருளியல் நூற்பா,

''அப்படியும் அந்நிறமும்
அவ் வண்ணமும்
அவன் அருளே கண்ணாகக்
காணின் அல்லால்,
இப்படியன் இந்நிறத்தன்
இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக்
காட்டொணாதே"

எனத் திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த திருமொழியின் பொருளை வலியுறுத்துதல் காணலாம். அன்பு, அறிவு, ஆற்றல், அருள் முதலிய பண்புகள் எங்ஙனம் நெஞ்சுகொளின் அல்லது காட்டலாகாப் பொருள்களாகத் திகழ்கின்றனவோ, அங்ஙனமே இறைவனும் இலங்குகின்றான் என்பது, ஒப்புயர்வற்ற தோர் அரும்பெறற் சமய தத்துவ உண்மையாகப் போற்றப்படுதற்குரிய தொன்றன்றோ ?


முடிவுரை :

இங்ஙனம் நுணுகி ஆராய்ந்தால், தொல்காப்பியம் என்னும் நம்முடைய பழம்பெருந் தமிழிலக்கண நூலின் கண், சமய தத்துவ நுண்பொருள்கள், பற்பல காணப் படுதலை யாவரும் உணரலாம். எனவே சமய வுண்மை களும், தத்துவக் கருத்துக்களும், மிகவும் பிற்காலத்தில், வேற்றுவராலேயே, தமிழ் மக்களிடையிற் புகுத்தப் பெற்றன என்று ஒருசிலர் கூறி வருவது உண்மைக்குப் புறம்பானதென்பதும்; உயரிய சமயவுண்மைகளும், நுண்ணிய தத்துவக் கருத்துக்களும், மிகப் பழங்காலத் திலேயே தமிழ் மக்களிடையே நிலவி வந்தன என்பதும்; அவைகள் நம்முடைய தமிழினத்தின் நுண்மாண் நுழை புலனையும், கலைநாகரிகப் பண்பாட்டு நலங்களையும், மலையிலக்கென விளக்கும் அரும்பெரும் சான்றுகளாம் என்பதும் பிறவும், ஐயுறவின்றித் தெளியப்படும்.

(வெண்பா)

நம்மருமைச் செந்தமிழின் நல்லமைப்பை ஆராய்ந்தால்,
செம்மைமிகு நற்றமிழர் சித்தாந்த—மெய்ம்மைகள்
எல்லாம் பொதிந்தொளிர்தல், யாரும் இனிதுணர்ந்து
நல்லோராய் வாழ்வர் நயந்து.

—ந. ரா. முருகவேள்.



# கவலை தீர்த்தருள்வாய் போற்றி

(திருமதி சௌந்தராகைலாசம் அம்மையார்)

எங்கெவர்க் கெதனைச் சொன்னால்
    இசைவுறும் எனத் தெரிந்து
அங்கவர்க் கதனைச் சொல்ல
    அமுதவாய் திறந்து, ஞானம்
பொங்கவைக் கின்ற எங்கள்
    புன்னகை முகத்தன்; கையில்
சங்குசக் கரத்தன் மெத்த
    சாகசக் குணத்தன் போற்றி! (1)

குழலிலே இசைவெள் ளத்தைக்
    கொணர்ந்திடும் கண்ணா! உன்றன்
நிழலிலே ஒதுங்கி நின்றால்,
    நிம்மதி கிடைக்கும் ; மாயச்
சுழலிலே சிக்கி என்றும்
    துயர்பட நேர்ந்தி டாது;
அழலிலே புழுவாய் நெஞ்சம்
    ஆகியே சோர்ந் திடாது! (2)

அலைதரும் கடலின் வண்ண
    அழகனே! அலையா துள்ளம்
நிலைதரும் துயரை நல்கும்
    நிமலனே! நிலையாச் செல்வ
மலைதரும் கவர்ச்சிக் குள்ளம்
    மசிந்திடா உறுதி கொள்ளும்!
கலைதரும் ஓம்க்லீம் க்ருஷ்ணா
    சுதர்ஸனக் கண்ணா போற்றி (3)

இறுதியில் என்ன வந்திங் (கு)
    எய்துமோ? நமக்கென் கின்ற
புழுதியில் கிடந்து நெஞ்சம்
    புரளுதல் தவிர்ந்து, செய்கை
உறுதியில், கடமை என்னும்
    உணர்வினில், தொடர்ந்திங் கென்றும்
முழுகிடச் சொன்ன ஞான
    முதல்வ!கோ விந்த போற்றி. (4)

வருவாய்எங் கெங்கும் என்றன்
    வாழ்க்கைக்குத் துணையாய்! எங்கள்
குருவாயூர் அப்பா! புல்லாங்
    குழல்வாயூர்ந் திருக்கக் காட்சி
தருவாய்! நெஞ் சுருகித் தாளில்
    தலைவைத்துத் தவஞ் செய்வார்க்குக்
கருவாயூர்ந் துழலு கின்ற
    கவலைதீர்த் தருள்வாய் போற்றி! (5)

# செய்யாறு வேதபுரீசுவரர் திருக்கோயில்

திரு. மு. முத்துகிருஷ்ணன், எம். ஏ. பி. டி.,

தொண்டை நாட்டில், தேவாரத் திருப்பதிசம் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்ருகத் திகழ்வது, செய்யாறு வேதபுரீசுவரர் கோயில். இத்தலம் காஞ்சீபுரத்துக்கு மேற்கே பதினெட்டுக் கல்தொலைவில் இருக்கின்றது. சேய் என்னும் முருகப்பெருமான், தன் வேலினல் உண்டாக்கிய ஆறு ஆதலின், சேயாறு என்னும் காரணப்பெயர் பெற்ற ஆறு, இப்போது செய்யாறு என மருவி வழங்கப்படுகின்றது. ஆற்றின் பெயரை ஒட்டியே ஊரின் பெயரும், இப்போது "செய்யாறு" என மருவி வழங்கி வருகின்றது.

எனினும், இத்தலத்தின் பழமையான பெயர், திருவோத்தூர் என்பதாகும். ஓதப்படுவதனல், வேதம் 'ஓத்து' எனக் காரணப்பெயர் பெற்றது. இத்தலத்தில் சிவபெருமான் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தை ஓதி வைத்துத் திருவருள்புரிந்தார் என்பது தலவரலாறு. "திருவோத்தூர்" என்னும் தலப்பெயர், இப்போது திருவத்தூர், திருவத்திபுரம் என வழங்கப் பெற்று வருகின்றது. இக்கோயில் பெரியது. கோபுரமும் பெரியதாக உள்ளது. இக்கோயிலின் உள்ளே ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும், தனியே அழகுற அமைந்திருக்கின்றது. இவ்வமைப்பு பண்டைக் காலத்திலேயே, சைவ-வைணவ சமரச உணர்வு நிலவி இருந்தமைக்குச் சிறந்த சான்ருகத் திகழ்கின்றது.

இத்தலத்தில் சூரியன் சிவபெருமானை வழிபட்டு அருள் பெற்ருன். சிவபெருமான் சூரியனுக்கு உலகையெல்லாம் விரைவில் சுற்றி வருதற்கேற்ற ஒற்றைச் சக்கரத் தேரை அளித்தார். மற்றும் இங்கு முருகப் பெருமான், திருமால், இலக்குமி ஆகியோரும், சிவபெருமானை வழிபட்டு அருள் பெற்றனர். இங்குள்ள இறைவனுக்கு வேதநாதேசுவரர் என்பது பெயர். இறைவி இளமுலைநாயகி எனப்போற்றப் பெறுகின்ருள். தை மாதத்தில் இங்குப் பெரிய திருவிழா நடைபெறும். தை மாதத்தில் இரதசப்தமியின்போது, இங்கு நடைபெறும் தேர்விழா மிகவும் சிறப்புடையது. அதுபோது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்குத் திரளாகக்கூடி வழிபட்டு மகிழ்வர்.

சைவ சமய ஆசிரியர்களுள் ஒருவராகிய திருஞான சம்பந்தர், இங்கு எழுந்தருளியபோது, அவரால் ஓர் அற்புத அருட்செயல் நிகழ்த்தப் பெற்றது. சிவனடியார் ஒருவர் பனைமரத்தோப்பு ஒன்று வைத்து வளர்த்து வந்தார். அவைகள் அனைத்தும் ஆண் பனைகளாகவே வளர்ந்தன. அதனல் அவர் விரும்பியபடி அவற்றினின்று காய்கள் ஏதும் உண்டாகவில்லை. அது கண்டு, அச்சிவனடியார்பால் அழுக்காறு கொண்ட ஊரவர் சிலர், அவரை இழித்துரைத்துப் பழித்து இகழ்ந்தனர். "நீர் சிவபெருமானை வழிபடுகின்றீரே. அவரால் உமக்கு என்ன பயன்? நீர் வைத்த பனைமரத்தோப்பு பயனில்லாமற் போயிற்று! நீர் வழிபடும் சிவபெருமான் அருளும் ஆற்றலும் உடையவராக இருந்தால், இவ்வாறு நிகழ்ந்திருக்குமா?" என அவரை ஏளனம் செய்தனர். அழுக்காறு காரணமாகத் தம்மை மட்டுமேயன்றி, தம் வழிபடு கடவுளாகிய சிவபெருமானையும் ஊரவர் சிலர் இகழ்வது கண்டு, அச்சிவனடியார் பெரிதும் மனம் வருந்திப் புழுங்கினர். திருஞான சம்பந்தர் எழுந்தருளியபோது, அவரிடம் தம் குறையை விண்ணப்பித்துக் கொண்டார். இரக்க உள்ளம்கொண்ட திருஞான சம்பந்தப் பெருமான்,

> " பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
> ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
> ஓத்தூர் மேயவொளி மழுவாளங் கைக்
> கூத்தீர் உம்ம குணங்களே"

எனத் தொடங்கும் சிறந்த திருப்பதிகத்தினை அருளிச் செய்தார். அதன் இறுதிப் பாடலாகிய திருக்கடைக் காப்பில்,

> " குரும்பை ஆண்பனையீன் குலை யோத்தூர்
> அரும்பு கொன்றை யடிகளைப்
> பெரும் புகலியுள் ஞானசம்பந் தன்சொல்
> விரும்புவார் வினை வீடே "

என அவர் அருளிச் செய்தபடி, ஆண்பனைகளெல்லாம் இறைவனருளால் பெண் பனைகளாக மாறிக் குலைகளை ஈன்றன. அது கண்ட ஊரவர் எல்லோரும் இறையருளை வியந்து துதித்தனர். இவ்வருள் நிகழ்ச்சியின் விளைவான பனை மரமே, இத்தலத்தின் புனித மரமாக அமைந்தது. இதற்கு அடையாளமாக இப்போதும் வெளிச்சுற்றில் நாலைந்து பனைமரங்கள் உள்ளன. அன்றியும் கல்லால் அமைத்த பனைமரத்தின் திருவுருவம் ஒன்றும், இத்திருக் கோயிலினுள் நிறுவி வழிபடப்பட்டு வருகின்றது. இஃது ஒருபாதி ஆண்பனை மரமாகவும், மற்றெரு பாதி பெண் பனைமரமாகவும், அமைக்கப் பெற்றுள்ளது.

இக்கோயிலில் பழமையான பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் கோயிலின் தினசரி வழிபாட்டிற்கும், நிவேதனத்திற்கும், பூந்தோட்டத்திற்கும், கோயிற் பணியாளர்களின் படித்தரத்திற்குமாக, நிலங்கள் பல வழங்கப் பெற்ற குறிப்புக்கள் தெரிகின்றன. கோயிலில் நந்தாவிளக்கு

அமைப்பதற்காகப் பலர் நன்கொடை அளித்துள்ளனர். மூன்றாம் குலோத்துங்கச் சோழன், இக்கோயில் இறைவனுக்கு விலைமதிப்புள்ள பல பொன் அணிகலன்களை வழங்கினான் என்றும், கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மற்றும் கேதாரநாதர் திருமடம் என்னும் பெயரில், ஒரு திருமடம் இருந்ததாகவும் ஒரு கல்வெட்டால் புலனாகின்றது.

இத்தலத்திற்கு இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர்க் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடலும் அமைந்துள்ளது.

"பவம்மாய்த்து ஆண் அது ஆகும்
பனைகாய்த்தே மணம் நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும்படி

சிவமாய்த் தேன் அமுது ஊறும்
திருவாக்கால் ஒளிசேர் வெண்
திருநீற் றால்அமர் ஆடும் சிறியோனே!

செழுநீர்ச் சேய்நதி ஆரம்
கொழியாக் கோமளம் வீசும்
திருவோத்தூர் தனில் மேவும் பெருமாளே"

என்று அப்பாடலில் வருகின்றது.

இதன்கண் ஆண்பனை பெண்பனையாகிய அருள் நிகழ்ச்சியும், இத்தலம் சேயாற்றங்கரையில் அமைந்திருப்பதும் குறிக்கப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தரின் தேவாரத்தினை அருணகிரிநாதர், "சிவமாய்த் தேன் அமுதூறும் திருவாக்கு" எனப் போற்றிப் புகழ்ந்திருத்தல் கருதி மகிழத்தக்கது. இத்தகைய சிறப்பு மிக்க செய்யாறு வேதபுரீசுவரர் திருக்கோயிலுக்குத் திருமுருக கிருபானந்தவாரியார் முதலிய பல பெருமக்களின் முயற்சியாலும் உதவியாலும், திருப்பணிகள் செய்யப் பெற்று வருவதுடன், விரைவில் கும்பாபிஷேக விழாவும் சிறப்புற நடைபெற உள்ளது. அன்பர்கள் தங்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வதுடன், கும்பாபிஷேக விழா நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு மகிழ்வார்களாக!

# புதிய கொடிக்கம்பம் நாட்டுவிழா

"சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடி கூறாய்—சாலவும்
ஏதிலார் துண்என்ன மேல்விளங்க ஏர்காட்டும்
கோதிலா ஏறாம் கொடி!".

—மணிவாசகர்

சென்னை சைதாப்பேட்டை திருக்காரணி அருள்மிகு திருக்காரணீசுவரர் திருக்கோயிலில், காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு நடைபெற்று வரும் இராச கோபுரத் திருப்பணி வேலையை ஒட்டி, அக்கோயிலிற் பழுதுற்றிருந்த பழைய கொடிக் கம்பத்திற்குப் பதிலாகப் புதிய கொடிக்கம்பம் நாட்டு விழா, 27—3—77 ஞாயிறு காலை 9-00 மணியளவில் திரு. நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் I.A.S அவர்களால், சிறப்புற நிகழ்த்தப் பெற்றது. அது போது சென்னைத் துணையாணையர் திரு. எம். சூரியராஜ் B.A., B.L. அவர்களும், "திருக்கோயில்" ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்களும் கலந்து கொண்டு, சிறப்புரை ஆற்றினர். உள்ளூர்ப் பொது மக்கள் பலரும் பெருந்திரளாக வந்திருந்து விழாவிற் கலந்து கொண்டு மகிழ்ந்தனர்.

# திருச்சிற்றம்பலக் கோவையார்

(கருத்துத் தொகுப்புச் சுருக்கம்)

(முற்றொடர்ச்சி)

(3) இடம் தலைப்பாடு:

(தலைவனும் தலைவியும் முன்னாள் சந்தித்த இடத்தில் வந்து கூடுதல்)

**தலைவன்:** "நெஞ்சமே! நீ வருந்தாது ஒழிக. தலைவியோடு நம்மிடை நிகழ்ந்த இப்புணர்ச்சியானது, நெருநலும் நம் அறிவோடு கூடிய முயற்சியால் வாய்த்ததன்று. தெய்வம் தர நிகழ்ந்தது. இன்னும் சிறிது முயன்றால், நிலைபெற்ற இவ்வொழுக்க நெறியைத் தந்த தெய்வம் தானே, இதனை மேலும் நன்கினிது முடித்து வைக்கும். ஆதலால், பொன்னைக் கொணர்ந்து எறிகின்ற நெடிய துறையிடத்து, மின்னலையுடைய மேகம் படியும் சோலைக்கண் செல்வோமாக". (49).

(4) மதிஉடம்படுத்தல்:

(தலைவன் தலைவியை அடைவதற்குத் தோழியின் அறிவைத் தன்வழிப்படுத்திக் கொள்ளுதல்)

**தலைவன்:** "தொண்டைக்கனி போலும் இதழையுடைய கொடிபோன்ற தலைவியைப் புல்லுதல், இனி நமக்கு எளிதன்று. அதனால், கூத்தப்பிரானை நினையாதாரைப்போல, யான் வருந்தும்படி என்னிடத்துத் தலைவியின் வேல்போலும் கண்கள் உண்டாக்கிய துன்பம் முழுவதையும், அவளது தோழியிடம் சென்று குறிப்பாகத் தெளியச் சொல்லுவேன்." (50).

[இங்ஙனம் பாங்கியை நினைந்து சென்ற தலைவன், தெய்வத்தின் அருளால், தலைவியும், தோழியும் ஓரிடத்தே எதிர்நிற்பக் கண்டான். கண்டு தனக்குள் எண்ணிக்கொள்கின்றான்]

"குவளைமலர்போன்ற கரிய கண்ணினையும், கொடிபோலும் இடையினையும் உடைய இத்தலைவியின் கடைக்கண், இத்தோழியைத் தன்னுடைய உயிரென்று குறிப்பாக உணர்த்திற்று. ஆதலின், இத்தோழியிடமே சென்று, தலைவியால் எனக்கு நிகழ்ந்த துன்பங்களை, யான் இப்பொழுதே சென்று சொல்லுவேன்". (51)

[என்குறை இன்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறுவேனாயின், இவள் மறுக்கவும் கூடும். அங்ஙனம் மறுக்காமல், இவள்தானே என்குறை இதுவென உணருமாறு, கரந்த மொழியால் சில கூறி, பின் குறையுறுவதே நன்றாம். ஆதலின், கானக வேட்டை கருதிச் சென்ற ஒருவன்போல, யான் அவ்விருவரிடமும் சென்று நின்று, என் காதல் தோன்றப் பின்வருமாறு பேசுவேன்]

"தில்லையான் மலையாகிய இவ்விடத்தில், தினைப்புனம் காவல் புரியும் சிறந்த பெண்காள்! வண்டுகள் ஒருங்கே மொய்க்க, மும்மதமும், இரண்டுகோடும் உடைய ஒரு பெரிய மதயானை வருவதை நீங்கள் பார்த்தீர்களா?? (52).

"தினைப் புறம் காவல் புரியும் சிறதத பெண்காள்! "தில்லைவரைப்பின் உள்ள இப்பொழிலிடத்தே, நுங்களது பெரிய கண்கள்போலும் கணையானது பாய்தலால், புண்பட்ட ஒரு கலைமான், இப்புனத்தின் அருகே எங்கேனும் வந்ததா? இது கூறீராயினும், நும் சிற்றூர்க்குச் செல்லும் நெறியை யாயினும் கூறுங்கள்". (53).

"கூத்தப்பிரானின் செயல்கள், ஒன்றோடொன்று முரண்படுவதாகத் தோன்றுகின்றன. அவன் தனக்குத் தக்க தையலைத் தன் இடப்பக்கத்தில் வைத்தான்; தன் அடியவர்களுக்குத் தகாத என்னை அவர்களுக்குக் கொடுத்தான். அணிதற்குத் தகாத பாம்பை அணிகலனாகக் கொண்டான். தனக்குத் தகுந்த தில்லையம்பலத்தைத் தனக்கு இடமாகக் கொண்டான். இத்தகைய அம்பலவனது கயிலைமலைக்கண் உள்ள நுமது சிற்றூர்க்குச் செல்லும் வழியாது? கூறுமின்கள்" (54).

"கயிலை மலையின்கண் உள்ள சோலைக்கண் நிற்கின்ற எழிற்கொம்பர் அன்னீர்! நீங்கள் இங்கே வாருங்கள். இம்மலைச் சூழலில் வாழ்பவர்களுக்குத் தங்கள் ஊரின் பெயரை உரைத்தால் அது பழியாகுமோ?" (55).

"நும்முடைய ஊரின் இயல்பு எத்தன்மையது? என்று வினவவும், நீங்கள் வாய்திறக்கின்றிலீர். ஊர் கூறுதல் பழியாயின், அதனை ஒழிமின். விரையீர்ங்குழற் பேதையீர்! நும் பெயர்களையாவது இன்னவென்று கூறுவீர்களாக" (56).

"யான் ஊரும், பேரும்வினவவும், நீவிர் யாதொரு மறுமொழியும், கூறாமல் வாளாதிருக்கின்றீர். தில்லையை அன்ன இப்புனத்தவர், விருந்தினருடன் பேசுதல் கூடாது என்னும் விரதம் உடையவர்கள்போலும்! அல்லது, இவர்கள் பேசமுற்பட்டால் வாயினின்று சலக்கென முத்தும், மணியும் உதிர்ந்துவிடும் போலும்.' (57).

"தில்லை அம்பலம் போன்ற மின்னிற நுண்ணிடைப் பேரெழில் வெண்ணகைப் பைந்தொடியீர்! நீவிர் வாய் திறவாமற் போனாலும் போக! நுங்களது பொன்னிற அல்குலுக்கு இம்மணிநிறப் பூந்தழை அணியத் தகுமோ? பார்மின்கள்! தகுமாயின், இதனை ஏற்று அணிந்து கொள்ளுங்கள்." (58).

"இலங்கையர் கோனாகிய இராவணனைச் செற்ற சிற்றம்பலவரின் கயிலைமலையின்கண் நிற்பவர்களே! சிலையின்கீழ் வைத்த கணைபோன்று, புருவத்தின் கீழுள்ள கண்ணை உடையீர்! நுமக்கு மேகலையின்கீழ் அகன்ற அல்குல் உள்ளது! முத்து வடம் விளங்கும் முலைகள் கண்ணிற்கு இனியனவாய்க் காணப்படுகின்றன. ஆதலின் அம்முலைகள் தம்மைத் தாங்கும் இடையானது சிறிதாயினும் இன்றித் தானே நிற்றல் இயலாது. நும்முடைய சிற்றிடை யாது? அஃது எம் கட்புலனாகாமை என்ன வியப்பு!" (59)

(5) இருவரும் உள்வழி அவன்வரவு உணர்தல்:

(தலைவியும் தோழியும் ஆகிய இருவரும் இருக்குமிடத்துச் சென்று, தலைவன் யானை மான் முதலியவற்றை வினவுவான் போன்று இயைபில்லன பேசி நிற்க, அவனது உள்ளக் குறிப்பினைத் தோழி உணர்ந்து கொள்ளுதல்)

தோழி: "தில்லையைப் பாடாதவர்கள் போல, இவன் மேனி ஒளியிலனாய்க் காணப்படுகின்றான். இவன் வினவுவனவோ யானையும், ஏனமும், மானும் பிறவுமாக உள்ளன. ஆனால், இவன் இவற்றை வேட்டையாடுதற்குரிய வில்லையும் ஏந்தி இருக்கவில்லை. கையில் நாகமரத்தின் தழைகளையே வைத்துக் கொண்டிருக்கின்றான். ஆயினும், வேட்டையாடப் போந்தவன்போல, பொய்யாக நடித்துக் காட்டுகின்றான். இவன் பேசுவனவற்றுள் ஒரு சொல்லேனும் மெய்யாகத் தோன்றுகின்றிலது. பொய்யுரைப்பதில் இவன் மிக்க தேர்ச்சிபெற்றுள்ளான். பொய் புகன்று வறிதே செல்பவனாகவும், இவன் காணப்பட்டிலன். யாதோ ஒரு குறையுடையவன் போல, இத்தினைப் புனத்தைவிட்டு நீங்காமல், சுற்றித் திரிந்து கொண்டே இருக்கின்றான். இவன் யாவனாக இருக்கலாம்?" (60).

"அம்பலத்தானது இப்புனத்தின்கண், இவர் வினவும் கூற்று, முதலில் யானையாய், பிறகு மானாய், பின்னர் மற்றும் மற்றும் வெவ்வேறாய், அதன்பின் மெல்லிய தழையாய் மாறிமாறி, கடைசியில் நம் தலைவியின் சிற்றிடையைப் பற்றியதாய் வந்து முடிந்துவிட்டது! அதனால், இம்மனிதரின் வார்த்தை மிகவும் ஆழம் மிக்கதாய்த் தோன்றுகின்றது." (61).

(6) முன் உறவு உணர்தல்:

(தோழி தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே முன்னரே ஏற்பட்ட காதல் உறவினைக் குறிப்பால் உணர்ந்து கொள்ளுதல்)

தோழி: பூங்கொடிபோலும் அழகிய தலைவியே! தில்லைச் சிற்றம்பலத்தின் கண் இடையறாது நிருத்தம் புரிபவனும், தனது நெற்றியின்கண் மேனோக்கிய ஒப்பற்ற கண்ணையுடையவனும் ஆகிய சிவபிரானின், கயிலைமலையின் உயர்ந்த புண்ணிய நீராய்ச் சிறந்து திகழும் சுனையிற் குடைந்து ஆடியும், சிலம்பிற்கு எதிர் கூவியும், நெடுநேரம் விளையாடியதனாலோ, நீ நின் மெல்லியல்பால் வாட்டமுற்றுத் தளர்ச்சி எய்தினாய்!" (62).

(7) குறையுற உணர்தல்:

(தலைவன் தன்குறையினைச் சொல்லி இரந்து நிற்றலால், தலைவன் தலைவி ஆகிய இருவர் குறிப்புக்களையும் தோழி உணர்ந்து கொள்ளுதல்)

தலைவன்: (தலைவியையும், தோழியையும் ஒருங்கே நோக்கி), யான் கடலின்கண் படகைச் செலுத்தட்டுமா, அல்லது கடல்மேற் சென்று மீனைப் பிடித்து வரட்டுமா? ஒரு குளிப்பில் பல பணிலங்களை (சங்குகளை) எடுத்து வரட்டுமா? அல்லது, தில்லை முற்றத்தில் சென்று எல்லோரும் காணச் சங்கு வளைகளை விற்கட்டுமா? நும் ஐயன்மார்க்கு ஏற்ற குற்றேவல்களைச் செய்யட்டுமா? உங்கள் வளைந்து சுருண்ட கூந்தலுக்கு மலர்தொடுக்கட்டுமா? நீங்கள் விரும்பும் கட்டளையை எனக்கு இடுவீர்களாக" (63).

தோழி: (தனக்குள்) "சிவபிரானின் தில்லையை ஒத்த தலைவி, புனத்தில் வந்து படியும் கிளிகளைக் கடிவதற்குச் சிறிது நேரம்சென்றாலும், அவளது கூந்தலில் வண்டுகள் வந்து அமர்ந்தாலும், அல்லது அவள் வாளா இருந்தாலும், இவனது ஒளிமிக்க முகத்தின்கண் வெவ்வேறு மாறுதல்கள் தோன்றுகின்றன. பளிங்கு தன் நிறத்தை விட்டுத் தன்னையடுத்த நிறத்தை மேவினாற் போல, இவர்தம் முகக்குறிப்பு முன் வேறொன்று போன்றிருந்து, பின் இவள் குறிப்பாகிய வேறொன்றாய்த் தோன்றா நின்றது. ஆதலின் இத்தலைவர்பால் நிகழும் குறிப்பு ஏதோ ஒன்றிருத்தல் வேண்டும். இவரது விருப்பம் நம் தலைவியின்பால் நிகழ்கின்றது போலும்!" (64)

"இவ்வாறே, அம்பலத்தினின்று ஆடும் முன்னோன் ஆகிய கூத்தப்பிரான், தன்கையில் ஏந்தியுள்ள உழைமானைப் போன்று மருண்ட வெள்ளை நோக்கமும், அவ்வுழை மானுக்கில்லாத கள்ளநோக்கமுமாகிய இரு நோக்கமும், ஒருங்கே நிகழ்த்தக் கற்ற எம்முடைய தலைவி, மாந்தழையைக் கொண்டு ஒருவன்..., என்று யான் சொல்லத்தொடங்குமுன்னரே, உள்ளம் பெரிதும் தழைத்து மகிழ்ச்சியுறுகின்றாள். அதனால் இவள் குறிப்பும் இவன்பால் நிகழ்கின்றது போலும்." (65).

"இறைவனது புலியூரை ஒத்த தலைவியினுடைய, அழகிய குவளைமலர்போலும் மைதீட்டிய கண்கள் ஆகிய வண்டினம், தான் வாழ்தற்குத்தகும் இவன் முகமாகிய செந்தாமரைக்கண் சென்று படிந்து, குடைந்து, இன்பமாகிய தேனை உண்டு எழில் பெறுகின்றது. ஆதலின், இத்தலைவனுக்கு உண்மையாகவே வேட்டையின்மேல் உள்ளமில்லை. இவளும் பொய்யாகவே தினைப்புனத்திற்குப் போந்து காவல் புரிவது போல நடிக்கின்றாள்." (66).

(8) நாணநாட்டம்:

(இருவர் குறிப்பும் உணர்ந்த தோழி, தலைமகன் பால் தலைவி கொண்ட காதலுணர்வினைத், தலைவி நாணமுறும்படி மெல்லெனத் திறம்படப் பேசி, அறிந்துகொள்ள முயலுதல்).

தோழி: "மைதீட்டிய கருங்கண்களையுடைய தலைவியே! சிவபிரானின் செஞ்சடைமேலுள்ள பிறையைப் போன்று, செக்கர்வானத்தை யடைந்த

இப்பசுங்கதிர் வெள்ளைச்சிறு பிறைக்கு, நினது செங் கரம் கூப்பி, நீ வணக்கம் செலுத்துவாயாக" (67).

[கன்னிப் பெண்கள், மூன்றாம்பிறைச் சந்திரனைத் தொழுதுவந்தால், அவர்களுக்கு விரைவில் திருமணம் நிகழும் என்பது, பண்டைக்காலத் தமிழ்மக்களின் நம்பிக்கை. ஆதலின், தோழி மூன்றாம்பிறைச் சந்திரனைத் தொழுமாறு, தலைவியிடம் கூறுகின்றாள். ஆனால், தலைவியோ முன்னமே தலைவனைச் சந்தித்துக் காதல் கொண்டு, அவனைக் கணவனாக மனத்தில் வரித்துக் கொண்டனள் ஆதலாலும், கற்புடை மகளிர்க்குக் கணவனையன்றிப் பிறரை வணங்குதல் முறையன்று ஆதலாலும், வழக்கம் போலப் பிறைச்சந்திரனைத் தொழாமல், தலைவி நாணித் தலைகுனிந்து நின்றாள். இதன்மூலம் தலைவியின் காதலைத் தோழி குறிப்பினால் உணர்ந்து கொண்டாள் என்பது, இப்பாடலின் கருத்து]

"அம்பலவன் மலையத்துக் குன்றவாணர் மகளாகிய எம்தலைவி, இத்தண் புனக் காவலுடையாள். அவள் அக்குன்றத்தின் அருகேயுள்ள ஆற்றிற்கு நீராடச் சென்றாள். நின் உறுப்புக்கள் அவள் உறுப்புக்களையே முழுதொத்துத் தோன்றுகின்றன. அணங்கே! உனக்கு நிகராகிய அத்தலைவியைக் கண்டபின் செல்வாயாக." (68),

"செந்நிற மேனியில் வெண்ணீறு அணியும் சிவபிரானின் தில்லை அம்பலம்போல், அழகிய மேனியை உடைய எம்தலைவியே! நின் கொங்கைகளில் அழிந்த குங்குமத்தையும், கருங்கூந்தலின் மாலையையும், அக்கூந்தலில் அப்பிய தாதையும், மேனி முழுதும் சூழ்ந்தொளிரும் நிறத்தையும் பெறக்கூடுமேல், நீ குடைந்து ஆடிய பெரிய சுனையை யானும் சென்று குடைந்து ஆடி நலம் பெறுவேன்." (69).

"தலைவியே! தில்லை அம்பலத்தான் மலையின்கண், நீ நீராடிய பெரும் சுனை, கருங் கண்கள் சிவப்பவும், கனிவாய் விளர்ப்பவும்செய்து, வண்டுகள் தொடர்ந்துவரும் தேன்மிக்க மலர் மாலையையும் தன்பால் நீராடினார்க்குச் சூட்டவல்லதோ?" (70).

"காகத்தின் இரண்டு கண்களுக்கும் மணி ஒன்றேயாய்க் கலந்திருத்தல் போல, இவ்விருவர் யாக்கையின் கண்ணும் ஒருயிரே கலந்திருத்தலை, யாம் இன்று கண்டேம். அம்பலவன் மலையில் இத்தோகைக்கும், இத்தோன்றற்கும், இன்ப துன்பங்கள் தனித்தனியாக அன்றிப் பொதுவாகவே வாரா நின்றன. இத்தகைய இவ்விருவர்கள்பாலும் நிகழும் காதலுணர்வு பெரிதும் சிறந்ததாய்ப் போற்றத் தகுவதாகவே அமைந்து திகழ்கின்றது." (71).

(9) நடுங்கநாட்டம் :

(தலைவி கேட்டு நடுங்குதற்குரிய ஒரு செய்தியைக் கூறுவாள் போலத் தொடங்கி, அதனால் தலைவிக்கு ஏதம் ஏதும் அடையாத படியும் ஆறுதல் அமையப் பேசி, அவ்வாற்றால் தலைவன்பால் தலைவி கொண்டுள்ள காதற்பெருங் கேண்மையினைத் தோழி அறிந்து கொள்ள முயலுதல்).

தோழி : "திருமாலும் பிரமனும் ஆகிய இருவராலும் அறியப்படாத, தனது திருவடிகளைத் தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவர் வணங்கும்படி, எழுந்தருளி இருப்பவனாகிய கூத்தப்பிரானை, நினையாத பாவிகளைப் போல வருந்தும்படி எதிர்ப்பட்டு, அந்தோ ஒரு தீவாய் உழுவை (புலி) கிழித்தது. சிறிதே தப்புவித்து, இன்று ஆண்டகையாகிய வீரன் ஒருவன், தன் வேற்படையை அதன்மீது வீசிப் பணிகொண்ட திறன், ஆ! ஆ! மிகப் பெரிதும் வியக்கற்பாலது".

[இதன்கண் "தீவாய் உழுவை கிழித்தது" என்னும் தொடரைக் கேட்ட அளவில், எப்போதும் தலைவன் நினைவாகவே உள்ள தலைவி, தன் தலைவனுக்குத்தான் புலியால் ஏதம் ஏதேனும் நேர்ந்துவிட்டது போலும் என நினைந்து, துணுக்குற்று நடுங்குவள். அதனால் இது "நடுங்க நாட்டம்" ஆயிற்று. எனினும் இத்தொடர் ஒன்றே, (1) உழுவை தன்தீய வாயினைத் திறந்தது (2) உழுவையினது தீய வாயினை வேறொன்று கிழித்தது (3) உழுவையினது தீயவாய் பிறிதொன்றனைக் கிழித்தது என, மூன்று வகையாற் பொருள்படும்படி வித்தகம் தோன்றப் பேசியதனாலும்; "ஆவா மணிவேல் பணிகொண்டவாறு இன்று ஓர் ஆண்டகையே" என வியந்து புகழ்ந்து முடித்ததனாலும்; தலைவிக்கு ஏதம் ஏதும் நேராதபடி, தலைவியின் துணுக்கமும் கவலையும் போக்கி, அவளை மகிழ்ச்சியில் திளைப்பித்த தோழியின் அறிவு மாட்சிமை, மிகவும் புகழற்பாலது.] (72)

(10) மடற்றிறம் :

(தலைவியை அடைய எனக்கு நீ துணைபுரியா—யாயின், மடல் ஏறியாயினும், யான் நின் தலைவியை அடைந்தே தீர்வேன் என்று, தலைவன் தோழியின்பாற் கூறுதல்).

தலைவன் : சுருளார் கருங்குழலையும், வெண்ணகைச் செவ்வாயையும், துடிபோலும் இடையையும் உடைய தோழியே!, நீவிர் எனக்கு இரங்கி அருளாது ஒழியின் எனது ஆருயிர் தப்பாமல் அழியும். அதனால் நீர் எம்பால் இரக்கம் கொண்டு தலைவியை யான் சேர்தற்கு அருள் புரிதல் வேண்டும்." (73)

"வேல்போலும் ஒளிமிக்க கண் ஆகிய வலையை மகளிர் கலந்து வீசிய பொழுது, அவ்வலையின்கண் வீழ்ந்து அகப்பட்டுச் சிக்கிக்கொண்டு, தங்களது உள்ளமாகிய மீனை இழந்தவர்கள், தென்புலியூர் ஈசனின் திருநீற்—றையும், எருக்கம்பூவினையும் அணிந்து, தாம் விரும்பும் காதலியின் உருவம் தீட்டிய ஒரு கிழியைக் கையில் பிடித்து, பனை மடலாகிய குதிரையை ஏறி, தம் கருத்தை நிறைவேற்றிக் கொள்வர். (74).

"தொன்று தொட்டு வரும் இவ்வுலகியல் நெறிக்கு ஏற்ப, அம்பலவரின் அருளில்லாதவர் போலப் பிறர் இகழும்படி, யானும் பனைமடல்மேல் ஏறிவரும் வண்ணம், ஒரு பெண்கொடி செய்து விட்டது" (75),

"ஆதலின், அவள் செயலால் வருந்துகின்ற என்னையும், என்னை வருத்தித் தான் வருந்தாதுள்ள நின் தலைவியையும், ஒரு கிழியின்கண் பொருந்த ஆராய்ந்து எழுதிக் கையிற் பிடித்துக்கொண்டு, நுமது சிற்றூர்த் தெருவின்கண் யான் திரிவேன். அதன்பின் நிகழ்வதனைக் காண்பாயாக". (76).

தோழி : "தலைவனே! தலைவியின் பொருட்டு மடலேற நினைந்து, அது குறித்துச் சேவலையும், பெடையையும் முட்டைகளையும் முற்றாக அழித்து, அவைகள் உறையும்

பனைமரத்தினை வெட்டி, அதனைக் கொண்டு நீ மடலூரக் கருதுவையாயின், அது நின்னருளுக்கு மாறாகும். நீயே அருளைத் துறந்தால், பின் இவ்வுலகத்தில் இனிய அருள் எவரிடம் தான் உளதாகும்?" (77).

"மேலும், யாழோசையின் தன்மையைக் கற்ற மென் மொழியை யுடைய, கன்னியாகிய எம் தலைவியின் அன்னம் போலும் நடைக்கு, நுமது ஓவியச் சாலையில் படிச்சந்தம் ஆக்கும் படங்கள் உளவோ?" (78).

"உளவாயினும், எம் தலைவியின் மொழியாக யாழை எழுதி, பற்களாக முத்துக்களை எழுதி, கூந்தலாகப் பூமாலையை எழுதி, வாயாக ஒரு தொண்டைக் கனியை யும் எழுதி, கண்ணாக மாவடு வகிரையும், எழுதப் பெற்ற தொரு கொடி இருக்குமாயின், அதனை எடுத்துக் கொண்டு எம் ஊர்க்கண் நீர் மடலேறி வருவீராக" (79).

"அழகிய மலைநாட்டுத் தலைவனே! எம் தலைவியின் உறுப்புக்கள் எழுதலாகாத பேரழகுடையன. அவற்றை ஒரு கிழியில் எழுதிக்கொண்டு, நீ மடலேறுதல் என்பது நினக்கு ஒரு போதும் இயலாது. நீ பனை மடலை ஊர்வதோ, அன்றி, ஒழிவதோ செய்க. நின் விருப்பத் தை மாற்றுவதற்கு யாம் விரும்பவில்லை. எம் தலைவிக்கு நினது விருப்பத்தைச் சொல்லி, அவள் உடம்படும் வண்ணம் சிலவற்றைக் கற்பிதுப் பார்க்கின்றேன். யாரறிவார்? ஒரு கால் அவள் அதற்கு இடம்தந்து இணங்கவும் கூடும். இடம் தாராளாயின் அதன் பின் னர் நீ அறிந்தவற்றைச் செய்து கொள்க. (80)

"எம் தலைவி நாட்காலத்து நீராடும் பெருமையை யுடைய இம்முதிய கடற்கண் யான் அழுந்தினேன் ஆயின், தானும் என்னில் முற்பட்டு அழுந்துவாள். அவட்கு என்னிடம் உள்ள இனிய அருள் அத்தகைய சிறப்பினதாகும். என்னோடு அவளிடை வேற்றுமை யில்லை. யான் நின் குறை முடித்துத் தருவேன். நீ வருந்த வேண்டா." (81).

(11) குறை நயப்புக்கூறல்:

(நின் குறையினை முடித்துத் தருகின்றேன் எனக் கூறித் தலைவனை மடல் விலக்கிய தோழி, தலைவ னின் குறையினைத் தலைவியின்பாற் சென்று, அவள் விரும்பும் வண்ணம் இனியன கூறி இசைவிக்க முயலுதல்)

தோழி: தலைவீ! வண்டினங்கள் தண்டேனைப் பருகி, "தே தே" எனப்பாடும் தில்லையானுடைய புதல்வனாகிய திருமுருகன் என்றே சொல்லும் வண்ணம், வேற்படை யை ஏந்திய ஒருவர், நம் புனத்தின்கண் வாளா பல காலும் வந்து கொண்டிருக்கின்றார். ஆயினும் அங்ஙனம் பல்கால் வந்து நின்றும், அவர் வாய் திறந்து ஒன்றும் பேசுவதில்லை. அவரிடத்து நாம் செய்யத்தக்கது யாது? என்று அறிகிலேன்." (82)

"வரி சேர்ந்த தடங் கண்களையுடைய தலைவியே! ஒருவன் மயக்கம் மிகுதியும் உற்றவனாய், தளிர் மேனி யனாய், ஈர்ந்தழையை ஏந்தியவனாய், நம் தேம்புனத் தைப் பிரியாமல், இடைவிடாது எப்போதும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கின்றான். அவன் நம்மாட்டு ஏதும் பேசுவதில்லை. அவன் சிவபிரான் புதல்வனோ? அல்லது மலரம்புகளை உடைய காமனோ? இன்னன் என்று யாம் துணிகின்றிலேம். ஈது என்ன மாயமோ:" (83)

தலைவியே! "அம்பலத்தான் சேய்போன்ற ஒருவன் நம் தினைப் புனத்தே போந்தான். போந்து, ஓர் ஆண் நண்டு, தன் அழகிய பெண் நண்டின் வாயின்கண், ஒரு நாவற்கனியைக் கொண்டு சென்று, அன்புடன் கொடுப்பதனைக் கண்டான். கண்டு, அப்பெருந்தகை பேயாற்பிடிபட்டவன் போல, வேறுபாட்டை உடையவ னாகி நின்றான். அந்நிலையை நீ கண்டிருப்பாயாகில் உயிர் வாழமாட்டாய். ஆண்நண்டு பெண்நண்டிற்கு நாவற் கனியை நனிநல்கக் கண்டு, தன்னுணர்வு ஒழியப் போயின அவன், இன்று வந்திலன். அவன் என்னா யினனோ?" (84).

தலைவி: "ஏந்திழாய்! இதோ தெரியும் இக்கடலானது, தில்லை வானவர்க்கு ஒப்பாகத் திகழ்கின்றது. சங்குகள் தரும் முத்துக்களை நாம் பெறும்படி, பெரிய கழிகளைச் சேர்ந்து, பெருகிவரும் கங்கையைத் தாங்கி, மரக்கலங் கள் இயங்கும் திரைகளின் மிகுதியை யுடைய, இக் கடலின் சிறப்பை யாம் என்னென்பேம்!" (85).

"சிவபிரான் திருவடிகளைக் காணவேண்டி, திருமால் நெறியல்லா நெறியால், நிலத்தைப் பிளந்துகொண்டு சென்று காணாது, பின்பு வழிபட்டு நின்று, 'எந்தாய் அருள வேண்டும்' என்று இறைவனை இரந்தான். அப்போது இறைவன்சிறிது இரங்கித் தனது ஒரு திருவடியைக் காட்ட, மற்றொன்றனையும் காட்டுக என்று, திருமால் தில்லையம்பல முற்றத்தின்கண் வரம் கிடக்கின்றான்" (86).

[தலைவி தலைவன் பாற்கொண்ட காதற் கேண்மை எல்லையற்றதாயினும், இயல்பாகப் பெருநாணினள் ஆதலின், தோழியின்பால் அதனை வெளிப்படையாகச் சொல்ல இயலாமல் தயங்கித் திகைத்து, தான் தோழி கூறுவனவற்றைக் கேளாதவள் போலவும், வேறு ஏதோ சிறந்த ஆழ்ந்த சிந்தனையில் அழுந்தியிருப்பவள் போலவும் நடித்து, தில்லைவானவனையும், தில்லையம்பல முன்றிலில் உள்ள மாயவனையும் பற்றித் தலைவி பேசு கின்றாள்.

ஆயினும் "யாதே செயத்தக்கது?" என்று வினவிய தோழிக்கு, வெளிப்படையாக மறுமொழி கூறாது, ஓர்ந்து கூட்டினால் மறுமொழியாகும் படியாகத் தலை வியின் பேச்சு, நல்லகுறிப்பும் நயமும் அமைந்து விளங்குகின்றது.

"மிகப்பெரிய கடலானது, சங்குகள் தரும் விலை யுயர்ந்த முத்துக்களை நாம் பெறுவதற்காக, மிகச் சிறிய கழியை எளிதாக வந்து பொருந்தினாற் போல, மிகச் சிறந்த பெருந்தகை ஆகிய தலைவன், தனது சிறந்த காதற்கேண்மை தரும் பேரின்பத்தினை, நாம் பெறு வதன் பொருட்டு, இங்ஙனம் எளிவந்து நின்னை வந்து அடைந்தான். இனி நீ நினக்கு ஏற்புடையதனைச் செய்க" என்றும்; "திருமால், சிவபெருமானின் திருவடி ஒன்றினை முன்னர்க் கண்டதோடு அமையாமல், எஞ்சி நின்ற பிறிதொரு திருவடியையும் எனக்குக் காட்டி யருள்க என்று பின்னரும் வேண்டித் தில்லையம்பல முன்றிலில் வரம் கிடத்தல் போல, தலைவன் முன்னர்ப் பாங்கற் கூட்டம் பெற்றான்; அதன்பின்னர் நின்னினை கூட்டம் பெறுவதன் பொருட்டு, நின்னிடம் வந்து இரந்து குறையுறுகின்றான். ஆதலின் அத்தலைவன்

வேண்டும் உதவியினை நீ செய்க'' என்றும்; தலைவி தோழிக்குக் கூறுவதாக, இப்பாடல்களில் அமைந்துள்ள நுட்பக் குறிப்புப் பொருள், சுவைத்து இன்புறத்தக்கது.]

தோழி: "தலைவீ! கள்ளப்படிறர்களுக்கு அருளாத சிவபிரானின் தில்லையைக் காணுதவர்கள்போல, அறிவில்லாத யான் கூறிய சொற்களை, நீ நின் உள்ளத்தில் கொள்ளற்க. மறந்து விடுக. ஆராயப்படுவனவற்றை ஆராய்ந்து, சொல்லத் தக்கவர்களுக்குச் சொல்லி, உசாவி, நீ படிறு என்று கருதிய இதனை மெள்ளத் துணிக. அன்றித் துணியாது ஒழிக. யான் வேண்டுவது இதுவே!" (87)

"தூவியம் தோகையன்ன தலைவீ! அவன் உடம்பிற் பூசியிருப்பது திருநீறு. கையிற் கொண்டிருப்பது ஓவியம் வரையப்பட்ட கிழி. அக்கிழியில் உள்ள ஓவியம், நின் வடிவம் என்றும் குறிக்கப்பட்டு இருக்கின்றது. இதற்குக் காரணமாகிய தீவினை யாதென்று அறியேன். அவனே யாதொரு சொல்லும் பேசுகின்றிலன். இருந்தவாற்றுன், அந்தோ! அக்கொடியோன் கருதியது பனைமடல் ஏறுதல் போலும்". (88)

தலைவி: "எனக்குத் துணையாகிய நெஞ்சமே! புலியூரைப் புகழாதவர் போல வருந்தும்படி என்னைச் செய்துள்ள இந்நோய், என்னல் இன்னதென்று அறியப்படவில்லை. ஆயினும், இதுபற்றி யான் ஒன்றும் கூற முடியவும் இல்லை. அயலார் சொல்லினர் என்று தோழியாகிய இவள் வந்து சொல்லுகின்ற இக்குற்றம், என்பால் வாராமல், தலைவரின் ஆற்றுமை கூறக் கேட்டலால் உண்டாகிய எனது ஆழ்ந்த துயரத்தை, உள்ளவாறு சொல்ல வல்லையாயின், இனிய பண்பு நலங்கள் வாய்ந்த அத்தலைவர்க்கு நீ சென்று சொல்லுவாயாக". (89)

(12) சேட்படை:

(தலைமகளைத் தலைவனின் குறைநயப்பித்த தோழி, தலைமகனின் பெருமையையும், தான் தலைவனுக்காகச் செய்த முயற்சியின் அருமையையும் புலப்படுத்துதற்கும், களவொழுக்கம் நீட்டியாமல் விரைவில் தலைவியை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்துதற்கும், தலைமகனுக்கு இயைய மறுப்பவள்போலச் செருஅச் சிறுசினமும், செற்றார்போல் நோக்கும் கொண்டு, விலகித் தொலைவிற் செல்லுமாறு தோழி தலைவன்பால் முகம் கொடாது பேசுதல்)

தலைவன்:"தில்லையன்ன தோழியே! யான் கொணர்ந்த பூந்தழையையும், அழகிய பூக்களையும் நீவிர் ஏற்றுக் கொள்கின்றிலீர். யான் வருந்தும்படி, செய்யத்தகாத, பொறுத்தற்கரிய கொடுமைகளை என்பால் துணிந்து செய்கின்றீர். நும் கண்மலர் ஆகிய காமன் கணைகளைக் கொண்டு, அருளத்தக்காரை அலைப்பதற்குத்தான் நீங்கள் முற்றக் கற்றுக் கொண்டிருக்கின்றீர்கள் போலும்! அடைந்தார்க்கு அருள் செய்யும் முறையை நீவிர் கற்றதில்லையோ?" (90)

தோழி: "அண்ணலே! பொதிய மலையின் சந்தனத் தழைகளை எம்பொருட்டுக் கொணர்ந்து நீ தருகின்ருய். நீ தந்த அதனை, எம் தலைவி அணிந்திருத்தலை அயலார்கள் பார்த்தால், 'இங்கு இல்லாத இத்தழையை இவட்குக் கொண்டுவந்து கொடுத்தவர் யார்?' என ஐயம் நிகழும். ஆதலின், இச்சந்தனத் தழையை யாம் ஏற்றுக் கொள்ளல் இயலாது." (91)

"அண்ணலே! நெருநல் யாம் சந்தனத் தழையைத் தகாதென்று மறுத்துக்கூறவே, இன்று நீ மற்றொரு தழையைக் கொண்டு போந்தாய். அம்பலவன் குன்றகத்து இல்லாத தழையை நீ கொண்டுவந்து தந்தால், கொடிச்சியராகிய எங்களுக்கு எங்கள் இல்லின்கண் இல்லாத பழிவந்து சாரும். அதற்காக யாங்கள் கூசுகின்றேம். ஆதலின் இனி நீர் இத்தழையைக் கொண்டு வருதல் வேண்டா." (92)

"சிலம்பனே! பிற நிலத்திற்குரிய தழைகளை வேண்டா என்று கூறி, யாம் மறுப்பவே, எம் நிலத்திற்குரிய தழையைக் கொண்டு போந்தாய். இத்தழை எமக்கு ஏற்புடையதே யாயினும், தில்லையன்ன எம் தலைவியின் கருத்து இன்னது என்று தெரிந்துகொண்டு, அதன் பின்னர் நீ தரும் தழையை நின் எதிர்வந்து யான் விரைந்து ஏற்றுக் கொள்வேன். அவள் கருதுவதும், சொல்வதும் அறியாது, இத்தழையை ஏற்க யான் அஞ்சுகின்றேன்." (93).

"தலைவனே! நின்பால் தழையினை ஏற்றுக் கொள்ளுதற்கு யான் இசைகின்றேன். இளவஞ்சிக் கொடியன்ன எம் தலைவியும் விரும்புகின்ருள். ஆயினும், ஒருசிறிது குறையுண்டு. நீ கொடுக்கும் இப் பூந்தழையானது, குழல்வாய் மொழி மங்கையின் பங்கனுகிய சிவபிரானின், திருக்குற்றால மலையின் அசோகமரச் சோலையில் அல்லது, வேறெங்கிலும் இல்லை. ஆதலின், இத்தழை இவர்கட்கு எங்ஙனம் கிடைத்தது? என்று, எம் உறவினர் ஐயுற்று ஆராய்வர், ஆதலின் எம் உறவினர்களுக்கு ஐயுறவு விளைவிக்கத்தக்க இத்தழை எமக்கு ஏற்புடையதன்று." (94)

"தலைவனே! நீ பல்காலும் தழைகொணர, யாம் அதனைப் பல்காலும் மறுத்தல் கண்டு, தழையை ஒழித்து மலராற்புனைந்த கண்ணியைக் கையுறையாகக் கொண்டு சென்ருல், அவர்கள் மறுக்கும் வகையில்லை எனக் கருதி, நீ தழையினை எடுத்துவராமல், எம்பொருட்டு அழகிய கழுநீர் மலரைக் கண்ணியாகப் புனைந்துகொண்டு போந்தாய். சிற்றம்பலவனது மலையின்கண் எம் சிற்றிலின் இடத்துள்ள செவிலித்தாய்மார் சூட்டிய கண்ணியின்மேல், யான் ஒரு சிறிய நறிய கண்ணியைச் சூட்டினுலும், எம் தலைவி பெரிதும் நாணம் கொள்வாள். எம் தலைவியைச் சொல்லுவதென்? இக்குன்றில், நாக மரத்தின் பூக்களால் தொடுத்த குறுங்கண்ணியைச் சூடி, அங்ஙனம் சூடியதனல் இளமந்திகளும் கூடப் பெரிதும் நாணம் கொள்ளும். அந்நிலையில், நீ கொணர்ந்த கண்ணியாகிய மாலையினை யாம் ஏற்பது எங்ஙனம்?" (95)

"சிலம்பனே! வேங்கைப் பூக்கள் பரவிய பாறையைப் புலி என்று கருதி, யானையானது மிகவும் அஞ்சுகின்ற நாடு நின்னுடையது. இம்மலை நிலத்தில் வாழும் குறவர்கள் தங்கள் மனையில் உள்ள வேங்கையினது பூக்களுடன், தெய்வத்திற்குரிய கழுநீர் முதலாகிய பூக்களையும் சேர்த்து அணியமாட்டார்கள். ஆதலின் எம்குலத்திற்கு இசையாத, நும் கண்ணியை யாம் ஏற்பது எங்ஙனம்?"

(''வேங்கைமரப் பூக்கள் படிந்த பாறையினை யானைகள் புலி என்று மருண்டு அஞ்சுகின்ற நாடன்'' என்றது, ஒன்றனை வேறொன்றாக மயங்கி யறியும் நாடனுதலின், கழுநீர்மலர் சூடாத எம்மை, நீசூடுவேம் என்று மயங்கிப் பிறழ உணர்ந்து கொண்டாய், என்னும் நுட்பக் குறிப்பு (இறைச்சி)ப் பொருள் உணர்த்தும்

இனி ''அஞ்சப்படாத பாறையினையும் புலி என்று மயங்கி அஞ்சும் நாடு ஆதலின், எங்கள் குலத்திற்கு ஏற்பில்லாத கழுநீர் மலரை யாம் அஞ்சுதல் சொல்ல வேண்டுமோ?'' என்னும் குறிப்பும், இதன்கண் அமைந்துள்ளது) (96).

''தலைவனே! கடவுட்குரிய கழுநீர்மலர் முதலியன, எம் குலத்திற்கு இசைவன அல்ல என்று யாம்கூற, இன்று நீ மாந்தழையும், மாமலரும்கொண்டு போந்தாய். எம் தலைவியின் நடையழகைக்கண்டு, அன்னங்கள் இன்னும் தம் மெல்லிய நடையைக் கற்க முற்படவில்லை. பெண்மான்கள், தம்மருண்ட பார்வையின் அழகினை எம் தலைவி கொடுப்ப, இன்னும் பெறவில்லை. கிளிகள் தம் இனிய சொற்களை எம் தலைவியின் மழலைமொழியினின்று இன்னும் பெறவில்லை. எம் தலைவி மிகவும் இளைய பருவத்தினள். அவள் இன்னும் வீட்டைவிட்டுப் புடைபெயர்ந்து விளையாடவும் முற்பட்டிலள். இந்நிலையில் நீர் அவளை விரும்பி என்னிடம் போந்ததனையும், யாம் நுமக்குக் குறை நேர்ந்ததனையும், அவள் இன்னும் அறிந்திலள். அதனால், நின் கருத்தை அவட்கு யாம் செவ்விநோக்கிக் கூறி, அதன்பின்னரே அவள் கருத்தறிதல் வேண்டும். அதுகாறும் நீர் பொறுத்தருள்க.'' (97)

''தலைவனே! எம் தலைவியின் செவ்வியறிந்து பின் செப்புகின்றேன் என்று, நேற்று யான் கூறியது கேட்டு, நீ இன்றும் வந்து இன்னும் இங்குத் தயங்கிநிற்கின்றாய். சூரியன் மேருமலையை அடைந்து மறைந்துவிட்டான். இனியும் நீ இங்குத் தயங்கி நிற்றலைக் காணநேரின், எம் தாய் சினந்து கடிந்து கொள்வாள். எம் உறவினரும் மிகவும் மூர்க்கத்தன்மையர். எவரும் இயங்குவார் இன்மையின், இவ்விடமும் இப்பொழுதே தனிமை எய்திவிட்டது! நின்ஊரும் இந்நிலத்தில் இல்லை, மிகவும் தொலைவில் உள்ளது. ஆதலின், இங்கிருந்து நீ இப்போதே விரைந்து சென்று விடுக.'' (98)

''ஆண்குரங்கு (கடுவன்), தன் பெண்குரங்கின் (மந்தியின்) வாயில், பலாப் பழத்தின் சுளையைப் பைந்தேனில் தோய்த்துக் கொடுத்துப் பாதுகாக்கும் மலைநாடனே! நெருநல் யான் இவ்விடத்து நிலைமையை நினக்கு உரைக்க, இவ்வாறு மறையாது எனக்கு இவள் உரையாட நேர்ந்தது, இவள் என்பாற் கொண்ட பரிவினால் அன்றோ? இத்துணைப் பரிவுடையாள் எனக்கு என்குறை முடியாமை இல்லை, என உட்கொண்டு நீ இன்றும் போந்தாய். யான் குற்றேவல் மகளாதலின், நின் குறையை எம் தலைவியின்பால் துணிந்து சொல்ல முடியாதவளாய் இருக்கின்றேன். ஆதலின், இனி நீயே சென்று நின் குறையை எம்தலைவியின்பால் கூறி முடித்துக் கொள்க.''(99

''தலைவனே! 'இந்நாளெல்லாம் என் குறையை முடித்துத் தருவேன் என்று. இவள் என்னை அவமே திரிந்து உழலச் செய்தாள்; இன்று நின்குறையை நீயே முடித்துக் கொள்' என்று கூறுகின்றாள்; என்று என்னைத் தவறாக எண்ணுதீர். முதிர்ந்ததெங்கம்பழம் கமுகின் குலையை மோதி, வாழைமரங்களை முறித்து, பூந்தாதுகள் பரந்த பழனத்தில் விழுந்து கிடக்கும் வளப்பம் மிக்க நாடு, நும்முடையது. மேலும் நீரோ உயர்ந்த அரசர் குலத்தைச் சேர்ந்தவர். யாமோ, மலைபோலும் பெரிய யானைகள் அஞ்சி ஒளியும்படி, சிங்கங்கள் வேட்டம் திரியும் காட்டில், மிகச் சிறிய ஊரில் உள்ளவர்கள். மிகவும் இழிந்த குறவர் குலத்தைச் சேர்ந்தவர்கள். இழிந்த எம்மொடு நேர் நின்று சொல்லாடுதலும், உயர்ந்த நும் பெருமைக்குத் தகாது. ஆதலின் எம் தலைவியை நீர் விரும்பற்க'' (100)

தோழி:

(குலமுறை கூறி மறுத்த பின்னரும் குறையிரந்து நிற்கும் தலைவனைச் சேட்படுத்தக் கருதிய தோழி, இவன்பால் நாம் பரிந்துரையாடினால் திரும்பத் திரும்பவருவான். நகையாடினால் இவள் நம்மை எளனம் செய்கின்றாள் ஆதலின், இவள் நம் குறை முடியாள் என்றுகருதி வாராதொழிவான் என எண்ணி, தலைவன் முன்னர்க் கலைமான் வினவிப் போந்ததனை நினைவு கூர்ந்து, நகையாடிச் சேட்படுத்துகின்றாள்).

''சிற்றம்பலவனின் கயிலை மலையைப்போலும் மதயானையின் முகத்தில், எம் ஐயன்மார் எய்யும் கணைகள் ஊடுருவிச் சென்று பாய்ந்து, பின்னர் மண்ணின்கண்ணும் போய்ப் படிய, யாம் கண்டிருக்கின்றோம். அவ்வாறன்றி இவர் எய்த அம்பினோடு ஒரு கலைமான் தப்பி விரைந்தோடி விட்டதாயின், இவர்தம் வில்லின் வலிமை மிகவும் வியக்கத்தக்கதாகவே உள்ளது'' (101).

(நகையாடினால் அகல்வான் என்று தோழி நகையாடவும், நகைப்பதனால் நம் குறை முடித்தற்கு இவள் இசைந்து உடன்படுவாள் என நினைந்து, தலைவன் பின்னும் தோழியின்பால் தாழ்ந்து நின்று குறையிரந்தான். அதனால் தலைவனின் எளிவரும் தன்மையினை வியந்து நின்று, அவன்பால் இரக்கம் கொண்டு தோழி சேட்படுத்துகின்றாள்)

தோழி: (முன்னிலைப் புறமொழியாகத் தனக்குள்):

'அம்பலவரின் மெய்யன்பர்கள்போல' உடல் நடுங்கி விதிர்விதிர்த்து நின்று, கையில் தழைகளை ஏந்தி, வில் இல்லாமலே கடமாவை வேட்டையாடி, அக்கடமா இங்கு எங்கேனும் தப்பி ஓடிவந்ததோ? என வினவிக்கொண்டு, வந்து இப்பெரியவர் பித்தழையா நிற்கின்றார் (ஏதோ பொருளற்றபேச்சுப் பேசுகின்றார்) இஃது என்ன தீவினையோ!'' (102)

''மேகங்கள் தவழும் மலைநாடனே! சிற்றம்பலத்தைப் போன்ற எம் தலைவியின் வடிவை அஞ்சி, இக்குன்றில் எப்போதும் மாமரங்கள் தளிர்களை ஈனுவதில்லை. சுனைகளிலும் பூக்கள் மலர்வதில்லை. ஆதலின், ஈண்டு இல்லாத தளிரும், பூவும் ஆகியவற்றை நீ கொணர்ந்து கொடுக்க யாம் அணியின், அவற்றைக் காண்போர் எம்மை ஐயுறுவர்'' (103).

''தலைவனே! எம் தலைவியாகிய பிள்ளையின் கூந்தல் இன்னும் போதிய வளர்ச்சியுற்று முடிக்கப்பெறவில்லை. மேலும் மிக இளைய அவட்கு, இன்னும் முலைகள் தோன்றவில்லை. குதலைச் சின்மழலை மொழிகளையே உடைய சிறுமியாகிய அவட்கு, நீயிர் கூறும் காதற்செயல் சிறிதும் பொருந்துவதன்று.'' (104)

"துறைவனே! 'நீர் தலைவியின் இளமையைக் குறித்து இவள் கூறுவது, தழையை வாங்காமல் மறுப்பதன் பொருட்டன்று. இந்நாளெல்லாம் இயைய மறுத்து, இப்பொழுது எம் தலைவி இளையள் என்று இயையாமையைக் கூறி. இவள் மறுக்க வேண்டியது என்னை? இனி இவ்வொழுக்கம் இவளையொழிய ஒழுகக் கடவேன் என உட்கொண்டு நிற்கின் றீர்.' இத்துணை நாள்காறும் எனக்குத் தெரியாமல் நீர் மறைத்த செயலை, இனி நான் நுமக்கு முடிப்பது எங்ஙனம்? எனக்கு மறைப்பின் நீர் கருதிய விருப்பம் முடியுமாறும் உண்டோ?" (105).

தலைவன்: "தில்லையை ஒத்து இலங்கும் சிறப்புடன், முத்துப்போன்ற பற்களையும், தோள்களையும் உடைய தோழியே! நின் மதிபோன்ற முகத்தின் உளதாகும் வித்தகஞ்சேர் மெல்லென் நோக்கம் (அறிவார்ந்த மெல்லிய இனிய நல்ல) பார்வை அன்றோ, எனக்குச் சிறந்த துணையாகும் அத்தகைய நினக்கு யான் மறைக்கும் செயலும் உண்டோ?" (106)

தோழி: "தலைவனே! தில்லை அம்பலத்தார் ஆகிய சிவபிரானின் தலமாகிய திருக்கழுக்குன்றம் ஆகிய மலைச்சாரலில், பந்தாடுகின்ற மகளிர் ஆகிய என்தோழியர் மிகப் பலர் உளர். அவர்களுள் நினது அருள் யார்மேல் படர்ந்தது? கூறுக." (107).

தலைவன்: என்னால் விரும்பப்பட்டாள் சிற்றம்பலத்தை ஒத்தவள். அவளது குவிந்த கொங்கைகள் குரும்பையையும், கூந்தல் கொன்றைப் பழத்தையும், சிவந்தவாய் கொவ்வைப் பழத்தையும், ஒளி பொருந்திய பற்கள் வெண்முத்துக்களையும், கண்கள் செங்கழுநீர் மலரையும், ஒளிமுகம் முழுநிலவையும் ஒத்திருக்கும். நின் தோழியருள் அவளையேயான் விரும்புகின்றேன்." (108)

"மேலும், யான் விரும்பும் அத்தலைவியின் பெரிய கண்கள், இறைவனிடத்து யான் வைத்த அன்புபோல அகன்றும், அவன் வாங்கிக் கழித்த எனது பாசம் போலக் கறுத்தும், அவனது தில்லையைப் போல் ஒளிமிகுந்தும், அவன் தன் தோள்களில் அணியும் திருநீறுபோல வெளுத்தும், அவன் திருவடிகளை யாம் புகழும் திருவார்த்தைகள்போல மிகநீண்டும், அழகுறவிளங்கும்." (109)

தோழி: "சிலம்பனே! எம்மை இடர் செய்யப்போந்த யானையை நீ வென்றதற்காகவும்; யான் குறைமறுப்பவும் போகாது, விடாத பேரன்பினை யுடையையாய், நீ பெரிதும் துவண்ட துவட்சிக்காகவுமே; எம் தலைவியின் பொருட்டு நீ கொணர்ந்த இத்தழையினை யான் ஏற்றுக்கொள்கின்றேன். இல்லையேல், எம் குடிக்குப் பழிவிளைவிக்கத்தக்க இதனை, யான் ஒருபோதும் ஏற்றிருக்க மாட்டேன்." (110)

தோழி: "மானைப் பார்த்ததுமே நினைவுக்கு வரும் மெல்லிய அழகிய கண்களை உடைய தலைவியே! கழை காண்டலும் சுளியும் களியானைபோன்ற தலைவன், நாள்தோறும் தன் கைகளில் தழையை ஏந்திக் கொண்டு வருவான். அங்ஙனம் அவன் வருதலைக் கண்டதுமே, அவனை மறுத்துரைத்துச் சேட்படுத்துதற்கு ஏற்ற பல பொய்க்காரணங்களை, முன்பெல்லாம் யான் பெரிதும் கற்பனை செய்துகொள்வேன். யான் கற்பனை செய்து கூறிவந்த அப்பொய்க் காரணங்கள், அனைத்துமே முடிந்துவிட்டன. அதனால், இன்றுயான் அவனுக்கு யான் சொல்லியனுப்பக்கூடிய காரணம் எதுவும், என் கற்பனையில் தோன்றக்காண்கிலேன், இனி நாம் யாது செய்யலாம்?" (111).

"வண்டுகள் மொய்க்கும் கூந்தலையும், தூய மொழிகளையும் உடைய தலைவியே! சிவபிரான் அன்றொரு காலத்தில் உரித்தது போன்றகொடிய யானை நம்மீது பாய்ந்து இடர்செய்யப்போந்த போது, அதனைக் கடிந்து எதிர்த்து வென்று, நம் உயிரைக் காப்பாற்றி நமக்குப் பேருதவி புரிந்த தலைவரின் கையகத்துள்ள தழையும், நம்மால் ஏற்றுக் கொள்ளப்படாமல் வாடத் தகுவனவோ? அதனை ஏற்றுக் கொண்டு அவரை மகிழ்வித்தல் நமதுகடமையன்றோ?" (112)

"எடுப்பான அழகிய அணிகலன்களைத் தரித்த தலைவியே! தலைவரின் தழையை நாம் ஏற்பின், தாமே ஒரு நட்புச் செய்தார் என்று பிறரிடத்து நமக்குப் பழி வளரும். ஏலாது விடினோ, நின்னை அடைவதற்குப் பிறிதொரு வழியும் இல்லை என்று, தலைவர் பனங்கருக்கிறற் குதிரைபோலச் செய்து, மடன்மா ஏறித் தாம் நம்பாற்கொண்ட காதலை ஊரறியச் செய்வர். அதனால் நம் குடிக்குப் பழிநேரும்." (113)

"ஈங்கோய் மலையின்கண் உள்ள நமது தினைப்புனத்தை அழித்து, நம்மையும் கொல்லுதற்கு ஓடிவந்த மலைபோலும் யானையை வெட்டிவீழ்த்தி, நம்மைக் காத்து அருள்புரிந்த தலைவருக்கு, நாம் செய்யக்கடவ கைம்மாறு தான், யாதுளது? ஆதலின் தலைவன் கொணருப் தழையை ஏற்பதே, நமது கடமை." (114).


"தலைவன், நம்மிடத்தில் தான்கொண்ட அருள்மிகுதியால், இம்மலைக்கண் எளிதாகக் கொணர்ந்து தந்த குளிர்ந்த இத்தழையானது, கயிலை மலையின்கண் அல்லது வேறு பிறிதோரிடத்திலும் இல்லை. அத்தகைய சிறப்புடைய இத்தழையினை, நீ ஏற்று மகிழ்வாயாக." (115).

"தலைவனே! நீ தந்த தழை, தில்லைஅம்பலத்தைச் சூழ்ந்த நாட்டில் உள்ளதாகும். அச்சிறப்புடையநின் தழையை, யாப தலைவியின்பால் சென்று கொடுத்தேன். கொடுத்தபோது ஆண்டு நிகழ்ந்தனவற்றைச் சொல்லத் தொடங்கின், அது முடிவின்றிப் பெருகும். சுருங்கும் மருங்குலையுடைய தலைவி, அப்பூந்தழையை அரைத்துத் தன் மேனி எங்கும் பூசிக்கொள்ளவில்லையே தவிர, அவள் அதனை மிகவும் அன்புடன் ஏற்றுப் போற்றிச் செய்யாத சிறப்பில்லை. நின் தழையை ஏற்றுத் தலைவி பெரிதும் மகிழ்ந்தாள்." (116

(தொடரும்)

—ஆசிரியர்

உ



" சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக "

## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

சென்னிமலை-ஈரோடு வட்டம்

கோவை மாவட்டம்

# கோடி அர்ச்சனை-தைப்பூசப் பெருவிழா

தினசரி பாராயணத்திற்குரிய கந்தர் 'சஷ்டி கவசம்', விஜயநகர மன்னர் தேவராஜ உடையார் காலத்தில் காங்கேயத்தை அடுத்த மடவிளாகம் தேவராய-சுவாமிகளால் இத்தல முருகன் மீது பாடப்பட்டதாகத் தலவரலாறு கூறுகிறது.

அருணகிரிநாதர் விசேட தரிசனம் பெற்ற வயலூர் விராலிமலை போன்று, இத்தலத்தில் விசேட தரிசனம் பெற்றுப் படிக்காசு பெற்ற தலம்.

அருணகிரிநாதர் 332 ஆம் எண் திருப்புகழில் ஞானசம்பந்தர் வந்து பாடிய சிறப்புத் தலம் எனப் புகழ்கிருர்.

படிவழிப்பாதை, கார்வழிப்பாதை, தங்கும் வசதி முதலிய வசதிகள் உண்டு.

நள ஆண்டு தை மாதம் 21-ம் நாள் 3-2-77ஆம் நாள் நடைபெறும் தைப் பூச ரதோற்சவத்திற்கும் வருகை தந்து முருகன் திருவருள் பெற வேண்டுகிரேம்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற முருகனுக்குக் கோடி அர்ச்சனைப் பெருவிழா 29-8-76 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.. சகஸ்ரநாமம் 1க்கு ரூ. 15-00 மணியார்டர் மூலமும் அனுப்பலாம். கோடி அர்ச்சனை பூஜையில் வைத்திருந்த வெள்ளி டாலர் ஒன்றும், பட்டு விபூதிப்பை ஒன்றும் பிரசாதமாக அனுப்பி வைக்கப்படும்.

எம். தெய்வகுமார், பி.ஏ., பி.எல்.,

செயல் அலுவலர், தக்கார்.

# தலவரலாற்றுக் குறிப்புகள் ✻ ✻ ✻

✻ ✻ ✻ [காவிரித் தென்கரைத் தலங்கள்]

(முற்றொடர்ச்சி)

**11.** திருப்பூந்துருத்தி :

இத்தலம் திருவாலம்பொழிலுக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவிலும், திருக்கண்டியூருக்கு மேற்கே இரண்டுகல் தொலைவிலும் உள்ளது. இந்திரன், காசிபர், சோழமன்னன் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். திருவையாற்றுச் சப்தஸ்தானத் தலங்களுள் ஆருவது தலம். சோழநாட்டுக் காவிரித்தென் கரைத் தலங்கள் 127ல் பதினோராவது தலம். இங்குத் திருஞானசம்பந்தருக்குத் தரிசனம் கொடுப்பதற்காக நந்திகள் விலகின என்பர். திருநாவுக்கரசர் முதுமைப் பருவத்தில் இத்தலத்தில் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் கட்டி அதில் எழுந்தருளியிருந்து, திருஅங்கமாலைத் திருப்பதிகம், பலவகைத் திருத்தாண்டகங்கள் பாடிச் சிவநெறி போற்றி வளர்த்தார். அம்மடம் சமீப காலத்தில் அன்பர்கள் பலரின் முயற்சியால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. பாண்டி நாட்டில் அமணிருள் அகற்றிச் சிவ ஒளிபரப்பி மீண்டும் சோழநாடு எழுந்தருளிய ஞானசம்பந்தர், அப்பரைக் காணத் திருப்பூந் துருத்திக்கு எழுந்தருளுகையில் 'அப்பர் எங்குற்ருர்?' என்று, கேட்டபோது அப்பர் "தேவரீரைத் தாங்கி வரும் பெருவாழ்வு பெற்று இங்குற்றேன்'' என்று வெளிப்பட்டு இருவரும் அளவளாவி மகிழ்ந்ததலம். அப்பர் சுவாமிகள் மூன்று பதிகம் பாடிப் பரவியுள்ளார்கள். பதிகத்துள் சுவாமி பொய்யிலி என்றும், ஆதிபுராணன் என்றும் போற்றப் பட்டுள்ளார். சுவாமி—புஷ்பவன நாதர். தேவி—அழகார்ந்த நாயகி. சோழ மன்னன் துருத்தியைச் சிவலிங்கமாக வைத்து வழிபட்டதால் இப்பெயர் பெற்ற தென்பார். இரு ஆறுகட்கு இடையில் உள்ள தலம் துருத்தி என வழங்கும். குத்தாலம்—திருத்துருத்தி என வழங்குது கண்டு கொள்க. காசிப தீர்த்தம், கிணறு வடிவில் கோயிலின் அக்கினிமூலையில் உள்ளது.

'' நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித்தானைக்
காணு தனவெல்லாங் காட்டினானைச்,
சொல்லா தன வெல்லாஞ் சொல்லியென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக்கொண்டு
பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன்
நானே''

'' கொடிகொள் செல்வ விழாக்குணலை அருக்
கடிகொள் பூம்பொழிற் கச்சிஏ கம்பனுர்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.''

**12.** திருக்கண்டியூர் :

இத்தலம் திருவையாற்றுக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் தஞ்சை செல்லும் சார்ச்சாலையில் உள்ளது. திருப்பூந்துருத்திக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் இருப்பது. திருவையாற்றுச் சப்தஸ்தானத் தலங்களுள் ஐந்தாவது தலமாக விளங்குவது. காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 12வது தலமாகத் திகழ்வது. அட்டவீரட்டானத் தலங்களுள் பிரமனின் சிரம் கொய்த தலம். ஞானசம்பந்தர் பதிகத்துள் 6-வது பாட்டிலும், அப்பர் தேவாரத்துள் 8-வது பாட்டிலும், பிரமன் சிரங்கொய்த செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. சாதாதப முனிவர் பூசித்துப் பேறு பெற்ற தலம். ஞானசம்பந்தர் திருப்பதிகம் வினவுரைப் பதிகமாய்ச் சிவபரத்துவம் கூறுகின்றது. சுவாமி—வீரட்டேஸ்வரர், தேவி—மங்கள நாயகி, சம்பந்தர் ஒரு பதிகமும், அப்பர் ஒரு பதிகமும் பாடித் துதித்துள்ளனர். மேற்குப் பார்த்த சந்நிதி. ஒவ்வொரு ஆண்டிலும் மாசி மாதம் 13, 14, 15 தேதிகளில் மாலையில் சூரிய பூசை நடைபெறுகிறது. ''பங்கயக் கடவுள் ஈந்த பரிகலம் வாங்கிக் கொண்ட, அங்கணன் இடம் ஈது'' என்பது திருவிளையாடற்புராண அர்ச்சனைப் படலச் செய்யுள். தலவிருட்சம்—வில்வமரம். சாதாதபர், பிரமன், சரசுவதி ஆகியோருடைய திருவுருவங்கள் ஆலயத்தில் உள்ளன. தக்ஷதீர்த்தம், சூலதீர்த்தம். கபால தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன, இதற்கு நஞ்சை நிலம் 112 ஏக்கரும், புஞ்சை நிலம் 30 ஏக்கரும் இருக்கின்றன. இவற்றின் மூலம் வருட வருமானம் ரூ. 1,25,000 ஆகும். பல்லவ, சோழ, பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் இவ்வாலயத்துள் காணப்படுகின்றன.

'' வினவினேன் அறியாமை யில்லுரை
செய்ம்மினீரருள் வேண்டுவீர்,
கனைவிலார் புனற் காவிரிக்கரை
மேயகண்டியூர்வீரட்டன்,
தனமுனே தனக் கின்மையோ தம
ராயினுரண்டமாளத்தான்,
வனனில் வாழ்க்கை கொண்டாடிப்பாடி இவ்
வையமாம் பலி தேர்ந்ததே''

'' மாய்ந்தன தீவினை மங்கின
நோய்கள் மறுகிவிழத்
தேய்ந்தன பாவஞ் செறுக்ககில்
லாநம்மை, செற்றனங்கைக்
காய்ந்த பிரான்கண்டியூரெம்பி
ரான் அங்கம் ஆறினையும்
ஆய்ந்த பிரானல்லனே அடி''
யேனையாட் கொண்டவனே

### 13. திருச்சோற்றுத்துறை :

திருக்கண்டியூருக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ள திருவேதிகுடி அடைந்து, அங்கிருந்து கிழக்கே இரண்டு கல் சென்றால் இத்தலத்தை அடையலாம். திருவையாற்றுச் சப்தஸ்தானத் தலங்களுள் மூன்ருவது தலம். காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 13-வது தலமாக உள்ளது. இது கௌதமாஸ்ரமம் எனப்பெறும். கௌதமர் பஞ்ச காலத்தில் சிவ பக்தர்களைக் காப் பாற்றிய தலம் என்பர். "துறந்தார் சேரும் சோற்றுத் துறை" என்பது தேவாரம். அருளாளர் என்னும் பிராமண பக்தருக்கு அக்ஷய பாத்திரம் அருளிய தலம். இந்திரன், சூரியன் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற தலம். சூரிய பூஜை திருநேரிசை எட்டாவது பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது சுவாமி–தொலையாச் செல்வர். தேவி—ஒப்பிலா அம்மை. பக்தர்க்குச் சோறளித்தமை பற்றிச் சுவாமி ஓதனவனேசுவரர் என்றும், அம்மை அன்ன பூரணி என்றும் அழைக்கப்படுகின்றனர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப் பெற்ற முதன்மையுடைய தலம். ஆறு திருப்பதிகங்கள் உள்ளன. ஊருக்குத் தெற்கே 'சோறுடையான் வாய்க்கால்' என்று ஒரு வாய்க்கால் உள்ளது. கௌதமர் உருவம் கோயிலுக்குள் திருவாயிலின் தென்கீழ்ப் பால் உள்ளது.

" காலை எழுந்து கடிமலர்
தூ யன தாங்கொணர்ந்து
மேலை யமரர் விரும்பும்
இடம்விரை யான்மலிந்த
சோலைமணங்கமழ் சோற்றுத்
துறையுறை வார்சடைமேல்
மாலை மதியமன் ருேஎம்பி
ரானுக் கழகியதே "

" ஆணி போலநீ ஆற்ற வலியைகாண்
ஏணி போல்இழிந் தேறியும் ஏங்கியும்
தோணி யாகிய சோற்றுத் துறையர்க்கே
பூணி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே "

" மூத்தவனை உலகுக்கு முந்தினனே
முறைமையால் எல்லாம் படைக்கின்ருனே
ஏத்தவனை ஏழுலகு மாயினனே
இன்பனைத்துன்பங் களை கின்ருனே'
காத்தவனை எல்லாந்தான் காண்கின்ருனே
கடுவினையே தீவினையைக் கண்டுபோகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையுளானே
திகழொளியேசிவனே யுன்னபயம் நானே "

" பண்டை வினைகள் பறிய நின்ற
அண்ட முதல்வன் அமலன் இடமாம்
இண்டை கொண்டன் பிடைஅ றாத
தொண்டர் பரவுஞ் சோற்றுத் துறையே"

" ஓதக் கடல்நஞ் சினை உண் டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப் புனல்உண் டெரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே".

### 14. திருவேதிகுடி :

இத்தலம் திருச்சோற்றுத் துறைக்கு மேற்கே இரண்டு கல் தொலைவிலும், திருக்கண்டியூருக்குக் கிழக்கே இரண்டு கல்தொலைவிலும் உள்ளது. திருவை யாற்றுச் சப்தஸ்தானத் தலங்களுள் நான்காவது தலம். காவிரித்தென்கரைத் தலங்களுள் 14-வது தலம். இது வேதம் பூசித்து வழிபட்ட தலங்களுள் ஒன்று. அதனல் தான் வேதிகுடி எனப் பெயர்பெற்றது. விநாயகர்– வேதவிநாயகர் என வழங்கப்படுகின்ருர். சுவாமி– வேதபுரீசுவரர், தேவி-மங்கையர்க்கரசி. சுவாமி வாழைமடுவில் தோன்றியவர் என்றும், அதனல் வாழைமடுநாதர் என்ற பெயரும் உண்டு என்றும் கூறுவர். வேதத்தை உற்றுக் கேட்கும் பாணியில் வேத விநாயகர் செவிசாய்த்துச் சாய்ந்துள்ளார். பங்குனி மாதம் 13, 15 தேதிகளில் உதயத்தில் சூரியபூசை நடைபெறுகிறது. சம்பந்தரும், அப்பரும் பதிகம் பாடிப் பரவியுள்ளனர்.

" செய்யதிரு மேனிமிசை வெண்பொடி
அணிந்துகரு மானுரிவை போர்த்
தையமிடு மென்றுமட மங்கையொ
டகந்திரியும் அண்ணலிடமாம்,
வையம்விலை மாறிடினு மேறுபுகழ்
மிக்கிழிவி லாதவகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குரை
செயாத அவர் வேதிகுடியே " (1)

"எண்ணும் எழுத்துங் குறியும்
அறிபவர் தாமொழியப்
பண்ணின் இசைமொழி பாடிய
வானவர் தாம்பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும்
பிரான்திரு வேதிகுடி
நண்ண அரிய அமுதினை
நாமடைந் தாடுதுமே" (2)

### (15) திருத்தென்குடித்திட்டை :

தஞ்சாவூர்-மாயூரம் இருப்புப் பாதையில் திட்டை என்ற பெயரில் 3-வது இரயில் நிலையமாக உள்ளது. காவிரித் தென்கரைத் தலங்கள் 127–ல் 15-வது தலமாகத் திகழ்வது. தஞ்சாவூருக்கு வடகிழக்கே கல் தொலைவில் உள்ளது. கௌதமர், ஆதிசேடன், காமதேனு முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். கோயில் சிறியது. நாட்டுக் கோட்டை நகரத்தாரால் திருப்பணி செய்ய பெற்றுள்ளது. வெண்ணாற்றிற்கும், இடையில் திட்டாயிருப்பதால் "திட்டை" எனப் பெயர் பெற்றது என்பர். சம்பந்தர் ஒரு பதிகம் பாடிப் பரவி யுள்ள தலம். சுவாமி-பசுபதிநாதர். தேவி-உலகநாயகி.

" முன்னை நான் மறையவை
முறை முறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ
நின்றவன் தன்னிடம்
மன்னுமா காவிரி வந்
தடி வருடநல்
செந்நெலார் வளவயல்
தென்குடித் திட்டையே "

'' ஊறினர் ஓசையுள் ஒன்றினர் ஒன்றிமால்
கூறினர் அமர்தருங் குமரவேள் தாதையூர்
ஆறினர் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினர் வழிபடுந் தென்குடித் திட்டையே''

(16) திருப்புள்ள மங்கை-பசுபதி கோயில்:

இத்தலம் திருவையாறு-ஐயம்பேட்டை சாலையில் ஐயம்பேட்டைக்கு மேற்கே இரண்டரை கல்தொலைவில் உள்ளது. பசுபதி கோயில் இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே ஒன்றரை மைலில் உள்ளது. சப்த மங்கை ஸ்தலங்களுள் ஒன்று. தேவர்கள் அமுதம் கடைந்த போது உண்டான ஆலகாலவிஷத்தைச் சிவபெருமான் உண்டு கண்டத்தில் அடக்கியருளிய தலம். இக்காரணத்தால் சுவாமி ஆலந்தரித்த நாதர் என்றும், ஆலந்துறைநாதர் என்றும், வழங்கப்படுகிறார். தேவி அல்லியங்கோதை அம்மை. சம்பந்தர் ஒரு பதிகம் பாடிப் பரவியுள்ள தலம். வழக்கிலும், தேவராத்திலும் ஆலந்துறை என்று இததலம் பேசப்படுகிறது. இத்தலம் வேளாளப் பசுபதி கோயில் எனவும் வழங்குகிறது. பிரம்மதேவர் பூசித்துப் பேறு பெற்ற தலம். புள்ளமங்கை என்பதற்கேற்ப, கழுகுகள் கோபுரத்தில் வசித்துவருகின்றன. "பொந்தின் இடைத்தேன் ஊறிய" என்று தேவாரத்தில் கூறியபடி பொந்துகளில் தேன்கூடுகள் இன்றும் காணலாம். காவிரித் தென்கரைத் தலங்கள் 127-ல்-16-வது தலம்.

" மலையான்மகள் கணவன்மலி
கடல்சூழ் தரு தன்மைப்
புலையாயின களைவானிடம்
பொழில்சூழ்புள மங்கைக்
கலையால்மலி மறையோரவர்
கருதித் தொழு தேத்த
அலையார்புனல் வருகாவிரி
ஆலந்துறை யதுவே''.

(17) திருச்சக்கரப்பள்ளி-ஐயம்பேட்டை:

ஐயம்பேட்டை இரயில் நிலையத்திற்கு மேற்கில் ஒரு கல்தொலைவில் உள்ளது இத்தலம். சக்கரவாகம் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது. விஷ்ணு பூசித்துச் சக்கரம் பெற்றமையால் இப்பெயர் பெற்ற தென்றும் கூறுவர். இந்திரன் மகன் ஜயந்தன் பூசித்துப் பேறு பெற்ற தலம். சிவரஹஸ்யம், பிரம்ம கைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், புண்டரீக-மகாத்மியம், தேஜிநீவனபுராணம் முதலியவற்றுள் பாராட்டிக் கூறப்பட்டுள்ள சப்தஸ்தலங்களுள் முதன்மையானது இது. சப்தஸ்தலங்களாவன 1. திருச்சக்கரப்பள்ளி, 2. அரிமங்கை. 3. சூலமங்கை, 4. நந்தி மங்கை, 5. பசுபதிமங்கை, 6. தாழைமங்கை, 7. புள்ள மங்கை என்பனவாம். ப்ராஹ்மி, மாகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, மாகேந்திரி, சாமுண்டி என்னும் சப்தமங்கைகளால் முறையே பூசிக்கப் பெற்றமையால் இவை சப்த மங்களத்தலம் என்று வழங்கப்படுகின்றன. நாதசர்மா என்னும் அந்தணர், தன் மனைவியாகிய அநவித்யையுடன் தேவகாத தீர்த்தத்தில் மூழ்கி நியமத்துடன் இவ்வேழு தலங்களையும் தரிசித்துப் பேறு பெற்றனர். சுவாமி-சக்ரவாகேஸ்வரர். தேவி-தேவநாயகி. தீர்த்தம்-காவிரி. காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 17-வது தலம். சம்பந்தர் ஒரு பதிகம் பாடித் துதித்துள்ளார்.

'' படையினர் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினர் உமையொரு கூறனர் ஊர்வதோர்
விடையினர் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினர் உறைவிடஞ் சக்கரப் பள்ளியே'',

'' தண்வயல் புடையணி சக்கரப் பள்ளியெம்
கண்ணுதல் அவனடிக் கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
பண்ணிய இவைசொலப் பறையுமெய்ப்
பாவமே'

18. திருக்கருகாவூர்:

இத்தலம், பாபநாசம் இரயில் நிலையத்திலிருந்து, தெற்கே சாலியமங்கலம் கற்சாலையில் நான்கு கல் தொலைவில், வெட்டாற்றின் தென்கரையில் உள்ளது. ஆதரவற்ற ஒரு பெண்ணுக்குத் தேவியார் மருத்துவம் பார்த்துக் கருவைக் காத்தமையால், இத்தலம் கருகாவூர் எனப் பெயர்பெற்றது. தேவி-கர்ப்பரட்சாம்பிகை எனப் பெயர் பெற்றார். கணபதி, நந்தி, மூலஸ்தான லிங்கம் மூன்றும், சுயம்புமூர்த்திகள் என்பர். இலிங்கம் முல்லைக்கொடி சுற்றிய அடையாளத்துடன் பெரிதாக உள்ளது. பிருதிவிலிங்கம். சந்திரன் முதலிய தேவர்கள் பூசித்துப்பேறுபெற்றனர். சம்பந்தர் ஒரு பதிகமும், அப்பர் ஒரு பதிகமும் பாடிப் பரவியுள்ளனர், சுவாமி-முல்லைவன நாதர். தேவி-கரும்பனையாள்; கருக்காத்த நாயகி, மகப்பேறு வேண்டுவோர் பிரார்த்தனை செய்து கொள்ளும் தலம். காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 18-வது தலம்.

" முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம் அழலும் அழல்வண்ணமே!!

'' மாசில் தொண்டர்மலர் கொண்டு வணங்கிட
ஆசை யாரஅருள் நல்கிய செல்வத்தர்
காய்சி னத்தவிடை யார் கரு காவூரெம்
ஈசர் வண்ணமெரி யும்எரி வண்ணமே''

'' கலவ மஞ்ஞையுல வுங்கரு காவூர்
நிலவு பாடலுடை யான்றன நீள்கழல்
குலவு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலவ லாரவர் தொல்வினை தீருமே''

19. திருப்பாலைத்துறை:

இத்தலம் பாபநாசம் இரயில் நிலையத்திற்கு வடகிழக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. தாருகா-வனத்து ரிஷிகள் ஏவிய புலியைச் சிவபெருமான் உரித்து அதன் தோலைத் தரித்தருளிய தலம். அம்மையார் எழுந்தருளியிருக்கும் கோயில், தனிக் கோயிலாகக் கோயிலின் தென்பாகத்தில் இருக்கிறது. வசிட்டர், இராமர், சீதை, இலக்குமணர், தௌமியர்,

அருச்சுனன் முதலியோர் வழிபட்டதலம். பாபநாசத்திற்கு மேற்கே அரை மைலில், 108 சிவாலயம் என்ற தலம் இருக்கிறது. காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 19-வது தலம் இது. அப்பர் ஒரு பதிகம் பாடித் துதித்துள்ளார்.

" விண்ணினர் பணிந் தேத்த வியப்புறும்
மண்ணினர் மறவாது சிவாய வென்று
எண்ணினர்க் கிடமா எழில் வானகம்
பண்ணினர் அவர் பாலைத் துறையரே "

## 20. திருநல்லூர் :

கும்பகோணத்தை அடுத்து மேற்கேயுள்ள சுந்தரப் பெருமாள் கோயில் இரயில் நிலையத்திற்குத் தெற்கே இரண்டு கல் தொலைவிலும், திருப்பாலைத் துறைக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவிலும் உள்ளது இத்தலம். சிவபெருமான் அப்பர் சுவாமிகளுக்குத் திருவடி யருளிய தலம். "நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார், நல்லூர் எம்பெருமானர் நல்லவாறே" என்பது அவர் திருவாக்கு. சிவனடியார்களுக்குக் கந்தை; சீருடை, கோவணம் கொடுத்து வந்த திருவாறையில் அவதரித்த அமர்நீதி நாயனுரைச், சிவபெருமான் ஆட்கொண்டு, அவருக்கும் மனைவியாருக்கும், மைந்தருக்கும் முத்தியளித்த தலம். இதனை அப்பர் தேவாரத்துள் ஏழாவது செய்யுளால் அறியலாம். சுவாமி பொன் மயமான திருமேனியுடையவர். பிருங்கி மகரிஷி வண்டு உருவம் எடுத்துச் சக்தியை நீக்கி வழிபட்டதால் திருமேனியில் சிறு துவாரங்கள் உள்ளன என்பர். அகத்தியருக்குத் திருமணக் கோலங்காட்டிய தலம். காவிரித்தென்கரைத் தலங்கள் 127ல், 20-வது தலம். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடிப் பரவியுள்ளனர். திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் விளங்குவது இத்தலம்.

" கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்ருடும் நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோதும் முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே "

" தேற்றப் படத்திரு நல்லூ ர்
அகத்தே சிவனிருந்தால்
தோற்றப் படச்சென்று கண்டுகொள்ளார்
தொண்டர் துன்மதியால்
ஆற்றிற் கெடுத்துக் குளத்தினில்
தேடிய ஆதரைப்போல்
காற்றிற் கடுத்துல கெல்லாந்
திரிதர்வர் காண்பதற்கே "

" நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ்
சூழ்ந்தநல் லூ ரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று
சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கின் மனைவியொடும்
அங்கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்கும்
அன்றே இவ் வகலிடமே "

" நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்,
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து
வானேர்
இனந்துருவி மணிமகுடத்தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி,
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானர் நல்ல வாறே "

—ஆசிரியர்

(தொடரும்)

## விண்ணப்பக் கலிவெண்பா

.........................................................சீலநிறை
வாந்துருத்தி கொண்டுள் ளனலெழுப்பு வோர்புகழும்
பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே-காந்தருவத்
தண்டியூர் போற்றுந் தகைகாசிக் கட்செய்து
கண்டியூர் வாழுங் கலைகண்ணே-கொண்டியல்பின்
வேற்றுத் துறையுள் விரவா தவர்புகழும்
சோற்றுத் துறையுட் சுகவளமே-ஆற்றலிலாத்
தீதிக் குடியென்று செப்பப் படார் மருவும்
வேதிக்குடி யின்ப வெள்ளமே-கோதியலும்
வன்குடித் திட்டை மருவார் மருவுதிருத்
தென்குடித் திட்டைச் சிவபதமே-நன்குடைய
உள்ள மங்கை மார்மே லுறுத்தா தவர்புகழும்
புள்ள மங்கை வாழ்பரம போகமே-கள்ளமிலஞ்
சக்கரப் பள்ளிதனிற் ரும்பயின்ற மைந்தர்கள் சூழ்
சக்கரப் பள்ளி யினில் தண்ணளியே-மிக்க
அருகாவூர் சூழ்ந்தே அழகுபெற வோங்கும்
கருகாவூர் இன்பக் கதியே-முருகார்ந்த
சோலைத் துறையிற் சுகஞ்சிவநூல் வாசிக்கும்
பாலைத் துறையிற் பரிமளமே-சீலத்தர்
சொல்லூ ரடியப்பர் தூயமுடி மேல்வைத்த
நல்லூ ரமர்ந்தநடு நாயகமே..............

—திருவருட்பிரகாச வள்ளலார்.

# திருமுருகாற்றுப்படை*

திரு, எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34.

முன்னுரை :

திருமுருகாற்றுப்படை, தமிழ்த்தெய்வமாகிய முருகப் பெருமானின் துதி நூல்கள் பலவற்றுள், மிகவும் முதன்மையும், தொன்மையும் வாய்ந்தது. இதனை இயற்றியருளிய ஆசிரியர், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்ததாகக் கருதப் பெறும் நக்கீரர் என்னும் சங்க காலப் பெரும்புலவர் ஆவர். எனவே ஏறத்தாழ 2000 ஆண்டுகளாக வாழையடி வாழையாக வந்துள்ள முருகன் அடியார்கள் அனைவருமே, இந்நூலைத் தொன்றுதொட்டுப் போற்றிப் பாராயணம் செய்து, முருகனை வழிபட்டு வருகின்றனர்.

அருணகிரிநாதர் :

முருகன் அடியார்களுள் பெருமுதன்மை வாய்ந்தவரும், இற்றைக்குச் சற்றேறத்தாழ 600 ஆண்டுகட்கு முன்னர் விளங்கியிருந்தவரும் ஆகிய அருணகிரிநாதரும், திருமுருகாற்றுப் படையினை வியந்து புகழ்ந்து தமது திருப்புகழில் பல இடங்களில் குறிப்பிட்டு அருளியுள்ளார்.

" வளவாய்மை சொற்ப்ரபந்தம்
உள கீரனுக்கு உகந்து
மலர்வாய் இலக்கணங்கள் இயல்போதி
அடிமோனை சொற்குஇணங்க
உலகாம் உவப்ப என்றுஉன்
அருளால் அளித்துகந்த பெரியோனே " (1)

" நக்கீரர் ஓதிய வளமைசேர்
தமிழுக் காக நீடிய கரவோனே " (2)

" கீதஇசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரர்இயல் கேட்ட க்ருபைவேளே " (3)

—திருப்புகழ்.

" நக்கீரர் சொல் தித்தித்ததே '!

—கந்தர் அந்தாதி, 54.

'வாக்கிற்கு அருணகிரி' என்னும் மாபெரும் புகழ் பெற்ற அருணகிரிநாத சுவாமிகள் அவர்களே, தமது ஒப்புயர்வற்ற சந்தநலம் செறிந்த செந்தமிழ்த் திருப்புகழ்ப் பாடல்களில் திருமுருகாற்றுப் படையினை, 'வளவாய்மை சொற்பிரபந்தம்" என்றும், 'வளமைசேர் தமிழ்" என்றும், 'வேதமொழி' என்றும் மிகவுயர்த்துப் புகழ்ந்து, " நக்கீரர் சொல் தித்தித்ததே" என்றும் அருளிச் செய்வாராயின், இந்நூலின் பெருமையை அளவிட்டுக் கூறுதல் நம்மால் இயலுமோ ?

சிவப்பிரகாசர் :

இங்ஙனமே, பிற்காலப் பெருங் கவிஞர்களுள் தலை சிறந்து விளங்கிக் 'கற்பனைக் களஞ்சியம்' என அறிஞர்களால் வியந்து போற்றப் பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அவர்களும் "பாவுள் முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை" என இதனைச் சிறந்தெடுத்துப் பாராட்டியுள்ளார். அதற்கேற்ப இந்நூல் "பத்துப் பாட்டு" என்னும் சங்கத் தொகை நூலில் முதலாவதாக அமைந்துள்ளமையும், இங்கு நாம் நினைவு கூரத்தக்கது.

மேலும் அவர், திருமுருகாற்றுப்படையின் சிறப்பைப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்: "முருகன் தணியா அதிமோக தயாபரனாய், பணியா? என வள்ளி பதம் பணிந்து", அவ்வள்ளியம்மையின் இனிய மொழிகளைச் செவிமடுப்பதில் அளவிலா ஆர்வம்கொண்டு திகழ்கின்றான். எனினும், யாரேனும் அன்பர் ஒருவர் எங்கேனும் இருந்து திருமுருகாற்றுப் படையினை ஓத முற்படுவாராயின், முருகப்பெருமான் வள்ளியம்மையின் இனிய சொற்களையும் புறக்கணித்துவிட்டு, தன்னுடைய பன்னிரண்டு செவிகளையுமே ஒருசேரக் குவித்து, அவ்வன்பரின் திருமுருகாற்றுப் படைப் பாராயணத்தினைக் கேட்டு மகிழ்ந்து அருள்புரிகின்றான். முருகனின் பன்னிரு செவிகளும் பருகும் அமுதமாகத் திருமுருகாற்றுப்படை திகழ்கின்றது. அதனை ஓதி வழிபடும் அடியவர்கள் விரும்பி நினைப்பவற்றை யெல்லாம் அவர்கள் நினைத்தபடியே, முருகன் விரும்பி நிறைவேற்றியருளுகின்றான்" எனச் சிவப்பிரகாசர் பாடுகின்றார்.

" இன்னவை நினைந்து கீரன்
இலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியும் ஆரப்
பருகு அமுதாகி, ஓதின்
உன்னிய உன்னி யாங்கு இங்கு
உதவுவ தாகிப், பாவுள்
முன்னுற வந்து நிற்கும்
முருகாற்றுப் படை, மொழிந்தான்." (1)

*பழநி அருள்மிகு பழநியாண்டவர் கலைக்கல்லூரியின் ஆண்டு விழா மலருக்கு, நமது ஆணையர், அவர்கள் வழங்கிய கட்டுரை இங்கு வெளியிடப் பெறுகின்றது.
—ஆசிரியர்

" பொன்அவிர் சுணங்கு பூத்த
புணர்முலைக் கருங்கண் வள்ளி
கன்னலும் அமுதும் தேனும்
கைக்கும்இன் தீஞ்சொல் மாற்றித்
தன்நிகர் புலவன் கூறும்
தமிழ், செவி தாழ்த்துக் கேளா,
அந்நிலை மனம் களித்தான்;
அறுமுகம் படைத்த கோமான்."

—சீகாளத்திப்புராணம்.

ஆற்றுப்படை :

தமிழிலுள்ள பிரபந்தங்கள் என்னும் சிற்றிலக்கிய வகைகள், தொண்ணூற்றாறு வகைப்படும் என்பர். அவற்றுள் ஆற்றுப்படை என்பதும் ஒன்று. ஆற்றுப் படை என்னும் சொல், வழிப்படுத்துதல், வழிகூறி அனுப்பி வைத்தல் எனப் பொருள்படும் (ஆறுபடு ஐ). சிறுபான்மை வருவித்தல் எனவும் அதற்குப் பொருள் உண்டு. "முருகு ஆற்றுப்படுத்த உருகெழுவியன் நகர்" என்னும் வரி, 'முருகனை வருமாறு வழிப்படுத்தின அச்சம் பொருந்திய அகன்ற நகரம்' (கோயில்) எனப் பொருள் படுதல் காணலாம்.

ஆற்றுப்படை என்னும் நூல் வகையானது, புலவர் ஆற்றுப்படை, பாணர் ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப் படை, விறலி ஆற்றுப்படை என நான்கு வகைப்படும். ஓர் அரசன் அல்லது ஒரு வள்ளலிடம் சென்று பரிசு பெற்றுத் திரும்பி வரும் புலவன் ஒருவன், வழியில் தன்னை ஒத்த மற்றொரு புலவனைச் சந்தித்து, 'யான் இன்ன வள்ளலிடம் சென்றேன்; இன்ன இடத்தில் அவனைக் கண்டேன்;அவனை இவ்விவ்வாறு பாடினேன்; அவனுடைய இயல்புகள் இத்தகையவை; இத்துணைப் பொருள்களை அவன் எனக்குப் பரிசிலாக வழங்கினான்; நீயும் அவனிடத்துச் சென்று பாடினால், பரிசில் வழங்கப் பெறுவாய்' என்று அவ்வள்ளலைச் சென்று காண்பதற்கு உரிய வழி முதலிய விவரங்களை யெல்லாம் விளக்க மாகக் கூறி அனுப்புவதாகப் பாடப் பெறுவது, புலவர் ஆற்றுப்படை எனப்படும். இவ்வாறே பாணர், பொருநர், விறலியர் என்பவரும், தமக்குள் ஒருவர் மற்றொருவரை ஆற்றுப்படுத்திக் கொள்ளும் முறையில் பாடப்பெறும் நூல்கள், அவரவர்களின் பெயர்களால் வழங்கும்.

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்"

என்பது, ஆற்றுப்படை நூல்களுக்குத் தொல்காப்பியப் புறத்திணை இயல் வகுக்கும் இலக்கணம் ஆகும்.

முருகாற்றுப்படை :

ஆற்றுப்படை நூல்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்தது திருமுருகாற்றுப்படை எனலாம். ஆதல் பற்றியே, பத்துப்பாட்டு என்னும் சங்கத் தொகை நூலில், பிற எல்லாப் பாடல்களுக்கும் முன்னதாக, முதற்கண் திருமுருகாற்றுப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது புலவர் ஆற்றுப்படை என்றேபெயர் வழங்குதற்குரியது. ஆயினும், பொருளின் முதன்மையும், சிறப்பும் பற்றி முருகாற்றுப்படை யெனவே தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது. நம்மை அனைய அரசனோ அல்லது வள்ள-லோ ஆகிய மனிதரிடத்து ஆற்றுப்படுத்தும் முறையில் பாடாமல், எல்லாம் வல்ல இறைவனிடத்தில் ஆற்றுப்படுத்தும் நிலையில்,இதனை முதன் முதலாகப் பாடியருளிய ஆசிரியர் நக்கீரர் பெருமானின் கவிதைத் திறம், ஒரு சிறந்தபுரட்சிப் புதுமைச் செயல் எனப் போற்றி புகழ்தற்குரியதாகும். சங்கத் தமிழ்த் தலைமைப் புலவராகிய நக்கீரரின் தமிழ்ப் புலமைக்கும், தலைசிறந்த சமய உணர்வுக்கும், இந்நூல் ஒப்புயர் வற்ற சான்றாக இலங்குகின்றது.

முருகன் அருளைப் பெற்ற அருளாளன் ஒருவன், அதனைப் பெறாத அடியவன் ஒருவனுக்கு, முருகனின் சிறப்பும், அவன் எழுந்தருளியிருக்கும் திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேர கம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்னும் ஆறு படை வீட்டுத் தலங்களும், அவற்றின் பெருமைகளும், அத்தலங்களில் ஏதேனும் ஒன்றற்குச் சென்று முருகனை வழிபடும் முறையும் கூறி, அவனை முருக னிடத்து வழிப்படுத்தும் முறையில், இந்நூல் பாடப் பெற்றுள்ளது.

பழம்பாடல் :

ஆசிரியர் நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை யினை நாடோறும் ஓதி வழிபடுதலால், நாம் எல்லா நலங்களும் பெறலாம்; நம்முடைய கவலைகள் எல்லாம் நீங்கும்; முருகன் நமக்கு இரங்கி நம்முன் வந்து தோன்றிக் காட்சி தந்து அருள் புரிவான். இது பெரியோர்கள் பலரும் தம்முடைய வாழ்வில் கண்ட அனுபவ உண்மை. இதனை ஒரு பழம்பாடல் இனிது தெளிவுறக் குறிப்பிடுகின்றது.

" நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்-முற்கோல
மாமுருகன் வந்த மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்."

முடிவுரை :

எனவே இத்தகைய அரும்பெரும் சிறப்பு வாய்ந்த திருமுருகாற்றுப் படையினை, நாம் அனைவரும் நாடோ-றும் ஓதி, முருகனை வழிபட்டு, அவன் அருளைப் பெற்று உய்ய முயலுவோமாக:

முருகனின் புகழ் மிக்க ஆறுபடை வீட்டுத் தலங்களுள் ஒன்றாகத்திகழும் திருவாவினன் குடிஎன்னும் பழநியில், முருகனின் திருவருள் நிழலில், அருள்மிகு பழநியாண்ட வர் கலைக்கல்லூரியில் பயிலும் பேறுபெற்ற மாணவர் கள், திருமுருகாற்றுப்படை என்னும் இச்சிறந்த செந்-தமிழ்த் துதி நூலை, நாடோறும் அன்புடன் ஓதி நலங்கள் பலவும் பெற்றுச் சிறந்து விளங்க, நம் செந்தமிழ்த் திருமுருகனின் திருவருளையே வழுத்தி அமைகின்றேன்.

# காரைக்கால் அம்மையார்
# கவின்மிகு நூல்கள்*

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34.

முன்னுரை :

தமிழ்நாட்டில், சைவர்கள் அனைவரும் திலகவதியார், மங்கையர்க்கரசியார், புனிதவதியார் என்னும் மூவரையும்பற்றி நன்கினிது அறிவர். இம்மூவரிலும் மிகவும் தொன்மை வாய்ந்தவர் புனிதவதியாரேயாவர். திலகவதியார், திருநாவுக்கரசரின் தமக்கையார்; திருநாவுக்கரசர் இளமையில் சமண் சமயம் சார்ந்து தடுமாறிய பொழுது, அவரைத் திருவதிகை வீரட்டானப்பெருமானின் திருவருளால் திருத்திச் சிவநெறிப் பெருஞ் சான்றோராகத் திகழுமாறு செய்தருளியவர் திலகவதியார். மங்கையர்க்கரசியார், திருஞான சம்பந்தப்பெருமானால் திருத்தி ஆட்கொள்ளப்பெற்ற, நின்றசீர் நெடுமாறநாயனாரின் அரும்பெறல் வாழ்க்கைத் துணைவியார். இவ்விருவரின் பெருமையும் சிறப்பும் எல்லையற்றன. எனினும், இவ்விருவரினும் ஒருவகையில் முதன்மையும் தொன்மையும், சிறப்புமுடையவர் புனிதவதியார் எனலாம்.

அம்மையாரின் சிறப்பு :

புனிதவதியார், தனதத்தனார் என்பவரின் தவமகளாய்க் காரைக்கால் என்னும் கடிநகரில் தோன்றியவர் ஆதலின், காரைக்கால் அம்மையார் எனவும் வழங்கப் பெறுவர். காரைக்கால் அம்மையார், திலகவதியார் மங்கையர்க்கரசியார் ஆகிய இருவருக்கும் காலத்தால் பெரிதும் முற்பட்டவர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரோடு சமகாலத்தவராக வாழ்ந்திருந்த திருஞானசம்பந்தப் பெருமான், திருவாலங்காட்டிற்குச் சென்றபொழுது, அத்தலத்தை மிதிக்க அஞ்சி அதன்புறத்தே தங்கி அருளினார்.

"இம்மையிலே புவியுள்ளோர் யாரும் காண
ஏழுலகும் போற்றிசைப்ப எம்மை ஆளும்
அம்மைதிருத் தலையாலே நடந்துபோற்றும்
அம்மையப்பர் திருவாலங் காடாம்" என்று
தம்மையுடை யவர்மூதூர் மிதிக்க அஞ்சிச்
சண்பைவரும் சிகாமணியார் சாரச் சென்று
செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியில் அனறிரவு பள்ளி சேர்ந்தார்"

எனப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் பாடியிருத்தல், சிவநெறிப் பெருந்தலைவராகிய திருஞானசம்பந்தர் தாமே, காரைக்கால் அம்மையார்பால் எத்தகைய பெருமதிப்பு வைத்துப் போற்றியருளினார் என்பதைப் புலப்படுத்தும்.

அம்மையாரின் அருள் நூல்கள் :

இது மட்டுமேயன்றி, காரைக்கால் அம்மையார்க்கு வேறொரு பெருஞ்சிறப்பும் உண்டு. கடவுட் பக்தியுணர்வு மட்டுமேயன்றி, அவர் ஒப்புயர்வற்ற சிறந்த கவிதைத் திறம் வல்லவராகவும் விளங்கியிருந்தார். மூத்த திருப்பதிகங்கள், திருஇரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்னும் மூன்று சிறந்த அரிய அருள் நூல்களைக் காரைக்கால் அம்மையார் பாடியிருக்கின்றார். தமிழில் எத்தனையோ திருப்பதிகங்களை நமது சமயாசிரியர்கள் பாடியிருக்கின்றனர் ஆயினும், காரைக்கால் அம்மையார் பாடிய திருப்பதிகங்களையே, நமது பண்டைச் சான்றோர்கள் அவற்றினை யெல்லாம் விட, மிக்க பெரும் சிறப்புடையதாகக் கருதினர்.

மூத்த திருப்பதிகங்கள் :

ஆதலின் அவற்றினின்று, இவற்றைத்தனியே பிரித்து 'மூத்த திருப்பதிகங்கள்' என வழங்கி மகிழ்ந்தனர். "மூலம் காண்பரியார் தம்மை மூத்த நற்பதிகம்பாடி" என்று சேக்கிழார் சிறந்தெடுத்துக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். சேக்கிழாருக்கு 'மூத்த திருப்பதிகங்கள்' இரண்டிலும் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை,

"ஆலங்கா டதனில் அண்டமுற
நிமிர்ந்து ஆடு கின்ற
கோலங்காண் பொழுது 'கொங்கை
திரங்கி' என்று எடுத்துப் போற்றி"

எனவும்,

"எட்டி இலவம் ஈகை
என எடுத்துத் திருப்பதிகம்
கொட்ட முழவம் குழகன்
ஆடும் எனப் பாடினார்"

எனவும்; அவர் அவ்விரு திருப்பதிகங்களின் தொடக்கத்தினையும், கருத்தினையும், சுட்டித் தொகுத்துக் குறிப்பிட்டுப் பாடியிருத்தல் கொண்டே, செவ்விதின் உணரலாம். அம்மையார் அருளிய திருப்பதிகங்கள், நமது சைவ சமய ஆசிரியர் நால்வருக்கும் முற்பட்டவை. ஆதலின் அவை "மூத்த திருப்பதிகங்கள்" எனப் பெயர் பெற்றன. சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோர் ஆகிய சிவஞான சுவாமிகள் இவற்றின்பால் மிக்க ஈடுபாடும் பக்தியும் கொண்டிருந்தார்.

* பழநி, அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கல்லூரியின் ஆண்டுவிழா மலருக்கு, ஆணையர் அவர்கள் வழங்கிய கட்டுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.
—ஆசிரியர்

" பேறு இழவு இன்ப மோடு
பிணிமூப்புச் சாக்காடு என்னும்
ஆறும் முன் கருவுட் பட்டது "

என்னுப சிவஞான சித்தியார் செய்யுளில் வரும் 'மூப்பு' என்னும் சொல்லுக்குரிய பொருளை விளக்க நேரும் நிலையில் 'மூப்பு-உயர்ச்சி' எனக் குறிப்பெழுதி, அதனை வலியுறுத்துதற்கு 'மூத்த திருப்பதிகம்' என்னும் தொடர் மொழியை எடுத்துக் காட்டியருளியிருக்கின்றார். ஏனையோர் பிறர் பாடிய பதிகங்கள் எல்லாவறிற்லும் மிகவும் உயர்ச்சியுடையன, காரைக்கால் அம்மையாரின் பதிகங்களேயாம் என்பது அவர்தம் கருத்தாதல் இதனாற் புலனாகின்ற தன்றோ?

திருஇரட்டை மணிமாலை :

இவ்வாறே காரைக்கால் அம்மையார் பாடிய இரட்டை மணிமாலையினையும், சேக்கிழார் பெருமான் சிறப்பாக எடுத்து மொழிந்து விதந்து போற்றுகின்றார். அஃது ஒரு செய்யுளின் ஆதியாக அமையும்படி பாடப்பெற்றிருத்தலும், அறிஞர்கள் பெரிதும் ஆராய்ந்து அறிந்து இன்புறத்தக்கதாக இருத்தலும், அதன்கண் அம்மையாரின் ஒப்புயர்வற்ற மெய்யுணர்வு மேலிட்டுப் பெருகித் திகழ்தலும் பற்றி "ஏய்ந்த பேருணர்வு பொங்க, ஆய்ந்தசீர் இரட்டைமாலை அந்தாதி பாடினார்" எனச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்கின்றார் மேலும் அவர், அஃது அம்மையார் திருக்கயிலாயம் நோக்கிச் செல்ல முற்படும் நிலையிற் பாடியது என்றும் விளக்கியருள்கின்றார். இதனால் திருஇரட்டை மணிமாலையின் சிறப்பு, இணைத்தென்பது இனிது புலனாகும்.

அற்புதத் திருவந்தாதி :

தமிழில் அந்தாதி நூல்கள் எத்தனையோ பற்பல உள்ளன. அவைகள் எல்லாவற்றிலும் தலைசிறந்த தொன்றாக நிலைபெற்றுத் திகழ்வது, காரைக்கால் அம்மையார் அருளிய அந்தாதியேயாகும். ஆதலின் அதனை நம் பண்டைப் பெரியோர்கள் 'அற்புதத் திருவந்தாதி' என அதன் அருமை பெருமைகள் தெரிந்து வியந்து அகமகிழ்ந்து போற்றியுள்ளனர். அம்மையார் தமது கணவன் தன்னைத் தெய்வமென்று நினைத்து வணங்கியபோது, "ஊனுடைவனப்பை எல்லாம் உதறி, ஆங்கு நின்தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப் பாங்குற வேண்டும் என்று பரமர் தாள் பரவி நின்றார்". அந்நிலையில் அவருக்கு உலக பந்த பாசங்கள் அனைத்தும் நீங்கி, உணர்வெலாம் சிவமே யாதும் ஒப்புயர்வற்ற திப்பிய ஞானம் உதித்தது. அந்த அரும்பெரும் ஞானப்பெரு நிலையிலேயே, அம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடியருளினர்.

" உற்பவித்து எழுந்த ஞானத்து
ஒருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந் தாதி
அப்பொழுது அருளிச் செய்வார் "

என்பது தெய்வப் புலவர் சேக்கிழார் பெருந்தகையின் திருவாக்கு. இதற்கு முன்பெல்லாம் உலகியலில் ஈடுபட்டு இருந்த அம்மையாரின் உணர்வு, இப்போது அறவே அதனை மறந்து, இறையியலிலும் அருள் இயலிலும் ஈடுபட்டுத் திளைத்து நிற்பதாயிற்று. "இரும்பு பொன்னானாற்போல், யாக்கை தன் பரிசும், வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற அன்பு பிழம்பாய்த் திரிவார்" என்னும் நிலையில், அம்மையார் பசு கரணங்கள் பதிகரணங்கள் ஆகப்பெற்றார். உலகியல் ஞானம் ஒழிந்து, அருளியல் ஞானம் அவருக்கு அமைந்து நிரம்பியது. இத்தகைய அற்புத நிலையை எய்திய பின்னர், அம்மையார் பாடியருளிய அந்தாதி 'அற்புதத் திருவந்தாதி'யே யாகும் என்பதற்கு ஐயமுண்டோ?

அந்தாதியின் அற்புதத்தன்மை :

அற்புதத் திருவந்தாதி, எளிய இனிய தெளிவான நடையில், யாவரும் படித்துணர்ந்து மகிழத்தக்க நிலையில் சிறந்து திகழ்கின்றது. அம்மையார், சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெற்ற நிலையில் பாடியதாதலின், அஃது உலக மக்களுக்கு உபதேசம் செய்தற்குரிய நிலையில், செப்பலோசையையுடைய சிறந்த வெண்பா யாப்பினால் செவ்விதின் அமைந்துள்ளது. கவிதை பாடுவோர், தமது கவிதைகளில், ஒரோவழி தமது உலகியல் உணர்ச்சிகளையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் இயல்பாக வெளியிடுவதுண்டு. அத்தகைய ஒரு சிறு குறிப்பும் இதன்கண் அமையப்பெறாமை அறிந்து மகிழத்தக்கது. அருளியல் உணர்வு நிகழப் பெற்றார்க்கு உலகியலுணர்வு ஏற்படாது என்பதும், அதுவே உண்மையில் ஒருவர் ஞானம் எய்தியமைக்குரிய உறுபெருஞ் சான்று என்பதும், இதனால் நாம் அறிந்து இன்புறத்தக்கனவாகும்.

அற்புதத் திருவந்தாதியின் அருமை பெருமைகள், நம்மனோரால் அளவிடற்பாலன அல்ல. அவை விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்.

" பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்; — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்ப திடர் "

" இடர்களையா ரேனும், எமக்கிரங்கா ரேனும்,
படரும் நெறிபணியா ரேனும், — சுடர் உருவில்
என்பறாக் கோலத் தெரிபாடும் எம்மானார்க்கு,
அன்பறா தென்னெஞ் சவர்க்கு "

எனவரும் இந்நூலின் தொடக்கப் பாடல்களே, எவருள்ளத்தையும் கவரும் இயல்பு வாய்ந்தனவாகும். இங்ஙனமே இதன் ஒவ்வொரு பாடலும் எளிமையும் இனிமையும் அமைந்து, நவில் தொறும் நயம்பயந்து சுவைமிக்குத் திகழ்கின்றன.

சைவ சித்தாந்தம் :

'தமிழ் மக்களின் பேரறிவின் பெருவிளைவு' எனப் போற்றப்பெறும், சைவ சித்தாந்தம் என்னும் நமது தமிழகத்துத் தத்துவக் கொள்கை, இறைவன் உயிர்களின்பால் ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும்

விளங்குகின்றான். கலப்பினால் உடலின் உயிர்போல ஒன்றாகவும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன் போல வேறாகவும், உயிர்க்கு உயிராதற் தன்மையால் கண்ணொளியின் உயிருணர்வுபோல உடனாகவும் நின்று, இறைவன் உயிர்களுக்கு நலம் புரிந்து வருகின்றான் என்பது, சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிவான தனிப்பெரும் கொள்கை. இம்முதன்மையான தத்துவக் கொள்கையை விளக்குதற்கு ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் வேறு எத்தனையோ பல பாடல்களை மேற்கோளாகக் காட்டியிருத்தல் கூடும் ஆயினும் அவர் அவ்வாறு செய்யாமல்,

> " அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே;
> அறிவாய் அறிகின்றான் தானே;—அறிகின்ற
> மெய்ப்பொருளுந் தானே; விரிசுடர்பார் ஆகாயம்
> அப்பொருளுந் தானே அவன்''

என அற்புதத் திருவந்தாதியில் வரும் அழகியதொரு பாடலையே, எடுத்துக்காட்டி அருள்கின்றார். இதன் கண் ''அறிவானும் தானே'' என்பது வேறுதல்; ''அறிவிப்பான் தானே'' என்பது ஒன்றுதல்; ''அறிவாய் அறிகின்றான் தானே'' என்பது உடனாதல். சைவ சித்தாந்தத்தின் உயிர்ப்பான ஒரு பெரும் தத்துவ உண்மையை வலியுறுத்துவதற்கு, மாதவச் சிவஞான சுவாமிகள் அற்புதத்திருவந்தாதியின் பாடலை எடுத்துக்காட்டியிருப்பதொன்றே, அதன் அளப்பரும் சிறப்பை விளக்கப் போதியதாகும்.

முடிவுரை :

இத்தகைய பற்பல சிறப்புக்கள் அமையும்படி நமது காரைக்கால் அம்மையார் பாடியுள்ள கவிதை நூல்களை, நமது தமிழகத்துச் சைவ மகளிர் அனைவரும், நயந்து இனிது ஓதி, நலம் பலவும் பெற்று வாழ, எல்லாம் வல்ல அம்மையப்பரின் திருவருள் துணை புரிவதாகுக.

—:×:—

## நூல்கள் அறிமுகம்

(1) கந்தர் அலங்காரம் : அருணகிரிநாதர் அருளிய நூல்களில் ஒன்றாகிய சிறந்த நூலுக்கு, வித்துவான் ச. ரா. கச்சபேசுவரன், எம். ஏ. அவர்கள், எளிய இனிய முறையில் தெளிவான விளக்கவுரை எழுதியுள்ளார்கள். அறிஞர் பலர் சிறப்புரைகள் வழங்கியுள்ளனர். சிறந்த நல்ல பதிப்பு. முருக பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும். விலை ரூ. 3/– கிடைக்குமிடம்: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, 8, ரங்கநாதன் தெரு, தியாகராயநகர், சென்னை-600 017.

(2) திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ் : கவிராட்சச கச்சியப்ப முனிவரின் மாணவர்களில் ஒருவராகிய கந்தப்ப முனிவர் பாடிய இவ் அரும்பெறல் நூலை மிகவும் செவ்விதின் ஆராய்ந்து சைவப் பெரியார் இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி. ஏ. அவர்கள் ஆராய்ச்சி முன்னுரையுடனும் குறிப்புரைகளுடனும் வெளியிட்டுள்ளார். விருத்தாசலம் ஸ்ரீகுமாரதேவர் திருமடத்தின் தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்தர சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் அவர்களின் ஆசியுரையுடன் இந்நூல் மிகச் சிறந்த முறையில் வெளிவந்துள்ளது. திரு. நல் முருகேச முதலியார் அவர்கள் மிகவும் சிறந்த முறையில் இந்நூலுக்குக் குறிப்புரை வரைந்துள்ளார்கள். திருத்தணிகை முருகன் அடியார்களுக்கு, இந்நூல் ஒரு சிறந்த பாராயண நூலாகப் பெரிதும் பயன்படும். சிறந்த நல்ல திருத்தமான பதிப்பு. பெருமக்கள் பலர் சிறப்புரை வழங்கியுள்ளனர். விலை. ரூ 2-50. கிடைக்குமிடம்; ஸ்ரீகுமார தேவர்மடம், தெற்குத் தெரு, விருத்தாசலம்.

(3) காரியசித்தி : சிவநெறிப் பெருஞ்சான்றோர், சிவயோகி திரு. மா. இரத்தின சபாபதி பிள்ளை அவர்கள், திருமூலர் திருமந்திரத்திற்கும், திருவாசகத்திற்கும் விளக்கவுரைகள் எழுதிவெளியிட்டு, முன்பே அனைவராலும் புகழ்ந்து போற்றும் பெருநலம் பெற்ற பெருந்தகையார் ஆவர். அவர்கள் விநாயகரின் உண்மைப் பொருள் விளக்கத்தினை, மிக்க நுண்மையுடனும் உண்மையுடனும் ஆராய்ந்து விளக்கியுள்ள ஓர் அரும்பெரும் ஆராய்ச்சி நூலே, "காரியசித்தி" என்னும் இந்நூலாகும். இதற்கு நீதிபதி எஸ். மகராசன் அவர்களும், அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களும் அணிந்துரைகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். ஔவையார் அருளிய விநாயகர் அகவலின் யோக அநுபவ நுண்பொருள்கள் மிகச் சிறப்பாகவும் விரிவாகவும் இதன்கண் விளக்கப் பெற்றுள்ளன. விநாயகரைப் பற்றிய தத்துவ நுண்பொருள்கள் அனைத்தும் இதன்கண் விளக்கமாக வகுத்துக் கூறப்பெற்றுள்ளன. மிகவும் பயனுள்ள அரிய சிறந்த நூல். விலை ரூ. 5/–. கிடைக்குமிடம்: வானதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-600017.

—ஆசிரியர்.

# "எங்கு எழிலென் ஞாயிறு?"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

சிறந்த கவிஞர்கள், உயர்ந்த கருத்துக்களை, அழகிய கவிதைகளாக வெளியிடுகிறார்கள். அங்ஙனம் உயர்ந்த புதிய கருத்துக்களை அழகுற விளக்கிட முற்படும் கவிஞர்கள், அக்கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற இனிய நல்ல சொற்களையும் சொற்றொடர்களையும் கூட, ஆராய்ந்து கண்டு அமைத்து, நமக்கு அரிய முறையிற் படைத்துக் கொடுக்கின்றனர். அதன் பயனாக ஒரு மொழியின் சொல்வளம், நடைவளம், கருத்துவளம் முதலியன பலவகைகளில் வளர்ந்து விரிவடைகின்றன. ஷேக்ஸ்பியர் போன்ற கவிஞர்கள் பலரும், தாமே புதிதாகப் படைத்து முதன்முதலாக வழங்கிய எத்தனையோ பல அழகிய இனிய சிறந்த சொற்றொடர்களை (Felicitous phrases & expressions), மேலை நாட்டு அறிஞர் பெருமக்கள் மிகவும்மதித்துப் போற்றித் தத்தம் நூல்களில் எடுத்துக் கையாண்டு மகிழ்தலைக் காண்கின்றோம்

அழகிய விழுமிய தொடர்கள் :

தாமசு ஆர்டி என்பவர் Under the Green Wood Tree' Far From the Madding Crowd என்றும்; அகாதா கிரைஸ்டி Murder Most Foul என்றும்; சாமர்செட்மாம் Cakes and Ale என்றும் ;ஜே. பி. ப்ரீஸ்ட்லி Bright Day என்றும் ஷேக்ஸ்பியரின் சொற்றொடர்களைக்கொண்டே, தத்தம் நூல்களுக்குப் பெயரிட்டுள்ளமை காணலாம். ஆல்டஸ் அக்ஸ்லி என்னும் அறிஞர், ஷேக்ஸ்பியரின் சொற்றொடர்களைத் தம் நூல்களுக்குப் பெயராக அமைத்தலில் தனிப்பெரு விருப்பம் உடையவராகத்திகழ்கின்றார். அவர் ஷேக்ஸ்பியரின் "மகபதி" என்னும் நாடகத்திலிருந்து Brief Candle; Point Counter point என்றும்; 'புயல்' என்னும் நாடகத்தினின்று Brave New world என்றும்; "அளவுக்கு அளவு" என்னும் நாடகத்தினின்று Ape & Essence என்றும்; Time Must Have A Stop என்றும்; தம் நூல்களுக்குப் பெயர்கள் அமைத்திருக்கின்றார். இங்ஙனம் பிற்காலத்தவர் பலரும் ஏற்றுப் போற்றி மகிழும் முறையில், புதிய நல்ல சிறந்த சொற்கள் சொற்றொடர்களை முதன் முதலில் ஆராய்ந்து கண்டு அழகுற அமைப்பது என்பது, எல்லாக் கவிஞர்களுக்கும் எளிதின் இயல்வதன்று. இத்திறம், தலைசிறந்த பெருங்கவிஞர்களுக்கு மட்டுமே இயல்பாக அமையும் ஒருபெருஞ் சிறப்பியற் பண்பாகும்!

அம்முறையில், நமது மணிவாசகப் பெருமான் அழகுறப் புனைந்து முதன்முதலாக வழங்கியருளிய அரிய தொடர்கள் பலவற்றுள், "எங்கு எழிலென் ஞாயிறு ?" என்பதும் ஒன்றாகும் எனலாம். இத்தொடரின் சிறப்பினை என்னென்பது? எவ்வகையில் விளக்குவது? "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தேயன்றே ?"

திருவெம்பாவை :

நம் தமிழ் மொழியானது, பழமையும் பெருமையும் வாய்ந்த இலக்கியங்கள் பலவற்றை யுடையது. தமிழிலக்கியங்களுள், சங்க இலக்கியங்கள் தனிச்சிறப்புடையன, தெய்வநல மாட்சிமையுற்றுத் திகழ்தலால், சங்க இலக்கியங்களிலும், ஒருவகையில் திருமுறை நூல்கள்பெருமை வாய்ந்தவை. அவற்றுள்ளும் திருவாசகம் தனக்கேயுரிய பல சிறப்பியல்புகளை யுடையது. அத்திருவாசகத்திலும், திருவெம்பாவை பெருஞ் சிறப்புற்றுப் பிறங்குகின்றது. அதன்கண் வரும் அரிய பல தொடர்களுள் "எங்கு எழிலென் ஞாயிறு ?" என்னும் இத்தொடர், இனிமை நிரம்பித் திகழ்வது எனில் மிகையாகாது.

திருவெம்பாவையில் "உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" எனத் தொடங்கும் திருப்பாடலில், இச்சிறந்த தொடர் அமைந்து வருகின்றது. அப்பாடலின் பொருள் :

"பெருமானே ! நின்பால் நாங்கள் ஒன்றை விண்ணப்பித்துக்கொள்கின்றோம். கேட்டருள்க!நின் அன்பர்களே எங்களுக்குரிய கணவர்களாக வந்து வாய்த்தல் வேண்டும். எம்முடைய கொங்கைகள் நின் அன்பர்களின் தோள்களையே சேர்தல் வேண்டும்; பிறருடைய தோள்களைச் சேர்தல் ஆகாது. எம்முடைய கைகள் உனக்கு மட்டுமே பணி செய்தல் வேண்டும். எம்முடைய கண்கள் இரவிலும் பகலிலும் நின்னைத் தவிர வேறு பிறிது எதனையும் நோக்குதல் கூடாது. இவ்வாறு யாம் விரும்புதலையே இவ்வுலகில் எமக்கு நீ அருள்செய்து விடுவாயாயின், அதன்பின் சூரியன் எந்தத் திசையில் தோன்றினாலும், எங்களுக்குச் சிறிதும் கவலையில்லை" என்பதாகும். "எமது வேண்டுகோள் இறைவன் திருவருளால் நிறைவேறப் பெற்றால், அதன்பின் எங்களுக்கு எதனைப்பற்றியும் எத்தகைய கவலையும் இன்றி, இன்பத்திலேயே யாம் திளைத்திருப்போம்" என்னும் கருத்திலேயே, மேலைத் தொடர் வழங்கப் பெற்றுள்ளது.

புறநானூறு :

சூரியன் திசைமாறித்தோன்றினாலும், ஒரே சமயத்திற் பல திசைகளில் சூரியன் தோன்றியிருப்பது போலக் காணப்பட்டாலும், அஃது உலகிற்கு நேர இருக்கும் பெருந் தீங்குகளையுணர்த்தும் அறிகுறி (உற்பாதம்) ஆகும் என்பது, பண்டைத் தமிழ் மக்களின் நம்பிக்கைகளுள் ஒன்று. கோவூர்கிழார் என்னும் புலவர் பெருமான் புறநானூற்றுப் பாடல் ஒன்றில், "எட்டுத் திசையினும் எரிகொள்ளி எரிந்து வீழ்தல், சூரியன் பல இடங்களிற் செறிந்து தோன்றுதல், அஞ்சத்தக்க ஆந்தை முதலிய பறவைகள் அலறுதல் முதலிய நனவு

நிகழ்ச்சிகளும்; பற்கள் நிலத்தின்கண் வீழ்தல், மயிரின்கண் எண்ணெய் வார்த்தல், பன்றியின்மேல் ஊர்தல், ஆடையைக் களைதல், படைக்கலன்கள் இருந்த இடத்தினின்று பெயர்ந்து விழுதல் போன்ற கனவுக் காட்சிகளும், தீங்கு பயப்பனவாகும்' என்று குறிப்பிடுகின்ருர்.

"திசை இரு நான்கும் உற்கம் உற்கவும்,
பெருமரத்து
இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்,
வெங்கதிர்க் கனலி துற்றவும், பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்,
எயிறுநிலத்து வீழவும், எண்ணெய் ஆடவும்,
களிறுமேற் கொள்ளவும், காழகம் நீப்பவும்,
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்,
கனவின் அரியன காணு......"

-- புறம். 41.

சூரியன் திசைமாறித் தோன்றினலும், ஒரே சமயத்திற் பல திசைகளில் தோன்றினலும், நேரக் கூடிய தீங்குகள் பலவாகும் என்று, பண்டைக் காலத்து மக்கள் பலரும் கொண்டிருந்த நம்பிக்கையினை, இவ்வழகிய விழுமிய தொடர் புலப்படுத்துவதுடன், "நின் அடியவர்களாகிய நல்ல கணவன்மார்களே எங்களுக்குக் கிடைக்குமாறு நீ அருள்செய்துவிட்டால், எங்களுக்கு அதனின் மிக்க பேறு வேறு இல்லை. அப்பேற்றை எப்படியாயினும் எமக்கு நல்கி யருளுதல் வேண்டும்" என்று கன்னிப் பெண்கள் இறைவனை வழுத்தி வழிபடும் முறையில் அமைந்துள்ள பொருத்தமும் சிறப்பும் போற்றற்பாலனவாகும்.

தனிப்பாடல் :

(1) இத்துணைப் பொருத்தமும்சிறப்பும் அமைந்துள்ளமை பற்றியே, இவ்வினிய தொடரைக் கவிஞர்கள் பல–ருப் உவந்து எடுத்துப் போற்றியிருக்கக் காண்கின்ருேம்.

"திருத்தக்க மாமுனிசிந் தாமணியும், கம்பன்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்; -- பெருத்தக்க
கொங்குவேள் மாக்கதை கேளேம்; குறள் அணுகேம்;
எங்கெழிலென் ஞாயிறு ? எமக்கு"

என்னும் ஒரு பழைய தனிப்பாடலில், இவ்வினிய தொடர் செவ்விதின் எடுத்துப்போற்றப் பெற்றிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

சீவக சிந்தாமணி :

(2) திருத்தக்கதேவர் என்னும் சமண்சமயப் பெருங் கவிஞர் இயற்றிய சீவக சிந்தாமணி என்னும் சிறந்த பெருங்காவியத்தில், கனகமாலையார் இலம்பகம் என்னும் பகுதியில், சீவகனின் தாய் ஆகிய விசயையின்பால், சீதத்தன் புத்திசேனன் பதுமுகன் விசயதத்தன் என்பாரை அறிமுகம் செய்து வைத்து, தாம் சீவகனுக்கு உரிய உயிர்நண்பர்களாக விளங்கி வரும் செய்தியைத் தேவதத்தன் என்பான் கூறுவதாக வரும் இடத்தில், இத்தொடர் இனிதெடுத்து அழகுறக் கையாளப் பெற்றுள்ளது.

"எங்கள் வினையால் இறைவன் வீடியஅஞ் ஞான்றே,
எங்கள் உயிர் நம்பியொடு நாங்கள் பிறந்தேமா.
எங்கள் தமர் நம்பிக்கு இவர் தோழர்என ஈந்தார்;
எங்கெழிலென் ஞாயிறு? என இன்னணம் வளர்ந்தேம்"

— சிந்தாமணி

சிவஞானசித்தியார் :

(3) சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவரும், சிவஞான சித்தியார் என்னும் தலைசிறந்த தத்துவநூலை இயற்றியவரும் ஆகிய அருள்நந்திசிவாசாரியார், சீவன்முத்தர்களின் இயல்பினை விளக்கும் இடத்தில், இத்தொடரைப்போற்றி எடுத்தாண்டிருக்கின்ருர். "புண்ணியம் நம்மை மேலே உயரச் செய்யும். பாவம் நம்மைக் கீழே தள்ளும். புண்ணியவடிவினன் ஆகிய இறைவனை வழிபடுதலால் எய்தும் புண்ணியம், ஏனைய எல்லாப் புண்ணியங்களினும் மிகவும் சிறந்தது. அதனல் ஞானம் எய்தும். அங்ஙனம் ஞானம் அடைந்து, முறையே பொன்விலங்கும் இரும்புவிலங்கும் போன்ற புண்ணியம் பாவம் என்னும் இரண்டினையும் அறுத்தொழித்து, நரகம் சுவர்க்கம் நிலவுலகம் ஆகிய எதன் கண்ணும் பிறத்தலினின்று நீங்கி, இவ்வுலகில் சீவித்துக்கொண்டிருக்கும்போதே முத்தியை அடைந்து விட்ட நிலையிலுள்ளவர் சீவன்முத்தர்கள்: தம் உடல் உள்ள அளவும், இறைவனதுவியாபகநிறைவின்கண் அடங்கிக் கலந்திருந்து, தம் உடல் கழியப்பெற்ற நிலையில், இறைவனைப் போலவே அவர்கள் எங்கும் வியாபித்து நிற்கப் பெறுவர். தமக் கென ஒரு குறைவும் இல்லாத நிலையில், அவர்கள் "இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை" என்றபடி, சூரியன் எங்கே உதித்தால்தான் நமக்கு என்ன? என்று, கவலையற்று மகிழ்ந்திருப்பார்கள். இது சீவன் முத்தர்களின் இயல்பாகும்என்று சிவஞான சித்தியார் தெளிவுறக் கூறுகின்றது.

"புண்ணியம்மேல் நோக்குவிக்கும்; பாவம் கீழ் நூக்கும்;
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னலே
நண்ணிய ஞானத்தினல் இரண்டினையும் அறுத்து,
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணன் ஆகி
எண்ணும் இகலோகத்தே முத்திபெறும் இவன்தான்,
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு? என்று, குறைவின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து, காயம்
கழிந்தக்கால், எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன்"

—சித்தியார், 283

திருநாவுக்கரசர் :

(4) இவ்வாறே, நம் திருநாவுக்கரசர் பெருமான் தம்முடைய 'தனித் திருத்தாண்டகம்' என்னும் பதிகத்தில், இத் தொடரைக் கையாண்டிருக்கக் காண்கின்ருேம். காலத்தின் முன்பின்பற்றிய கருத்துக்கள் எங்ஙனம் இருப்பினும், இத்தொடர் திருநாவுக்கரசராலும் ஆளப்பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை. திருநாவுக்கரசர் பின்வரும் கருத்தமையத் தம் திருப்பாடலை அருளிச் செய்கின்ருர்: "அழகிய பவளம் போன்ற சிவந்த சடையின்மேல் கங்கைநதியைச் சூடியவரும், தீயை ஏந்தி ஆடுபவரும், ஆனைந்து எனப்படும் பஞ்ச கவ்வியப் பொருள்களால் திருமுழுக்கு ஆட்டுதலை விரும்பியருள்கின்ற செம்பவள வண்ணரும், சிவந்த மலை போன்ற நிறமுடையவரும், செவ்வான வண்ணரும் ஆகிய சிவபெருமான், என் சிந்தையின்

கண் எழுந்தருளி வீற்றிருக்கின்றார். ஆதலின் நம் மீது கூற்றுவன் வெகுண்டு வரும் ஆற்றல் இலன் ஆயினான். கொடிய வினைகள் ஆகிய பகைகளும், மெலல அழிந்தொழிந்தன. எம்முடைய கவலைகள் தீரப் பெற்றோம். எமக்கு நேரக்கூடிய துன்பம் எதுவும் இல்லை. சூரியன் எங்கே உதித்தால்தான் எமக்கு என்ன? யாம் வலிமை குன்றிய எளிமைத் தன்மை யுடையோம் அல்லோம். சிவபெருமானின் திருவருள் துணையாகிய பெருவலிமையினை யாம் பெற்றிருக்கின்றோம்" என்பது, அத் தனித் திருத்தாண்டகச் செய்யுளின் பொருள்.

"வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்.
வெய்ய வினைப்பகையும் பைய நையும்;
எம்பரிவு தீர்ந்தோம்; இடுக்கண் இல்லோம்;
எங்கெழிலென் ஞாயிறு? எளியோம் அல்லோம்;
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி,
அனலாடி, ஆன் அஞ்சும் ஆட்டுஉகந்த
செம்பவள வண்ணர், செங்குன்ற வண்ணர்,
செவ்வான வண்ணர், என்சிந்தை யாரே"

முடிவுரை :

இதுகாறும் ஆராய்ந்தவாற்றால், மணிவாசகப் பெருமான் ஒருபெரும் அருளாளர் மட்டுமே யன்றி மிகச் சிறந்த பெருங் கவிஞர் என்பதும்; அவர் அருளிச் செய்த திருவாசகம் பலவகைச்சிறப்புக்களுடைய தென்பதும்; திருவாசத்தின்கண் இடையிடையே போதரும் அழகிய விழுமிய தொடர்கள் பலவற்றைப் பின்வந்த சான்றோர்கள் பலரும் வியந்து போற்றிப் பயன் கொண்டுள்ளனர் என்பதும்; நன்கினிது புலனாகும். இன்னோரனைய சிறப்புகள் மிக்க திருவாசகச் செந்தமிழ் மாமறையினை, நாம் நாடோறும் ஓதிப் பயின்று, இம்மை மறுமை நலங்கள்யாவும் பெற்றுச் செம்மையுற வாழ முயல்வோமாக!

—ஆசிரியர்




புதுக்கோட்டைத் திருக்கோயில்களைச் சார்ந்த ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் நிகழ்ந்த சம்ப்ரோட்சண விழவில், அறநிலைய ஆணையார் திரு எம். சே, பால சுப்பரமணியம், I. A. S. அவர்களும், ஸ்ரீ அண்ணா சுப்பரமணியம், ஸ்ரீ சுவாமி சுகானந்தா, மற்றும் பல பெருமக்களும் கலந்து கொள்ளுதல் (31-1-77),

# உபதேச இரத்தினமாலை

ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

முன்னுரை :

முன்னம் திருவாய் மொழிப்பிள்ளை
தாம் உப தேசித்தநேர்
தன்னின் படியைத் தணவாத சொல்
மணவாள முனி,
தன் அன் புடன்செய் உபதேச
ரத்தின மாலைதன்னைத்
தன்நெஞ்சு தன்னில் தரிப்பவர்
தாள்கள் சரண் நமக்கே

—தனியன்.

ஸ்ரீவைஷ்ணவப் பெருஞ்சான்ருேராகிய மணவாளமாமுனிகள் அருளிச் செய்த நூல்களுள், உபதேச ரத்தினமாலை என்பதும் ஒன்ருகும். இதன்கண் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் அருட்பெருஞ் சான்ருேர்களான ஆழ்வார்களின் திருப் பெயர்கள், அவர்கள் அவதரித்த மாதங்கள், நட்சத்திரங்கள், தலங்கள், அவ்ஆழ்வார்கள அருளிய திவ்வியப்பிரபந்தங்களுக்கு வியாக்கியானங்கள் முதலியவற்றை அருளிச்செய்த ஆசாரியர்களின் பெருமைகள், அவ்வாசாரியர்களுள் தலைவரான பிள்ளைலோகாசாரியரின் பெருமை, அவர் அருளிச் செய்த நூல்களுள் தலைசிறந்த ஸ்ரீவசன பூஷண நூலின், பெருமை, அந்நூலின் சாரமான நுண்பொருள்கள். ஆகிய பலப்பல செய்திகள், உபதேச ரத்தின மாலை என்னும் இந்நூலின்கண், அழகிய இனிய வெண்பாக்களில் சிறப்புற எடுத்து விளக்கப் பெறுகின்றன. அந்நூற் பொருளைச் சுருக்கமாக ஈண்டுத் தொகுத்துக் காண்போம்:

## ஆழ்வார்கள் :

பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான் நம்மாழ்வார் குலசேகரப்பெருமாள் பெரியாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணுழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய இவர்கள் பதின்மரும், முறையே அவதரித்தவாகளாவர். இவர்களுடன் ஆண்டாள் நாச்சியார், மதுரகவியாழ்வார் என்னும் இருவரையும் சேர்த்து, ஆழ்வார்கள் பன்னிருவர் என்று கூறுவதும் உண்டு. ஆழ்வார்களின் அவதாரக்கிரமத்தை ஒருசிலர் மாற்றிச் சொல்வதுண்டு. அது பொருந்தாது. ஆழ்வார்களின் அவதாரக் கிரமம் இதுதான் என்று மணவாள மாமுனிகள், இந்நூலில் அறுதியிட்டு வரையறை செய்து கூறியுள்ளமை, சிறப்பாகப் போற்றற்பாலது.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் --துய்யபட்ட
நாதன் அன்பர் தாள்தூளி நற்பாணன் நன்கலியன்
ஈதிவர் தோற் றத்தடைவாம் இங்கு

## தோற்றத்தின் மாதமும் நாளும் :

இங்ஙனம் ஆழ்வார்களின் தோற்றத்து அடைவினை வரையறை செயதருளிய மணவாள மாமுனிகள், அவர்கள் தோன்றிய மாதங்களையும் நட்சத்திரங்களையும் கூட அழகுறத் தொகுத்துக் கூறுகின்ருர், பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் என்னும் மூவரும், ஐப்பசி மாதத்தில் தோன்றியவராவர். பொய்கையார் திருவோணத்திலும், பூதத்தார் அவிட்டத்திலும், பேயாழ்வார் சதயத்திலும் தோன்றியருளினர். பொய்கையார் பேயார் பூதத்தார் என்னும் இம்மூவரும் மற்றைய ஆழ்வார்களுக்கு முன்னே தோன்றி, நற்றமிழால் நூல் செய்து நாட்டை உய்வித்த பெருமையுடையவர்கள் ஆதலின், இவர்களுக்கு முதலாழ்வார்கள் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

முதலாழ்வார்கள் தவிர்த்த மற்றைய ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் தோன்றியருளினர், திருப்பாணுழ்வார் கார்த்திகை மாதத்தில் உரோகிணி நட்சத்திரத்திலும், தொண்டரடிப்பொடியாழ்வார் மார்கழிக் கேட்டையிலும், திருமழிசையாழ்வார் தைமாத மகத்திலும், குலசேகர ஆழ்வார் மாசிப் புனர்பூசத்திலும், நம்மாழ்வார் வைகாசி விசாகத்திலும், பெரியாழ்வார் ஆனிச் சுவாதியிலும் தோன்றியருளினர்.

## பெரியாழ்வாரும், திருப்பல்லாண்டும் :

ஆழ்வார்களில் திருப்பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் என்பவருக்குப் பெரியாழ்வார் என்னும் சிறப்புப்பெயர் உண்டு. எம்பெருமானுக்கு மங்களாசாசனம் செய்வதில் மற்றுள்ள ஆழ்வார்களுக்கு இருந்த ஆர்வத்தைக் காட்டிலும், மிகுதியான பரிவு மிகப்பெரிய அளவில் இருந்ததினுல், இவருக்குப் பெரியாழ்வார் என்னும் காரணச் சிறப்புப்பெயர் ஏற்பட்டது.

மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள் ஆர் வத்தளவு தான்அன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்ருன்,
பெரியாழ்வார் என்னும் பெயர்!

வேதத்துக்குப் பிரணவமாகிய ஓங்காரம் எங்ஙனம் முதன்மையாகவும் சுருக்கமாகவும் மங்களமாகவும் அமைந்துள்ளதோ, அதுபோல ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களுக்கெல்லாம். பெரியாழ்வார் பாடியருளிய திருப்பல்லாண்டு முதன்மையும் சுருக்கமும் மங்களமும் அமைந்து, அவற்றிற்கெல்லாம் முதன்மையானதாகத் திவ்வியப்பிரபந்தத்தின் தொடக்கத்திலேயே சிறப்பாக அமைந்து திகழ்கின்றது. ஆழ்வார்களில்

பெரியாழ்வாருக்கு ஒப்பாக ஒருவரும் இல்லை. அது போல் திருப்பல்லாண்டுக்கு ஒப்பான நூலும் வேறொன்று இல்லை.

ஆண்டாளும், மதுரகவியும், இராமாநுசரும்:

இத்தகைய சிறப்புமிக்க பெரியாழ்வாரின் திருமகளார் ஆகிய ஆண்டாள் திருவாடிப்பூரத்திலும், நம்மாழ்வாருடைய குணப்பெருங் கடலில் ஆழ்ந்து திளைத்து இன்புற்ற மதுரகவியாழ்வார் சித்திரைமாதத்துச் சித்திரையிலும், அனைவரும் உய்ய உதித்த எதிராஜர் ஆகிய இராமாநுஜர் சித்திரைத் திருவாதிரையிலும் தோன்றி அருளினர். ஆண்டாளுக்கு ஒப்பில்லாமைபோல, அவர் அவதரித்த திருவாடிப்பூரத்திற்கும் ஒப்பில்லை. ஆண்டாள், 'அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய்த் தோன்றியவர்'. ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சிநிற்கும் தன்மையள். இளமையிலேயே முதிர்ந்த பக்திஞானங்கள் கைவரப்பெற்று பிஞ்சாய்ப்பழுத்தவள். அவளைப் பக்தியுடன் நாளும் வழுத்துவது நமது கடமையாகும்.

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்ப், — பிஞ்சாய்ப்
பழுத்தாளை, ஆண்டாளைப், பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து,

திருவெட்டெழுத்தாகிய திருமந்திரத்தின் இடையில் உள்ள நம என்னும் பதம் போல, மதுரகவியாழ்வார் செய்தருளிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் திவ்வியப்பிரபந்தம் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களின் நடுவே முன்னோர்களால் அதன் சிறப்புக் கருதிச் சேர்க்கப் பட்டுத் திகழ்கின்றது.

வாய்த்ததிரு மந்திரத்தின் மத்திமம் ஆம்பதம்போல்
சீர்த்த மதுரகவி செய் செயலை ,— ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள், அருளிச் செயல் நடுவே
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து

எம்பெருமானார் :

ஆழ்வார்களின் பெருமையையும், அவர்கள் அருளிச் செய்த திவ்வியப்பிரபந் தங்களின் சிறப்பினையும், நாதமுனிகள் முதலாகிய நம்முடைய ஆசாரியர்களைத்தவிர அறியவல்லவர்கள் யாரும் இல்லை.

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் ஆர்?
அருளிச் செயலை அறிவார் ஆர்? — அருள்பெற்ற
நாத முனிமுதலாம் நம்தே சிகரை அல்லால்,
பேதைமன மே! உண்டோ? பேசு-

நம்முடைய ஆசாரிய பரம்பரையில், நாதமுனிகள் முதலாக இருந்த ஆசாரியர்கள் எல்லோரும் திவ்வியப் பிரபந்தங்களின் அரிய பெரிய பொருள்நலங்களை ஓராண் வழியாகவே உபதேசித்து வந்தனர். ஆனால் அவர்களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எதிராஜராகிய எம்பெருமானார் (இராமாநுஜர்), தம் பேரருளின் திறத்தால், அடியார்களையெல்லாம் விளித்து அறைகூவி, இப்பொருள் நலங்களைக் கேட்க ஆசையுடையவர்கள் எல்லோருக்கும் இவற்றை உபதேசியுங்கள் என்று கட்டளையிட்டு, முன்னோர்கள் வைத்துக் கொண்டிருந்த ஒரு வரம்பினை அறுத்துப் போக்கிவிட்டார்,

ஓர் ஆண் வழியாய் உபதேசித் தார் முன்னோர்!
ஏரார் எதிராசர் இன்னருளால், — பாருலகில்
ஆசையுடை யோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும்என்று,
பேசி வரம்பறுத்தார் பின்.

இங்ஙனம் இந்த ஸ்ரீவைஷ்ணவமாகிய தரிசனத்தை இராமாநுஜராகிய எம்பெருமானார், வளர்த்துப் பரப்பிய செயலின் மாட்சிமையை யாவரும் அறிந்து வியந்து போற்றுவதற்காகவே, இத் தரிசனத்திற்கு "எம்பெருமானார் தரிசனம்" என்று நம்பெருமாள் (திருவரங்கநாதர்), இந்தக் கொள்கைக்குப் பெயரிட்டு வழங்கும் படி நிலைபெறுவித்தார்.

எம்பெரு மானார் தரிசனம் என்றேஇதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்; — அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமா னார்வளர்த்த
அந்தச் செயல் அறிகைக்கா!

திருவாய்மொழி உரையாசிரியர்கள் :

திருக்குருகைப்பிரான்பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் ஆகிய ஐந்து பெருஞ் சான்றோர்களும், நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி என்னும் தமிழ் வேதத்தினைத் தம்முடைய விரிவுரைகளினாலே காத்தருளிய பெரியோர்கள் ஆவார்கள். இவ்வைந்துபெருமக்களும் திருவாய்மொழிக்கு வியாக்கியானங்கள் இயற்றியருளி யிருக்காமற் போனால், அந்தோ! திருவாய்மொழியின் பொருளைத் தேர்ந்து உரைக்கவல்லவர்களாக, இக்காலத்தில் ஒருவரும் இருக்க மாட்டார்,

பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச் சான்பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப் — பிள்ளை
மணவாள யோகிதிரு வாய்மொழியைக் காத்த
குணவாளர் என்றுநெஞ்சே கூறு.

தெளிந்த ஞானத்தை உடையவராகிய திருக்குருகைப் பிரான்பிள்ளான் என்பவர், தம் ஆசிரியராகிய இராமாநுஜரின் திருவருளால் திருவாய்மொழிப் பொருளை விளக்கி அருளிச் செய்த வியாக்கியானம், ஆறாயிரப்படி என்பதாகும். ஒற்றுநீக்கி 32 எழுத்துக்கள் கொண்டது கிரந்தம் எனப்பெறும். இங்ஙனப் ஆறாயிரம் கிரந்தம் கொண்ட நூலுக்கு ஆறாயிரப்படி என்பது பெயர். இவ்வாறே, நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படியும்; வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர், பன்னீராயிரப் படியும்; நம்பிள்ளையின் ஆணைப்படி, பெரியவாச்சான் பிள்ளை இருபத்து நாலாயிரப்படியும்; வடக்குத் திருவீதிப் பிள்ளை முப்பத்தாறாயிரப்படியும், முறையே இயற்றியருளினர்.

இவர்களில், "வியாக்கியானச் சக்கரவர்த்தி" என்னும் விழுப்புகழ்பெற்ற பெரியவாச்சான்பிள்ளை என்பவர், திருவாய்மொழிக்கு மட்டுமன்றி, மற்றுமுள்ள திவ்வியப் பிரபந்தங்களுக்கும் கூட, விரிவான வியாக்கியானங்கள் அருளிச் செய்துள்ளார். அதனாலேயே திவ்வியப் பிரபந்தப்பொருள்களை, இக்காலத்தில் யாவரும் அறிந்து கற்று மகிழும் வாய்ப்பு ஏற்படுவதாயிற்று.

எம்பெருமானுக்கு என்ன தீங்கு நேருகிறதோ என்று, அன்பினால் அஞ்சுகின்ற குடிகளாகிய ஆழ்வார்கள் பதின்மருக்கும் உரிய ஒரே புதல்வியாகத் தோன்றியதனால், ஆண்டாள் "அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததி" என்று சிறப்பித்துக் குறிக்கப்பெற்றார். இனி "அஞ்சுகுடி" என்பது பெரியாழ்வாருக்குரிய சிறப்புப்பெயரும் ஆகும். இங்ஙனமன்றித் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் என்னும் நாள்கு குடிகளுடன் முதலாழ்வார்கள் ஆகிய ஒருகுடியும் சேர்ந்து "அஞ்சுகுடி (ஐந்துகுடி) எனப்பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

— ஆசிரியர்

வேதாந்த முனிவர் என விளங்கியிருந்த நஞ்சீயர், திருப்பாவைக்கும், கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் மட்டுமே, வியாக்கியானங்கள் செய்தருளினர். பிள்ளை லோகாசாரியருடைய தம்பியாராகிய அழகியமணவாளப் பெருமாள்நாயனர், திருப்பாவைக்கும், அமலனுதி பிரானுக்கும், கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் வியாக்கியானம் செய்து அருளினர். வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் மூவாயிரத்தில் திருவிருத்தம் ஒன்றுக்கே உரையிட்டருளினர்.

திருவாய்மொழிக்கு ஐந்து பெருஞ்சான்றோர்கள், வியாக்கியானங்கள் இயற்றினர். ஆயினும் ஈடுமுப்பத்தாருயிரப்படி என்னும் வியாக்கியானமே, இப்பொழுது பரவலாகப் போற்றிப் பயின்று வரப்பெறுகின்றது. நம்பிள்ளையின் உபந்நியாசங்களைக் கேட்டு, அவற்றை வடக்குத்திருவீதிப்பிள்ளை பட்டோலைகொண்டு, ஈடுமுப்பத்தாருயிரப்படி என்னும் நூலாக்கி முடித்து, நம்பிள்ளையின் திருமுன்பு கொண்டு போய் வைத்தருளினர். அதனைத் திருவரங்கர்மூலமாக நம்பிள்ளையிடமிருந்து, சிறியாழ்வான் அப்பிள்ளை என்னும் ஈயுண்ணி மாதவப் பெருமாள் என்பவர், கிடைக்கப்பெற்றார்.

அவர் தம்முடைய திருக்குமாரர் பத்மனுபப் பெருமாளுக்கும், அவர் அதனை நாலூர்ப் பிள்ளை என்பவருக்கும், அவர் தம் திருக்குமாரரான நாலூராச்சான் பிள்ளைக்கும் வழங்கினர். அந்த நாலூராச்சான் பிள்ளையே, பின்னர் அனைவருக்கும் உபதேசித்தருளினர்

### பிள்ளை லோகாசார்யர் :

பெரியவாச்சான் பிள்ளை இயற்றிய இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானத்திற்கும், வடக்குத் திருவீதிப் பிள்ளை இயற்றிய ஈடுமுப்பத்தாருயிரப்படி வியாக்கியானத்திற்கும், மூலகாரணமாக இருந்தவர், லோகாசாரியர் என்பவர். நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் என்றாற் போல, லோகாசாரியருக்கு அவர் தம் அளப்பரும் பெருமை பற்றி, நம்பிள்ளை என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்;—அன்புடையோர்
ஏத்துதிரு நாமங்கள் தாம் என்று நன்னெஞ்சே
ஏத்ததனைச் சொல்லிநீ இன்று.

கந்தாடை தோழப்பர், தம் அன்பின் மிகுதியால், நம்பிள்ளையினை "இவர் என்ன லோகசாரியரோ?" என்று வியந்து வினவி மகிழ்ந்தார். அதனால் நம்பிள்ளைக்கு லோகாசாரியர் என்னும் சிறபபுப் பெயர் வழங்குவதாயிற்று.

தமது குருவாகிய நம்பிள்ளையின் லோகாசாரியர் என்னும் பெயரையே, வடக்குத் திருவீதிப் பிள்ளைத் தம்முடைய புதல்வருக்கு வைத்து மகிழ்ந்தார். அதனால் முடும்பைக்குல திலகரான வடக்குத் திருவீதிப் பிள்ளையின் புதல்வருக்கு, பிள்ளை லோகசாரியர் என்னும் திருப்பெயர் அமைந்தது. இப்பிள்ளை லோகாசாரியர் இயற்றிய நூல்களுள் "சீர்வசனபூடணம்" என்னும் நூல், மிகவும் சிரப்பு வாய்ந்தது. அந்நூலின் சிறப்புக்கு இணையான மற்றொரு நூல் எதுவும் இல்லை.

### சீர்வசனபூடணம் :

தொல்லாசிரியர்கள் அருளிச் செய்த திருமொழிகளையே பெரும்பாலும் சேர்த்து, கல்வியிற் சிறந்த அறிஞர்களின் ஆன்மாவுக்கு அழகிய அணிகலனுகச் 'சீர்வசனபூடணம்' என்னும் நூலைப் பிள்ளைலோகாசாரியர் அருளிச் செய்தார். அவர் அருளிய சீர்வசன பூடணம் என்னும் நூலின் ஆழ்ந்த பொருள்கள் எல்லாவற்றையும், அறிய வல்லவர்கள் இல்லை. அதன் கண் பணிக்கப்பட்டவற்றைக் கடைப்பிடிக்க வல்லவர்களும் இல்லை. யாரோ ஓரிருவர்தாம் அந்நூலின் நுண்பொருள்களை அறியவும், அறிந்தவற்றைக் கடைப்பிடிக்கவும் இருத்தல் கூடும். அஃது எல்லோராலுமே அறியவும் கடைப்பிடிக்கவும் இடலாத அருப்பெரும் நூல் ஆகும்.

ஆர்வசன பூடணத்தின் ஆழ்பொருள்எல் லாம்அறிவார்?
ஆர் அதுசொல் நேரில் அநுட்டிப்பார்?—ஓர் ஒருவர்
உண்டாகில் அத்தனைகாண் உள்ளமே! எல்லார்க்கும்
அண்டாத தன்றோ அது?

ஆயினும், உய்ந்து ஈடேற வேண்டும் என்னும் விருப்பம உடையவர்கள், அந்நூலின் ஆழ்ந்த பொருள்களை ஒரு முகமாகப் பயின்றுணர்ந்து, அந்நூற்பொருளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் கடமையாகும். ஆசிரியர்பால் கேட்ட சிறந்த பொருள்களை மறவாமல் ஊன்றி மனத்தில் பதித்துக் கடைப்பிடிக்க வல்லவர்கள் இந்நூலைக் கற்றுணரப் பெரிதும் முயலுதல் வேண்டும். சீர்வசனபூடண நூலுக்கு, நலல மரபுநெறியில் பற்பல விரிவுரைகளும் விளக்கவுரைகளும் ஏற்படுதல் கூடும். அவற்றையும் அறிவுடையார் அனைவரும் பயின்றுணரக் கடமைப்பட்டவர் ஆவர். சீர்வசன பூடணத்தின் செப்பொருளைச் சிந்தையினுற் சிந்தித்தாலும், வாயினுல் எடுத்துப் பிறர்க்கு விளக்கிக் கூறினுலும், அஃது அப்பொழுதைக்கப் பொழுது ஆரா அமுதம் என மிகப் பெரிய ஆனந்தத்தை விளைவிக்கும். ஏனெனில், அதன்கண் அரிய பல அற்புதமான பொருள்கள் அழகுற விளக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

(1) தன்னுடைய குருவின் திருவடிகளில் அன்பில்லாதவர்கள், திருமகளின் கேள்வனை திருமாலின்பால் அன்பு செலுத்தினுலும், அவர்களுக்குத் திருமால் பரமபதம் கொடுக்க விரும்ப மாட்டான். ஆசாரிய பக்தியற்றவர்கள் ஒருபோதும் வைகுந்தம் போக மாட்டார்கள்.

தன்குருவின் தாளிணைகள் தன்னில்அன் பொன்றில்லாதார்,
அன் புதன்பால் செய்தாலும் அம்புயைகோன்,—இன்பமிகு
விண்ணுடு தான்அளிக்க வேண்டியிரான்; ஆதலால்
நண்ணுர் அவர்கள்திரு நாடு.

(2) ஞானம் அநுட்டானம் என்னும் இரண்டையும், குறையற நிரம்பப் பெற்ற குருவை அடைந்து பணிந்தால், திருமகள் கேள்வனுகிய திருமால் அவர்களுக்குத் தானகவே வைகுந்த நாட்டை வலிந்து வந்து கொடுப்பான்.

ஞானம் அநுட் டானமிவை நன்ருக வேயுடையன்
ஆன குருவை அடைந்தக்கால்—மாநிலத்தீர்
தேனர் கமலத் திருமாமகள் கொழுநன்
தானே வைகுந்தம் தரும்.

(3) உலகமக்களே! நீங்கள் உய்தி பெறவேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்குமாயின், நீங்கள் உங்கள் ஆசாரியர்களின் திருவடிகளிலேயே அன்பு

செலுத்துங்கள். அங்ஙனம் செலுத்தினால், பையரவில் பள்ளி கொள்ளும் பெருமாளின் பரமபதம், உங்களுக்கு உள்ளங்கையிலுள்ள நெல்லிக் கனி போல, மிகவும் எளிதாகக் கிடைக்கும்.

> உய்யநினை வுண்டாகில் உம்குருக்கள் தம்பதத்தே
> வையும் அன்பு தன்னை இந்த மாநிலத்தீர்!—மெய்யுரைக்கேன்!
> பையரவில் மாயன் பரமபதம் உங்களுக்காம்
> கை இலங்கு நெல்லிக் கனி.

(4) ஆசாரியர் செய்தருளுகின்ற பேருதவியை நாம் உள்ளவாறு எண்ணித் தெளிந்து கொள்வேமாயின், அவ்வாசாரியனைப் பிரிந்து வேறு ஓர் இடத்தில் உறைவதற்கு நம் மனம் விரும்பாது.

(5) தன் ஆசாரியனுக்குச் சீடனாகிய தான் தொண்டு புரியும் செயல், அவ்வாசாரியன் இவ்வுலகில் எழுந்தருளியிருக்கும் வரையிலேயே இயலும். அதனை அறிந்து வைத்தும், ஆசாரியனுக்குப் பணி விடை செய்வதன் இன்சுவையும் நற்பேறும் உணராதவர்களே, ஆசாரியனைப் பிரிந்து வேறெங்கேனும் இருப்பார்கள். அறிந்தவர்களோ, ஆசாரியனை ஒரு கணமும் பிரியாமல், அடிதாறும் நிழலும் போல ஆசாரியனைச் சிறிதும் பிரிவின்றி ஒன்றி உடனாகவே இருந்து இன்புறுவார்கள்.

(6) ஆசாரியன் சீடனின் ஆருயிரைப் பேணிக் காப்பாற்றக் கடமைப் பட்டவன்; சீடனோ ஆசாரியனின் திவ்விய மங்களத் திருமேனியைப் போற்றிப் பாதுகாக்கும் கடமையுள்ளவன். இதனைச் சீர்வசன பூடணம் முதலிய நூல்களின் மூலம் கேட்டறிந்து வைத்திருந்தும், அவ்வழியில் ஒழுகுதல் பெரும்பாலோர்க்கு அரியதாகவே இருக்கும்.

(7) பின்பழகிய பெருமாள் சீயர் என்பவர். பரமபத வாழ்க்கையிலும் விருப்பம் இன்றி, மிக்க பரம பக்தியோடு, தம்முடைய ஆசாரியரான நம்பிள்ளைக்கு அடிமைப் பணி விடைகள் செய்து மகிழ்ந்திருந்தார். அவரைப் போல நாம் ஒவ்வொருவரும் நம் ஆசாரியருக்குப் பணி விடைகள் செய்தொழுகக் கடமைப்பட்டுள்ளோம். பின்பழகிய பெருமாள் சீயரைப் போல, அவ்வளவு பெரிய நிலையில் ஆசாரியருக்குப் பணிவிடைகள் செய்ய தம்மால் இயலாமற் போயினும், அவரது ஆசாரிய பக்தியையும் பணி விடைத் திறங்களை, நாம் பல்கால் சிந்தித்துப் போற்றிப் பாராட்டி மகிழ்தலாவது செய்தல் வேண்டும். அதுவே நாம் உய்ந்து ஈடேறுதற்கு உற்ற துணையாக அமையும்.

(8) முற்காலத்தில் வாழ்ந்த ஆசாரியர்கள், அனைவரும் கடைப்பிடித்து ஒழுகிய ஆசார சீல அருமைப் பாடுகளை அறியாதவர்கள், அவைகளைத் தம் மனம்போனபடி பல வகையாகப் பேசிப் பிதற்றுவர். அவைகளைக் கேட்டு மனம் திரிந்து, நாம் வீணே கெட்டொழியாமல், நம்முடைய முன்னோர்களாகிய ஆசாரியர்களின் நல்லொழுக்கங்களையே கடைப்பிடித்து ஒழுக, நாம் பெரிதும் முயலுதல் வேண்டும்.

(9) உலகத்திலுள்ள மக்கள், நாத்திகர், ஆத்திகர், ஆத்திக நாத்திகர் என மூவகைப்படுவர். சாத்திரங்களைக் கல்லாமல்,தான் தோன்றியாக மனம் போன போக்கெல்லாம் திரிகின்றவன், நாத்திகன் எனப்படுவான். உயர்ந்த சாத்திரங்களை உள்ளவாறு கற்றுணர்ந்த, நன்னெறியில் நின்று ஒழுகும் நல்லவர்கள், ஆத்திகர்கள் எனப்படுவர். சாத்திரங்களை இசைந்து கற்றுத் தேர்ந்திருந்தும், அவற்றின் படி ஒழுகாமல் தன்னிச்சைப்படி தீநெறியிற் செல்பவன் ஆத்திகநாத்திகன் எனப்படுவான். இம்மூவரில் முன்னவனையும் பின்னவனையும் புறக்கணித்து விட்டு, இடைநிற்கும் நல்லவனாகிய ஆத்திகனையே, நாம் எப்போதும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

(10) நல்ல மணமுள்ள ஒரு பொருளைச் சேர்ந்திருக்கும் பொருளுக்கும்கூட, அந்த நல்ல மணம் சேர்க்கையினால் ஏற்படும். அது போல நல்ல குணமுடையவர்களைச் சேர்ந்தால், நமக்கும் அவர்களின் நல்ல குணங்கள் ஏற்பட்டு, அதனால் நாம் பல நன்மைகளை அடையலாம்.

(11) நாம் நல்ல குணமுள்ளவர்களே யாயினும்,தீய குணமுள்ளவர்களின் பால் சேர்ந்து ஒழுகினால், நம்மிடமுள்ள நல்ல குணங்கள் அழிந்து, தீயவர்களின் தீய குணமே நமக்கும் ஏற்பட்டு, அதனால் பல தீங்குகளை அடைந்து வருந்த நேரும்.

(12) ஒரு நூலின் பொருளை நம்மிலும் சிறந்த கல்வி கேள்வி அறிவுள்ள முன்னோர்கள்பால் முறைதப்பாமல் கேட்டுணர்ந்து, அதனை மேலும் சிந்தித்து ஆராய்ந்து தெளிந்து, அப்பொருளை உள்ளது உள்ளவாறே நாம் பிறருக்கு எடுத்துக்கூற வேண்டுவது நமது கடமை. இங்ஙனமின்றித் தமக்குத் தமக்குத் தோன்றியவாறெல் அந்நூற் பொருள்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் மனம் போனவாறு பிறருக்குச் சொல்லி, இது தான் முன்னோர்கள் கூறி வைத்த பொருள் என்று பொய்கூறி ஒழுகுபவர்கள், மிகவும் இழிந்த தீய மூர்க்கர்கள் ஆவார்கள். அத்தகைய மூர்க்கர்கள்பால் நாம் நெருங்குதலும் கூடாது.

(13) தொல்லாசிரியர்களுடைய ஞானம் நல்லொழுக்கம் முதலியவற்றை, எடுத்துரைத்துப் புகழ்ந்து விளக்குகின்ற அறிஞர் பெருமக்களின் திருமொழிகளால், தெளிவு பெற்று, நமக்கு நல்லறிவை நல்கக் கூடிய சிறந்த ஆசாரியனை அடைந்து, அவர் தம் அடி பணிந்து, அவர் திருவுள்ளம் உவக்கும்படி பணிவிடைகள் செய்து ஒழுகினால், இவ்வுலகில் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்னும் நிலையில், நாம் பெரிதும் இன்பமுற்று மகிழ்ந்து வாழலாம்.

முடிவுரை :

இத்தகைய சிறந்த பல பொருள்கள் செறிந்த உபதேச ரத்தினமாலை என்னும் இந்நூலை, நாள் தோறும் ஓதிச் சிந்தையிற் சிந்தித்து ஆழ்ந்து தெளிபவர்கள், நமக்கெல்லாம் எந்தையாகிய எதிராஜர் என்னும் எம்பெருமானார் (இராமாநுஜர்) திருவருளை நிறைவுறப் பெற்று, இவ்வுலகில் ஒரு குறைவுமின்றி இகபர சௌபாக்கியங்களை அடைந்து சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வில் வாழ்வார்கள்.

(முற்றும்)

—ஆசிரியர்.

> ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல்வாழி!
> தாழ்வாதும் இல்குரவர் தாம்வாழி!—ஏழ்பாரும்
> உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி!
> செய்யமறை தன்னுடனே சேர்ந்து
>
> —மணவாள மாமுனிகள். உபதேச ரத்தினமாலை

# இறைவனை அநுபவித்தல்

திரு. வித்துவான் சி. ஜெகந்நாதாசார்யர், *M.A.*

"மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற" என்றபடி, திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆறு திவ்வியப் பிரபந்தங்களுள் திருநெடுந்தாண்டகம் ஒன்ருகும். இஃது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாவது ஆயிரமான திருமொழியிற் சேர்ந்த பிரபந்தம். இது மொத்தம் முப்பது பாசுரங்கள் கொண்டது; மூன்று பத்தாகப் பிரித்து விவஹரிக்கப்படுவது வியாக்யாதாக்களால். அவற்றுள் மூன்ரும் பத்து-பெண்பிள்ளைப் பாசுரமாம்படியும், 'போதயந்த: பரஸ்பரம்' (ஒருவர்க்கொருவர் போதித்தல்) என்றபடியும், சரமசுலோகார்த்தம் சொன்னபடியும், மகா அர்த்தஞ் சொன்னபடியுமாயிருக்கும் என்று பட்டர் நிர்வகிப்பர். மற்றும், அம்மூன்ரும் பத்து பரகாலநாயகி கிலேசம் தீர்ந்து ஸம்ச்லேஷ (இறைவனேடு கூடிய) வியாபாரம் பண்ணினபடியைக் குறிக்கும். இந்த மூன்ரும் பத்தின் முதற் பாசுரமாகி–அதாவது, திருநெடுந்தாண்டகத்தின் 21-வது பாசுரமாக இலங்குவதுதான் "மைவண்ண நறுங்குஞ்சி" என்று தொடங்கும் நாயகமணி. இந்த நாயகமணியின் ஒளிதான் பட்டரருளிச் செய்த அதிவிஸ்தார வியாக்கியானம். இந்த ஒரு பாடலின் வியாக்யானம் மட்டும் தனியே எண்ணூறு கிரந்த அளவுள்ளது. அதனைக் கேட்டு ஸ்ரீபாஷ்யகாரருடைய பஞ்ச ஆசாரியரில் ஒருவரான திருவரங்கப்பெருமாளரையர் மிக வியப்படைந்து "முன்பு ஓர் ஆசாரியாரிடத்திலும் இப்படிப் பொருள் கேட்கப் பெற்றிலேம்; இப்போது இவரிடத்தே இது கேட்கப் பெற்ரேம்" என்று கொண்டாடிப் பட்டரை மிகவும் நன்கு மதிக்கலானுர். அத்தகைய சீர்மை பொருந்திய பாசுரத்திற்கு அடுத்த பாசுரம் (22-வது பாசுரம்)-ஈண்டு விவரிப்பதற்கு அடியேனுல் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்பாசுரம் பின்வருமாறு:

"நைவளமொன் ருராயா நம்மை நோக்கா
நாணினர் போல் இறையே நயங்கள் பின்னும்
செய்வளவில் என்மனமும் கண்ணும் ஓடி
எம்பெருமான் திருவடிக்கீ ழணைய இப்பால்
கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன்
கனமகரக் குழையிரண்டும் நான்கு தோளும்
எவ்வளவுண் டெம்பெருமான் கோயில் என்றேற்கு
இதுவன்றே எழிலாலி யென்ருர் தாமே'

இதன் பொழிப்புரை: அத்விதீயமாக (இணையில்லாதபடி) நைவளம் என்னும் பண்ணை ஆராய்ந்து பாடி, நம்மைப் பார்த்துக் கொஞ்சம் லஜ்ஜைப் பட்டவர்போல நின்று, பின்னும் நீச பாஷணங்களைச் செய்யும்போது, என் மனமும் என்னுடைய கண்ணும் ஓடி, எமக்குச் சுவாமியான சர்வேசுவரன் திருவடிகளிலே கிட்ட, அதன்பின் என் கையில் தரித்த வளையையும் அரையிற் கட்டிய ஆடையையும் போன இடம் அறிந்திலேன். அவற்றுக்குப் பதில் ஸ்திரமான இரண்டு மகர குண்டலங்களையும், நான்கு திருத்தோள்களையும் பார்த்தேன்; (அவரை நோக்கி) எமக்கு சுவாமியே! தேவரீர் எழுந்தருளியிருக்கும் கோயில் எவ்வளவு தூரமுண்டு என்று கேட்ட எனக்கு, அழகிய திருவாலி இதுவன்ரே என்று நானிருந்த இடத்தைத் தாமே சுட்டிக் காட்டியருளினுர் என்பது.

இதன் விவரணம்: அவதாரிகை: இயற்கைப் புணர்ச்சியில் தன்னைக் கூடிப் பிரித்த தலைவனின் பிரிவாற்ருது தலைவி வருந்துவது கண்ட அவளது உயிர்த் தோழி 'அவன் வந்தபடி என்? உன்னேடு கலந்தபடி என்? பின்பு பிரிகிறபோது உனக்கு ஆச்வாசமாகச் சொல்லிப்போன வார்த்தைதான் என்?' என்று கேட்க, அவளுக்குத் தலைவி பின்வருமாறு அறத்தொடு நின்ருள். "அவனுடைய அழகையும் சீலத்தையும் கண்டுவைத்து, கைப்பட்ட வஸ்துவைக் கடலிலே போகட்டாற்போலே அந்யதா ப்ரதிபத்தி (வேருென்றில் ஈடுபாடு) பண்ணி, 'ஆத்மானம் மாநுஷம் மந்யே' (என்னை மனிதனுக நினைக்கிறேன்) என்னும் அவன் நினைவை விட்டு, 'பவாந் நாராயணே தேவ (நீர் நாராயணப் பெருமான்) என்று வழிப்போக்கர் வார்த்தையைப்பற்றி, 'அவரை நாம் தேவரென்று அஞ்சினேம்' அத்தனைகாண்; அவன்படியையும் என்படியையும் அறியும் நீகூட இருந்திருந்தாயாகில் என் பிராந்தியைப் போக்கலாயிருக்கும்: உன் சந்நிதியும் இழந்தேனன்ரே" என்று அங்கலாய்க்க, அதனைக் கேட்ட தோழி, 'அது கிடக்கட்டும்; நீ அகன்ருயாகில் அவன் உன்னேடு ஸம்ச்லேஷித்தபடி (கூடியவாறு) என்?' என்று வினவ, அவன் வசீகரித்தபடியும் ஸம்ச்லேஷித்தபடியும் இதுகாண் என்று கூறுமுகத்தான் இப்பாசுரத்தில் தலைவி மீண்டும் தோழிக்கு அறத்தோடு நின்ருள்.

தோழி: வந்த தலைவன், தன்னுடைய அழகையும், சீலத்தையும் காட்டின இடத்திலும் கார்யகரமாகாமையாலே 'போய்விடுவோம்' என்று நினைத்தான். ஆனல் திருவடி பேர்ந்ததில்லை; ஏனெனில் உத்தமராஜ கன்னிகையின் பக்கலிலே உத்தமராஜ புத்திரன் சென்று, அழகு ஜீவிக்கையாகாதே மீண்டான் என்ருல் புறம்பு ஜீவிக்கையாகாதன்ரே? மற்றும், அவன் ருசியே தொடங்கிப் பிறரை வசீகரிக்கும் பரிகரமாகத் தான் நினைந்திருப்பது தன் அழகையன்ரே? அது பயனற்றதானுல் அபிமானம் கால்கட்டுமன்ரே? இனி, தோழீ! சக்தி கொண்டு கார்யங்கொள்ளலாகுமேயெனில், எதிர்த் தலையில் இசைவின்றிக்கே மேல் விழுந்தால் ரஸமில்லையன்றே: ஆதலின், 'இனி எவ்வகையால் இவளை வசீகரிப்போம்?' என்று ஆய்ந்து நின்று,

முன்பு திருவாய்ப்பாடியில் பெண்கள் தன் குழலோசையிலே வசீகரிக்கப்பட்டதைக் கண்டபடியாலே 'நம்முடைய மிடற்றோசையாலே (இனிய குரலாலே) இவளை வசீகரிப்போம்' என்று பார்த்து ஒரு பண்ணை நுணுங்கினான். அந்த நைவளத்தில் ஈடுபட்டு மேல் விழுந்து கலந்தேன், இதுகாண் செய்தபடி என்கிறாள்.

பாடற் பிரவேசம்: நைவளம் என்பது ஒரு பண். இது நட்டராகம்; நட்டபாடை என்றும் உரை கூறினர் நச்சினார்க்கினியர் சிந்தாமணியில். எனவே, இரண்டும் ஒரு பண்ணைக் காட்டும். 'நட்டபாஷையைக் குணயோகத்தாலே (குணத்தின் சேர்க்கையாலே) நைவளம் என்று பேரிடுகிறது' என்று அருளிச் செய்தனர் பெரியவாச்சான்பிள்ளையும். நட்டபாடையை இக்காலத்து நாட்டை என்ப. இது மிக்க மென்மையான ராகம் என்பதை 'நைவளமிகு சாயல் நங்கை' (சிந். 2435) என்ற திருத்தக்கதேவர் வாக்காலும், அவ்விடத்து 'நட்டபாடையிலும் மிக்க மெல்லிய மொழியினையுடைய' என்ற நச்சினார்க்கினியர் உரையாலும் தெளியலாம். மற்றும், 'நைவளம்நவிற்று மொழி' என்று சீதையைக் கம்பரும் குறித்துள்ளார். (பால. கோலங்காண்படலம். 34). இதனைப் பகற்பண்களுள் ஒன்று என்பர்; பண்ணுதலின் நிறை நரம்பிற்றுதல் வேண்டும். என்னை? 'நிறை நரம்பிற்றே பண்ணெனலாகும்' என்றது திவாகரம். திவாகரத்திலே இந்த நைவளம் 'குறிஞ்சி யாழ்த்திறனு'ஈப் பேசப்பட்டுள்ளது. சிறுபாணாற்றுப்படையில் 'நைவளம் பழுநிய நயந்தெரிபாலை' என்றும், குறிஞ்சிப்பாட்டில், 'நைவளம் பழுநியபாலை' என்றும் தொடர்கள் வந்திருத்தல், பாலை யாழ்க்குரிய பண்வகையினது எனக் காட்டும். யாதாயினுமாக, பெரியவாச்சான்பிள்ளை கூறியதுபோல் இந்த நைவளம்-கேட்டாரோடு சொன்னாரோடு வாசியற நைவிக்கும்படியான அழகையுடைத்தான பண்ணாகும் என்பது தேற்றம். 'நைவளம் ஒன்று என்றது-பிறரை வசீகரிக்க வற்றாயிருக்கையில் ஏனைய இசையினும் தன் தலைத்தூக்கும், இதற்கும் வசப்படாவிடின் தலைவனுக்கு வேறு கதியில்லாமையும் காட்டுதற்கு. கர்மஞானங்களால் ஸாத்யமல்லாததைப் பக்தியாலே ஸாதிக்கலாம்; பக்தியாலே ஸாத்யமல்லாததைப் பிரபத்தியாலே ஸாதிக்கலாம்; அதுவும் பலியாவிட்டால் வேறு கதியில்லைறே; (ஆகவே) சேஷபூதன் (அடிமையாகிய ஜீவன்) சேஷியை (ஆண்டானை பகவானை)ப் பெறுகைக்குச் சரமமான (இறுதியான) உபாயத்தைப் பற்றினாற்போல, ஈண்டுத் தலைவன்றானும் பரகால நாயகியாந் தலைவியைப் பெறுதற்குச் சரமோபாயத்தைக் கைக்கொண்டான்: சரமோபாயந்தான், பண்ணாயிற்று.

ஆராயா-அதனை ஆய்தலாவது-அதன் இலக்கணத்தின் வழுவாதிருப்ப, நெஞ்சும், மிடறும், நாக்கும் மூக்கும் அண்ணாக்கும் உதடும் பல்லும் தலையும் எனப் பெருந்தானம் எட்டினும்; எடுத்தல், படுத்தல், நலிதல், கம்மிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்குதல் எனக் கிரியைகள் எட்டாலும் பண்ணிப்படுத்தி நுணுங்கிப் பார்த்தல்.

ஆராயாநோக்கா-நுணுங்கினவன் நுணுங்கினவாறே நம்மை நோக்கினான்; என்னென்னில், 'பண்ணை நுணுங்கினவாறே நாம் அழிந்தோம், இனித் தப்பாது இவளழிகையும்' என்று முடிவு கட்டி என் முகத்தைப் பார்த்தான். முடிவு கட்டியதற்கு ஏது என்னென்னில், 'வயிர உருக்கானது அரக்கையுருகச் சொல்ல வேண்டுமோ'; பெண்ணின் வருத்தமறியாத பெருமானென்னும் விருது பெறும்படி முருடு ஏறிட்டிருந்த என் பும்ஸ்த்வத்தையே (ஆண் தன்மையையே) அழித்த இது, மின்குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி வீங்கிய வனமுலையாளாங் களங்கனி முறுவலிளங் கனியாம் இவளுடைய ஸ்திரீத்வத்தையழிக்கக் குறையில்லையேயென்ற அறுதியோடு என் முகத்தைப் பார்த்தான்.

நாணினார்போல் இறையே: பார்த்தவன் சிறிதே வெட்கப்பட்டவன்போலே நின்றான். அவன் என் முகத்தைப் பார்த்தபோது நான் உண்மையிலேயே அப்பண்ணால் உள்ளம் நெக்குருகிக் குழைந்து அழிந்திருந்தும் அவ்வழிவு புறத்துப் பொசிந்து காட்டிக் கொடுக்காதபடி யாதொரு விகாரப்பாடும் இல்லாதவள் போல முகத்திற் காட்டிக் கொண்டேன். அதனைக் கண்டு, 'அந்தோ: சரமோபாயத்தை அனுஷ்டித்தோம், காரியங் கைக்கொள்ள; அதுவும் பயனற்றதாயிற்றே' என்று லஜ்ஜையிலே யிழிந்தான். நாம் படவேண்டிய லஜ்ஜை இத்தலைக்கு அத்தலையாயிற்று. (எனக்குரிய லஜ்ஜையை அவன் பட்டான்). அதுவும் நேராக நாணினார்போல் மேல்பண்ணும் பிரவிருத்தி கூடாதாகலின், நாணினார்போலே பாவியா என்னை நேர்முகம் பார்க்கமாட்டாதே சோலையைப் பார்ப்பதும் பக்கத்துள்ளவைகளைப் பார்ப்பதுமாக ஆயினான். சுருங்கக் கூறின், தோழீ: 'அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் பாடியலற்றுவன், தழுவல் வினையால் பக்கம் நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன்' என்று பிரபந்நர் (சரணடைந்தோர்) தன்னைப் பெறுகைக்குப் பட்ட பாட்டையெல்லாம் ஈண்டு அவன் அபிமத (பிரியமான) விஷயத்தைக் குறித்துத் தான் பட்டான். பட்டும், பண்ணின பிரபத்தி விபரீத பலமானாலும் அத்தையொழியக் கதியற்றிருக்குமாபோலே தான் நுணுங்கின பண் பலித்ததில்லையென்று விடாதே பின்னையும் அதனையே நுணுங்கினான்.

பின்னும் நயங்கள் செய்வளவில்: நயங்கள் என்ற பண்மை-அப்பண்ணிலே வைத்து நுணுங்கின நீசபாஷணங்களுக்குத் தொகையில்லை யென்றபடி: "அறந்தருஞ் செல்வ மன்னீர் அமுதினுமினிய ரென்னைப் பிறந்திலனுக்க வந்தீர் பேரெழின் மானங் கொல்ல இறந்திறந் துய்கின்றேன் யான் யாரிது தெரியு. மீட்டார்", "மந்திரமில்லை வேரோர் மருந்தில்லை மையல் நோய்க்குச், சுந்தரக்குமுதச் செவ்வாயமுதலால் அமுதச் சொல்லீர்" என்று பொல்லா அரக்கன் அரற்றியதுபோல இவனும் பண்ணிலே ஏறிட்டுப் பாடத் தொடங்கி, "கோதாய்! பேதாய்! அடியேன் நின்னடி முடியேன்" என்றாற்போலே சில நுணுங்கிய அளவிலே.

என் மனமும் கண்ணும் ஓடி: என் விகாரப்பாட்டை யான் வெளிக்காட்டாதபடி எவ்வளவோ அடக்க முயன்றும் என்னால் அடக்கப் போயிற்றில்லை; கடலுடைந்தாற்போலே யுடையவே, முறை குலைந்து என்நெஞ்சு தனியே போயிற்று, என் கண்ணும் தனியே போயிற்று, ஒன்றையொன்று பின்பாராதே யோடிற்று, என்னையும் பாராதே யோடிற்று என்றாள். அதற்குத்தோழி; "அது

சரி; கண்ணால் கண்ட இடத்திலன்றோ நெஞ்சு செல்லுவது; அந்த முறை குலைந்து 'நெஞ்சு தனியே போயிற்று', 'மனம் தனியே போயிற்று' என்று கூறு கிறாயே, இஃது என்'' என்ன, ''உம்மை தனித்தனிக் கொடுத்துப் பேசியதை உணர்கிலேயே'' என்கிறாள். மற்றும் 'இருஷீகேசனை (இந்திரியங்களுக்கு ஈசனை)க் காணுமளவுமன்றோ இந்திரியங்களுக்கு இவனோடு சம்பந்தம்; கண்டபின், கர்ம நிபந்தனம் (கருமக் கட்டுப் பாடு) இல்லையாகவே தனித்தனி ஓடும் என்க. ஓடியவை புக்கவிடம் எங்கே என்னக் கூறுகிறாள்.

எம்பெருமான் திருவடிக் கீழணைய: நிருபாதிக ஸம்பந்தியானவன் பக்கலிலே போய்ப் புக்கது என்கி றாள். தன் மிடற்றோசையாலே என்னை அடிமையாக்கி எழுதிக் கொண்டவனாயினனாதலின், 'எம்பெருமான்' ஆயினன். அவன் 'திருவடிக்கீழ் அணைய' என்றதால், அவன் நினைத்த வளவன்றுகாண் நான் அழிந்தபடி' என் மருப்பிள வன முலையைத் தன் மார்பகத்து உழ நெருக்கி அணைத்துக்கொள்ளலாயிற்று அவன் நினைத் தது; ஆனால், நான் அணைத்ததோ அவன் காலை. அதனைத் தலையிலே வைத்துக் கொண்டேன். தாள் நயந்திருந்தபடி (திருவடியை விரும்பியபடி) இஃது!

இப்பால்: அதன்பின்பு; அவன் ஸம்ச்லேஷித்த (கூடிய) பின்பு, என்னை வந்து கிட்டுகைக்கு அவன் பண்ணின கிருஷிகளை (முயற்சிகளை) யெல்லாம் வாய் விட்டுச் சொன்னேன்; கலந்தபோது அவன் பண்ணின வியாபாரங்கள் ஒரு மகாபாரதத்துக்குப் போதும்: அவற்றை அடைவுபடப் பேசுகைக்குப் போதிய தெளிவு என்னிடம் இல்லாமையாலே பேச்சுக்கு நிலமன்று. ஆனால், ஸம்ச்லேஷித்த பலக்குதிரை (கூடியதன் பயனை) மட்டும் கேள்!

கைவளையும் மேகலையும் காணேன்: சாதாரணமாக விரஹத்திலன்றோ வளை கழலும், எனக்கோ கலவியின் ரஸத்தாலே கைவளை பூரித்து வெடித்துப் போயிற்று; அரையில் உடுத்த ஆடையும் மாறுடி, என் பரியட்ட மான பட்டும் கண்டிலேன்; என்னை? அவன் பரியட்டம் என் கையிலே யிருக்கக் கண்டேன்; இங்ஙனமொன்றுவ துண்டோ என்னில், கழிபெருமகிழ்ச்சி மேலீட்டால் தலைதடுமாற்றச்செயல் உண்டன்றோ? ''மைந்தரும் தையலாரும் வீங்கிய உவகைமேனி சிறக்கவும் மென் றுள்ளி, ஓங்கவுங் களிப்பாற் சோர்ந்த உடையிலா தாரை யொத்தார்'' என்றார் கம்பநாட்டாழ்வாரும். மேகலை-வஸ்திரம்; புடவை இரண்டும் புக்கவிட மறிந்தி லேன் என்றதால், ஸ்வாபதேசத்தில், (உள்ளுறை பொருளில்) அகங்கார மமகார நிருவிருத்தியை ('யான்' 'எனது' அற்ற நிலையை)ச் சொல்லிற்றாயிற்று; அகங் காரம்-வஸ்திரம் என்றும், மமகாரம்-வளை என்றும் கொள்க. 'நான் போக்தா' (அனுபவிப்பவன்) எங் கிருத்தலோ, 'எனக்குப் போக்யம்' (அனுபவிக்கும் பொருள்) எங்கிருத்தலோ செய்யுமது ஜீவான்மாவுக்கு ஸ்வரூப விருத்தமன்றோ? பரமான்மாவுக்குப் போக்யமா யிருக்கையே ஜீவான்மாவுக்கு ஸ்வரூபம். 'அஹமந்நம் அஹமந்நம் அஹமந்நம்' என்றதும் நினைக. இனி, 'காணேன்' என்கிறாளே, தன் கையிலணிந்த வளையும் தான் அரையிலுடுத்த மேகலையும் போனவிடந் தெரி யாத அவ்வளவு சுணைகேடளோ, அறிவு கேடளோ என் னில்-கலவிக்கு விரோதியாம் அவற்றைத் தானே கழித்துக்கொள்ளுதல் அல்லது அதனைப் பற்றி இவற்றைப் போக்கித் தரவேண்டுமென்று நயத்தல், இவ்விரண்டிலொன்றைச் செய்திருந்தாலும் விரோதி போயினமையை அவளால் அறியமுடியும்; அங்ஙனன் றிக்கே, தான் போகத்திலே வசமிழந்து அந்யபரையா யிருக்க (மறைந்திருக்க) அவன் போக்கப் போனவை யாகையாலே 'காணேன்' என்றது ரஸம். அது கேட்ட தோழி, 'த்ருஷ்டமாயிற்று, அத்ருஷ்டம் த்ருஷ்டமாக வில்லையோ'' (கண்டது காணுததாயிற்று, காணுதது கண்டதாகவில்லையோ) என்னக் கூறுகிறாள்.

கண்டேன் கனமாரக் குழையிரண்டும் நான்கு தோளும்: விரோதி கழிந்து போக்யதையும் (அநுபவ இனிமையும்) குறைவற்றிருக்கவே அணைத்தபோது உறுத்தின திருமகரக் குழைகளையும் அணைத்த திருத் தோள்களையும் கண்டேன் என்கிறாள். தன்னோடு கலந்தவன் 'எய்வண்ண வெஞ்சிலையே துணையாவந்த' சக்கரவர்த்தித் திருமகனாயிருக்க. 'நான்கு தோள்' என்றது என்னையெனில்: தன்னைத் தழுவுகையாலே தோள்கள் பணைத்தபடியைக் குறிக்க. இனி, இவளிடம் அகப்பட்ட பின்பு நான்கு தோளுமாய தன் உண்மை ஸ்வரூபத்தை வெளியிட்டபடியுமாம். மற்றும், தோள் களைக் கொண்டு காரியங் கொள்ளுமிடத்து அவற்றை மறைக்க எண்ணுதன்றோ? இஃது இங்ஙனாக, தோழி! மேலுங் கேள். நான் வளியிடை போழப்படாஅ முயக்கை லபிக்கைக்கு எண்ணியமையாலும், அணித் தாகில் தோள் தழுவிச் சிறிது போய்வருவோம் என்னும் நப்பாசையாலும், 'பருகிக் களித்தேன்' (திருவாய்மொழி-2-3-9) என்ற அநந்தரம் (பின்) 'அடியார்குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ' (திருவாய்மொழி. 2. 3. 10) என்று பராங்குசநாயகி (நம்மாழ்வார்) பாரித்தார்போல, இவனது கலவி பெற்றுவைத்தும், இவனுடைய வேண்டற்பாட்டைக் கண்டு இவனுக்குத் தகுதியான பரிஜனங்களோடே இவனை அநுபவித்தல் வேண்டும் என்ற அபேட்சை அங்குரித்தமையாலும் (முளைத்தமையாலும்), அவரை நோக்கி 'உம்முடைய வாழ்விடம் இங்குத்தைக்கு எவ்வளவு தூரம் போகும்?' என்ற கருத்துப்பட.

எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில் என்றேன்: 'என்றேற்கு' என்பதன் நயம்-இவ்வினா என்னைக் கெடுக்குமாறு அறிகிலேன்; நானேயன்றோ பிரிவைப் பிரஸங்கித்தேனாயிற்று. வினவாதிருப்பின், இன்னமும் சிறிது நேரம் தழுவி முழுசி அநுபவிக்கலாமா யிருக்குமே! அந்தோ! கெடுத்தேன் பாவியேன். இவ் வினாவிற்கு விடையாக அவர்:

இதுவன்றோ எழிலாலி என்றார்தாமே: கூடியிருக்கும் திருமணங் கொல்லைக்கும் தாமிருக்கும் திருவாலிக்கும் உள்ள இடைவெளி அங்குலி நிர்த்தேசம் பண்ணலா யிருக்கையாலே 'இதுவன்றோ' என அண்மைச் சுட்டினால் கையைக் காட்டினன். அன்றியும், நீயிருந்த இடமன்றோ நமக்கும் இடமாவது என்றதாகவுமாம். சேஷியிருந்த இடமன்றோ சேஷபூதனுக்கும் உத்தேச்ய மாவது! அது சரி; இவள் அவனிருந்த ஊரைக்கேட் டால், நம்மூர் இன்னது என்று சொல்லாதே நீ இருந்த

விடம் என்பானேன் என்னில், ‘பிள்ளை வேட்டகத்தை ஆசைப்படும், பெண்பிள்ளை புக்ககத்தை யாசைப்படு மன்றோ’? இது லோகாசாரம்.

இனி, போகரச அநுபவ உச்சத்திலே கைவளையும் மேகலையும் காணாமற் போகவே, ஸாத்மிப்பித்து அநுபவிக்கவேண்டுமென்று பார்த்து “நாம் அகம்புக்கு வாராநின்றோம்” என்று பிரிவைப் பிரஸங்கிப்பதற்காக ‘எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில்’ என்று கேட்டேன் என்றபடியுமாம். அதற்கு அவர் ‘எழிலாலி இதுவன்றோ’ என்று தாமே என் காலைக் காட்டிப் போனார். உன் காலே யன்றோ நமக்கு உத்தேச்யம் என்ற கருத்தினர் போலும். இங்ஙனம், தோழீ! வருவாருந் தாமே அநுபவிப்பாருந் தாமேயாய் விட்டது! இப்படியும் நேர்படுவதே! என்று தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றாள்.



புதுக்கோட்டைத் திருக்கோயில்களைச் சார்ந்த ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் நிகழ்ந்த சம்ப்ரோட்சண விழவில், அறநிலைய ஆணையார் திரு எம். கே. பால சுப்பிரமணியம், I. A. S. அவர்களும், ஸ்ரீ அண்ணா சுப்பிரமணியம், ஸ்ரீ சுவாமி சுகானந்தா, மற்றும் பல பெருமக்களும் கலந்து கொள்ளுதல் (31-1-77),

# தட்சிணமூர்த்தி

திரு. டாக்டர் டி. எம். பி. மகாதேவன், M.A.Ph.D.

ஆதிசங்கரர் பல தோத்திரங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் ' தட்சிணமூர்த்தி தோத்திரம் ' தென்முகக் கடவுளைப் போற்றுதல் மூலமாக அத்வைத உண்மை களைப் போதிக்கும் ஓர் அரிய நூல். பரம்பொருள் தட்சிணமூர்த்தி வடிவத்தில் ஆலின்கீழ் அமர்ந்து மௌனமாய் சின் முத்திரையைக் காட்டி சனகர் முதலிய முனிவரர்க்கு உபதேசம் செய்கின்றது. ' எல்லாம் தன்மயம் ' என்ற பேருண்மையைத் தென்முக மூர்த்தி போதிக்கும் அற்புதத்தை வியந்து, அதே மூர்த்தியின் அவதாரமாகிய சங்கரர் இத்துதியில் போற்றிப் பாடுகிறார். " ப்ரத்ய பிக்ஞா தரிசனம் " என்ற காச்மீர சைவத்தின் பரிபாஷைக்கு உரிய சில சிறப்பு மிக்க சொற்களையும், அந்த தரிசனத்தின் சில கருத்துக்களையும் இத்தோத்திரத்தில் காணலாம். ஆனால் இங்கு உபதேசிக்கப்படுவது சுத்தமான அத்வைதம். பத்து சுலோகங்கள் கொண்ட இத் தோத்திரத்தின் மூன்றும் சுலோகத்தின் பொருள் பற்றிச் சிறிது சிந்திப்போம் :

" யஸ்யைவ ஸ்புரணம்ஸதாத்மகமஸ த்<br>
கல்பார்த்தகம் பாஸதே<br>
ஸாக்ஷாத்தத் த்வமஸீதி வேதவசஸா<br>
யோ போதத்யா ஸ்ரிதான்<br>
யத்ஸாக்ஷாத்கரணாத் பவேந்ந<br>
புநராவ்ருத்திர் பவாம்போநிதௌ<br>
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம<br>
இதம் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே "

இந்த சுலோகத்திற்கு பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் அருளிய தமிழாக்கம் :

" எவனொளி யுண்மை யின்மை<br>
யியை பொருளிலங்கு நேரே<br>
யெவனது நீயா னுயென்றி சைத்து<br>
ணர்த்துவன் சேர்ந்தோரை<br>
யெவனை நேர் காணின் மீண்டு<br>
மிப்பவக் கடல்வீழ் வில்லை<br>
தவருறு குருவாம் அந்த<br>
தக்ஷிணமூர்த்தி போற்றி "

எவனது உண்மையாயுள்ள பிரகாசம் பொய்யாய்த் தோற்றும் பொருள்களில் விளங்குகின்றதோ, எவன் தன்னை யாசிரயித்தவர்களுக்கு " தத் த்வம் அஸி " என்ற வேதவாக்கால் தத்துவபோதம் புரிகின்றானோ, எவனைப் பிரத்யட்சமாகக் கண்ட பிறகு மறுபடியும் சம்சார சாகரத்தில் விழுவதில்லையோ, தவத்தினரடையும் அந்தக் குரு தட்சிணமூர்த்திக்கு நமஸ்காரம்.

உள்ள பொருள் ஒன்றே ; அது ஆத்மா. பிரபஞ்சம் எனப்படுவது ஆத்மாவின் தோற்றம் ; எவ்வாறு பாம்பு கயிற்றின் தோற்றமோ அதுபோல. பிரபஞ்சத்தில் அடங்கிய பல்வேறு பொருள்கள் உண்மையிலே உள்ளதாகவும் விளங்குவதாகவும் நாம் எண்ணுகிறோம். ஆனால், உண்மையும் விளக்கமும் ஆத்மாவினதே அல்லாமல் பிரபஞ்சப் பொருள்களினுடையவை அல்ல. அதாவது, ஆத்மாவின் உண்மைக்கும் விளக்கத்துக்கும் வேறாக, பொருள்களுக்கு உண்மையோ விளக்கமோ கிடையாது. எவ்வாறு அலை. குமிழி முதலியவை நீரினும் வேறானவை அல்லவோ, அதுபோல ஆகாசம் முதலிய பொருள்கள் ஆத்மாவைவிட வேறு அல்ல. அவற்றின் பிரகாசம் ஆத்ம பிரகாசத்தின் பிரதிபலனமே. காரியம் காரணத்திற்கு வேறாக இருப்பதில்லை. எப்படிக் குடம் முதலிய காரியங்கள் மண் முதலியவற்றினும் வேறு அல்லவோ, அப்படி ஆகாசம் முதலிய பொருள்கள் ஆத்மப் பிரகாசத்தினின்றும் வேறானவையல்ல.

இவ்வுண்மை ஏன் நமக்குப் புலப்படுவதில்லை ? ஏன் நாம் பிரபஞ்சத்தை உண்மை என்று மதிக்கின்றோம் ? அஞ்ஞானம் ஞானத்தை மறைக்கின்றது. ஆகையால் உண்மையை நாம் உணர்வதில்லை. உண்மைக்கு மாறாக, பார்க்கப்படும் பொருள்கள் உண்மையென்றும், நாம் ஒவ்வொருவரும் தனித்தனி உயிர்கள் என்றும் பிரமிக்கின்றோம். வேற்றுமை வியவகாரங்கட்கெல்லாம் அஞ்ஞானமே மூலகாரணம். ஆகாசத்தைக் கூறுபோடுவது இயலாது ; ஆயினும், எவ்வாறு குடம் என்ற உபாதியைக் கொண்டு, குடத்திற்குள் இருக்கும் ஆகாசம் வேறு, வெளியில் உள்ள ஆகாசம் வேறு என்ற பாகுபாட்டைத் தவறாகச் செய்கின்றோமோ, அதுபோலவே தேகம் என்ற உபாதியை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஜீவ—ஈசுவர பேதத்தைக் கற்பிக்கின்றோம். பேத புத்தியை நீக்க அஞ்ஞானம் விலகவேண்டும்; அஞ்ஞானத்தை அழிக்க ஈசுவரனே குருவாக வந்து ஞானத்தை அருளுகின்றான். " தத் த்வம் அஸி " என்ற உபதேசத்தைச் செய்கின்றான். " அவனே இவன் " என்னும்போது எவ்வாறு தேச கால வேறுபாடுகளை விலக்கிவிட்டு ஒரே மனிதன் என்று உணரப்படுகின்றானோ, அதே போன்று, " நீ அதுவாய் இருக்கின்றாய் " என்று குரு போதிக்கும்போது உபாதிகளை நீக்கி ஆத்மா இரண்டற்றது என்று உணர்கின்றோம். இங்கு இது விசாரிக்கத் தக்கது. " அது " (தத்) என்ற சொல் ஈசுவரனைக்

குறித்தும். ஈசுவரன் நமக்குப் பிரத்தியட்சமாகத் தெரியாத பொருள்; பிரபஞ்சத்திற்கு மூலகாரணம்; பேரறிவு, பேராற்றல் முதலிய குணங்களோடு கூடிய கடவுள். "நீ" (த்வம்) என்ற சொல் ஜீவனைக் குறிக்கும். ஜீவன் என்பது தேகம் என்ற உபாதியுடன் கூடிய உயிர்; சிற்றறிவு முதலிய குணங்கள் படைத்தது. அவரவர்க்குப் பிரத்தியட்சமாய்த் தெரிவது. ஈசுவரனும் ஜீவனும் எவ்வாறு ஒன்ருக இருக்க முடியும்? "அது—நீ" என்ற மகா வாக்கியத்திற்குப் பொருள் லக்ஷணையினல் அறிய வேண்டும். இரண்டு சொற்களில் ஒவ்வொன்றின் நேர்பொருளில் சேர்ந்துள்ள உபாதிகளை விலக்கிவிட்டு, பொதுவாகவுள்ள "சைதன்யம்" (அறிவு) என்றதை மாத்திரம் எடுத்துக்கொண்டால் உண்மை விளங்கும். மகாவாக்கியத்தின், பொருள் விளக்கம் தரும் லக்ஷணைக்கு "விட்டு விடாத லக்ஷணை" என்று பெயர். அதாவது முரணுன உபாதிகளை விட்டுவிட்டு, பொதுவான "சைதன்யம் என்ற பொருளை எடுத்துக்கொள்வது. சுருதி "ஆத்மை கத்வம்" (ஆத்மா ஒன்றே) என்ற பேருண்மையை மகாவாக்கியங்கள் மூலம் போதிக்கின்றது. இதற்கு அநுகூலமான யுத்திகளையும் அது கொடுக்கின்றது. விசாரித்துத் தெளிவுறும்போது இவ்வுண்மையை நாம் நம்முடைய அனுபவமாகவும் காண்கின்றோம்.

தூல தேகம் முதலிய பஞ்சகோசங்களுக்கு ஆத்மா லக்ஷணமானது. ஆனல், அஞ்ஞானத்தால் ஆத்மாவைத் தேகாதிகளோடு ஒன்றுபடுத்தி, அதற்குப் பிறப்பு, இறப்பு, பேதம் முதலியவை இருப்பதாக நினைக்கின்ளேம். குருவருளால் ஞானம்பெற்று அஞ்ஞானம் அழியும்போது. அத்விதீய அனுபவத்தை அடைகிறோம். இவ்வநுபவம் கிடைத்தபிறகு ஜனன—மரணப் பிரவாகத்தில் சிக்கிக்கொண்டு தவிப்பது கிடையாது; சம்சாரம் இல்லாததாகின்றது; எப்பொழுதுமே உள்ள கைவல்யம் கிட்டுகின்றது. இந்த நித்திய சித்தமான அநுபவத்தை உணர்த்துகின்றது தட்சிணுமூர்த்தி தத்துவம்.

---

158627
600 008.


## தட்சிணுமூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய், மறைக்கப் பாலாய்,
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து, பவத் தொடக்கை வெல்வாம்!

—திருவிளையாடற்புராணம்.

செம்மலர் நோன் தாள்சேர ஒட்டாமல்
உயிரை எலாம் தியக்கம் செய்யும்
அம்மலங்கள் கழீஇ' மிகுநல் அன்பரொடு
மருவிநீர் அடையும் முத்தி
இம்முறையாம் எனநால்வர்க் கிருவிரற்சின்
முத்திரையால், இயம்பி ஆற்கீழ்
மன்மதன் மேல் நுதற்கண் நிறீஇ வீற்றிருந்த
குருபரனை வணக்கம் செய்வாம்.

—திருவாவடுதுறைப் புராணம்.




இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் பிர்லா மண்டபக் கால்கோள் விழாவில், ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள், ஆணையர் உயர்திரு எம். கே. பால சுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ். உயர்திரு. எஸ். இராமநாத சேதுபதி ஆகியோர்.



மேற்படி விழாவில் ஆணையர் உயர்திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ். அவர்கள் உரை நிகழ்த்துதல். (16-2-77)


பதிவு எண். எம். 7039





COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
25 ஏப் 1977
EGMORE, MADRAS-8.

இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், அருள்மிகு பர்வத வர்த்தினி அம்பாள் சந்நிதி பிர்லா மண்டபக் கால்கோள் விழாவில், காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள், ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ். அவர்கள் முன்னிலையில் அருளாசி வழங்குதல் (16-2-77).



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை - 600 034
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்,
அச்சிடுவோர் : பேராவைப் பதிப்பகம் (பி) லிட். சென்னை - 600 018.